# பேரறிஞர் அண்ணா





இன்ப ஒளி

XA 8214

# இன்ப ஒளி

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம். ஏ.,

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 5-90

37824

பூம்புகார் வெளியீடு எண்: 160
முதற் பதிப்பு: செப்டம்பர், 1980
உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை–600001.

## பதிப்புரை

**நா**டகம் என்பது ஒரு நாட்டின் கலையை, கலாச்சாரப் பண்பை, நாகரிக வளர்ச்சியைப் பிற நாட்டினருக்கு எடுத்துக் காட்டும் அளவுகோலாகும்.

அதுபோலவே...

நாடகம் எனப்படுவது ஒரு நாட்டில் அல்லது சமூகக் கோட்பாட்டில் இருக்கும், 'நல்லது—கெட்டது' ஆகியவற்றை விளக்கிக் காட்டுவது மட்டுமல்ல, அதற்கான பரிகாரத்தைத் தேடித் தருவதுமாகும்.

இது கலை. இந்தக் கலைக்கு, நமக்கு முன்னே வாழ்ந்த மூத்தவர்கள், 'கூத்து' என்று முடிசூட்டி முத்தமிழ் நாட்டை வலம்வரச் செய்தனர். அத்தகைய 'கூத்து' என்னும் துறையை பின்பற்றிய பின்வந்தோர், அதன் மூலமாக இனவுணர்ச்சி மங்கவும், இதிகாச புராணங்கள் தலைதூக்கவும், சுயபுத்தி சிதறவும் பெரிதும் பயன்படுத்தி வந்தனர்; அதிலே வெற்றியும் கண்டனர்.

ஆம்; மனித மனத்தைக் கவரும் சக்தி எதற்கு உண்டோ, அது கலையாகும். அந்தக் கலைக்குள் புகுத்தப்படும் கருத்து எதுவானாலும் அது மனித மனத்துக்குள் இலகுவாகப் புகுந்து, அந்தக் கருத்துக்கேற்ப நடக்கச் செய்துவிடும்.

அப்படிப்பட்ட வில்லங்கமான—விபரீதக் கருத்துக்கள் கொண்ட—காட்சி நிறைந்த கூத்தினை நடத்தி, தன்மானத் தோடு வாழ்ந்த தமிழனைத் தரைமட்டமாக்கி, வைரம் பாய்ந்த நெஞ்சை தைரியமில்லாததாக்கி, எதற்கும், 'ஏன்' என்று கேட்டு வாழ்ந்தவனை, அப்படிக் கேட்பது 'வீண்' என்று நினைக்கும்படியாகச் செய்த ஒரு காலத்தில் நாம் இல்லை.

அவ்விதம் செய்யப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு கட்டத்தில்தான் மாயக்கலையில் வல்ல மன்னன் – நமது அண் ணன், அதே நாடகக் கலையின் வாயிலாகத் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை உயர்த்தும் பணியை மேற்கொண்டார்.

எந்த ஒரு நாடகக் கலையின் மூலமாக நாட்டு மக்களின் சொல்—செயல் இரண்டையும் மாறுபடச் செய்தார்களோ, அதே கலையின் வாயிலாக இதே தாயகத்தை—தமிழகத்தை மீண்டும் விழிக்க வைக்க 'நாடகம்' சமைக்கத் துவங்கினார்.

இன்றளவும் உலக அரங்கில் போற்றப்பட்டு வருகின்ற ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா போன்ற நாடக மேதைகளின் நாடகங்களில் எல்லாம் மனத்தைத் திருத்திப் பக்குவப்படுத் தும் துளிகளையே பரவலாகக் காண முடியும். ஆனால் அறி வுலக மேதை அண்ணா அவர்கள் தீட்டிய ஒவ்வொரு நாடக மும் மனித உள்ளங்களைத் திறக்கும் திறவுகோலாகும்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று போன்ற பல்வேறு துறைகளில் மக்களுக்குப் 'பற்று' வரும்படியாக நாடகத் துறையில் மறுமலர்ச்சியும், மக்கள் மனத்தில் புத் துணர்ச்சியும், பொதுவாகத் தமிழரங்கில் விழிப்புணர்ச்சியும்

ஏற்படச் செய்த ஏந்தல் டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களே யாவார்.

விழலுக்கு இறைக்கப்பட்ட நீரை வயலுக்குத் திருப்பி, மக்கள் வாழ்வுக்கு முதல் ஜீவனாக விளங்கியவர்.

நாடக இலக்கணப்படி யுக்திகளை மேற்கொண்டு, காட்சிக்குக் காட்சி நாடகத்தில் மட்டுமல்ல, நாட்டிலும் நல்ல திருப்பம் ஏற்பட வைத்த நாயகர் அவர்.

மொழி நமக்கு விழி என்றால், அவ்விழிக்குள் இருக்கும் ஒளி நாடகம்!

மக்களை வழிநடத்திச் செல்லும் மகத்தான சாதனம் இது.

இந்தச் சாதனத்தின் மூலம் தமிழகத்தின் ஜாதகத்தை மாற்றி அமைத்தவர் அமரர் அண்ணா. அவர்கள் சிருஷ்டித்த ஓரங்க நாடகங்கள் ஓராயிரம்; முழுமை நாடகம் ஒவ்வொன்றும் விலையில்லா மாணிக்கம்; இருளை அகற்றும் கைவிளக்கு. வருங்காலச் சந்ததிகள் கட்டாயம் நெஞ்சில் நிறுத்த வேண்டிய இமாலயச் சிகரம்!

ஆம்!

நாட்டுக்கென்று அவர் படைத்த அத்தனை நாடகங்களையும், கதை, கட்டுரைகளையும் புத்தக வடிவில் கொண்டு வர—உங்கள் கரங்களில், கண்களில் தவழவிட எங்களுக்கு

முழு உரிமை வழங்கி இருக்கும் திருமதி. இராணிஅண்ணா துரை அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றி.

இதோ, அமரர் அண்ணா அவர்கள் சிருஷ்டித்த சரித்திரப் புரட்சி நாடகம்.

இது கைவிளக்கு மட்டுமல்ல; கலங்கரை விளக்கும்கூட!

படியுங்கள்; பயனடையுங்கள்!

**—பூம்புகார் பிரசுரத்தார்.**

# இன்ப ஒளி

கதையுள் புகுமுன்:

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்தக் கதையைப் படிக்குமுன் ஒரு வார்த்தை. பல்லாண்டுகளுக்கு முன்பு ''விஞ்ஞானி'' என்ற தலைப்பில் 'திரைப்படமாக' வெளிவர இருந்தது இந்தக் கதை.

அறிஞர் அண்ணா அவர்கள், இந்தக் கதையை குறிப்புக்களாகவும், சில இடங்களில் உரையாடல்களாகவும், சில இடங்களில் நிகழ்ச்சிச் சித்திரமாகவும், முழுக் கதையையும் எழுதி இருக்கிறார்கள்.

என்றாலும் கடந்த 1968—ஆம் ஆண்டு ''காஞ்சி'' பொங்கல் மலரில் இதனைத் தொடர் கதையாக எழுதத் தொடங்கியபோது, நாடக வடிவத்திலிருந்து, உரைநடை வடிவாக்கி, கதையில் சில புதிய திருப்பங்களையும் புகுத்தி, மூலப் பிரதியிலிருந்து மாறுபாடு பெறும் தன்மையில் சில சிறிய மாற்றங்களைச் செய்திருந்தார்கள்.

கதை வடிவத்தையும் நிகழ்ச்சிக் குறிப்பு வடிவத்தையும் உரையாடல் வடிவத்தையும், ஒன்றாயிணைக்கும்போது ஏற்பட்ட முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன்தான் 1968 பொங்கல் மலரில் தொடங்கிய உரைநடைமுறையினை மூலப் பிரதிக்கு ஒத்தவடிவத்திலே, நாடக முறையிலே மாற்றி இருக்கிறோம். அந்த முறையிலேயே இப்போது நீங்கள் 'இன்ப ஒளி'யைக் காணப் போகிறீர்கள்!

காட்சி—1

திருநாட்டின்மீது போர்த்தொடுத்த வெண்ணாட்டை, வெற்றி கண்ட மகிழ்ச்சிச் செய்தியுடன் திருநாட்டுப் பாது காவலன் விக்கிரமன், பத்து வயதே நிரம்பிய மன்னன் குமார வேலன் அமர்ந்திருக்கும் அவைக்குள் நுழைகிறான், கெம்பீர மாக. வெற்றிச் செய்தியை விண் எட்ட முழக்கி, விழாவெடுத் துக் கொண்டிருக்கும் திருநாட்டு மக்கள் திரள்கிறார்கள் அங்கு. வெற்றி வீரர்களுக்கு வீரப்பதக்கங்களும், சிறப்புப் பட்டயங்களும் முன்னேற்பாடாக ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. விக்ரமன் அவைக்குள் நுழைகிறான். வாழ்த் தொலிகள் வான் எட்டுகின்றன.

''வளமார் திருநாடு வாழ்க, வாழ்க!''

''வெண்ணாட்டை வெற்றி கண்ட வேந்தர் வாழ்க!''

''புல்லர்களைப் புறங்கண்ட புனிதர் வாழ்க!''

விக்ரமன்: (வந்துகொண்டே) வாழ்க திருநாடு! வாழ்க மன்னர்!

[குமாரவேலனின் அகமும் முகமும் மலர்கின்றன. முரசொலித்து ஓய்கிறது. சில வீரர்கள் ஒரு பெரும் பேழையைத் தூக்கிக்கொண்டு வந்து மன்னன் குமாரவேலன் முன் வைத்துவிட்டு நிற் கின்றனர். திருநாட்டுக்கும், மன்னன் குமார வேலனுக்குமே பாதுகாவலனான விக்ரமன் பேழை யைத் திறந்து, அதனுள்ளிருந்த ஒரு வீரவாளை எடுத்து மன்னனின் காலடியில் வைத்துவிட்டு...]

விக்ரமன்: அரசே! இதோ வெண்ணாட்டு வேந்தனின் வீரவாள், வெற்றி கண்ட தங்கள் தாளின் கீழ்!

[என்றதும் அவையில் இருந்த அனைவரும் மீண்டும் ''வாழ்க மன்னர்!'' ''வாழ்க திருநாடு!'' என்று முழங்கி ஓய்கின்றனர். அவை அடக்கமுற்றதும் குமாரவேலன் எழுந்து நிற்கிறான். அவையின ரும் எழுந்து நிற்கின்றனர்.]

குமாரவேலன்: வாழ்க பாதுகாவலர்! வாழ்க விக்ரமப் பூபதி!

[அவையும் அதை யொட்டி வாழ்த்துரைக்கிறது. குமாரவேலன் அமர்கிறான். அவையினரும் அமர்கின்றனர். விக்ரமன் மிகுந்த அடக்கத்துடன் அரசனையும், அவையினரையும் வணங்கிவிட்டு..]

விக்ர: வெற்றி பெற்றுவிட்டோம் வேந்தே! வெற்றி பெற்றோம். வீரத்தைப் பழித்து விளையாட வந்த வீணரை வென்றோம், உங்கள் ஆசியால்-உள்ளன்புடன் விடை தந்து வீரர்களை போர்முகத்துக்கு அனுப்பிய மக்களின் திருவருளால்! தோற்றோடிப் போனான், தொல்லைதர வந்தவன்! கட்டளையை நிறைவேற்றிவிட்டேன் காவலா! காதகர்கள் காடாக்கப் பார்த்தனர் நம் தாயகத்தை. கண்டனர் வீரர்கள்; கொண்டனர் விழிச்சிவப்பு. கண்டீரோ மன்னா, காலடியில் அந்தப் பேடியரின் வீரவாள்! நம் நாட்டை எதிர்த்திடத் துணிந்த தீயோனின் கொடுவாள்!

[வாளை எடுத்து மன்னன் கரத்தில் தரச்செல்கிறான். குமாரவேலன் தடுத்து...]

குமார: விக்ரமரே! வீர வெற்றியை விழாவெடுக்கிறதே திருநாடு! மகிழ்ச்சிக்குரிய இந்த வேளையில், அந்த மதோன் மத்தனின் வாளை, கோட்டை வாயிலில் கொலுவில் வையுங்கள்! கண்டவர்கள் காரி உமிழட்டும் இதன்மேல்! நாளைக்கு நம்மை எதிர்க்கத் துணிவோர்க்கும் எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கட்டும் இந்த வாள்!

[மன்றத்தினர் இது கேட்டு மகிழ்ச்சி ஆரவாரம் புரிகின்றனர். பிறகு வேந்தன்...]

நன்றி! பாதுகாவலரே நன்றி. நாடு தங்கட்குக் கடமைப் பட்டிருக்கிறது. நாட்டைமீட்டுத் தந்ததற்காக! எந்தையின் புகழுக்கு ஏதும் களங்கமின்றி பெருமை சேர்த்தீர்! பெருமை அடைகிறேன். வீரர்கள் அனைவருக்கும் என் நன்றி.

விக்ர: தாயகத்தின் தன்மானம் காத்த மாவீரர் சில ருக்கு மன்னா, தங்கள் திருக்கரத்தால் வீரப் பதக்கங்களைத் தரக் கோருகிறேன்.

குமார: மகிழ்ச்சி பாதுகாவலரே!

[பணியாள் ஒருவன் ஒரு ஓலைச் சுருளைப் பிரித்துப் படிக்கிறான். ஒவ்வொரு பெயராகப் படிக்கும்போது, பல்வேறு வயது வேறுபட்ட வீரர்கள் மன்னன்முன் வந்து மண்டியிட்டு வணங்கி, பதக்கங்களைப் பெற்றுச்செல்கின்றனர். கடைசியாக குணாளன் என்ற பெயர் படிக்கப் படுகிறது. கட்டிளம்காளை ஒருவன், கம்பீர நடை நடந்து, அனைவரையும் புன்னகையால் மகிழ்வித்தவண்ணம் வந்து நின்று, மன்னனை முதலிலும், பாதுகாவலனை அடுத்தும், அவை யினரை அப்புறமும் வணங்கி நிற்கிறான். அரசன் குணாளனுக்கும் ஒரு பதக்கம் தருகிறார். அந்தச் சமயத்தில் அவையினர் மீண்டும் கரவொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.]

விக்ர: மன்னா! வெற்றி விழா தொடர்ந்து நடைபெற தங்கள் உத்திரவு...

குமார: ஆம்! நாடெங்கும் நடைபெறட்டும்! நாற்பது நாட்கள் நடைபெறட்டும்.

[காவலன் கட்டளையிட முரசு ஒலிக்கிறது; அவை கலைகிறது.]

காட்சி—2

[மருத்துவர் அறிவானந்தர் சில பச்சிலை மூலிகை களைப் பிழிந்தெடுத்து வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அவரது மகள் திருமதி ஏதோ ஒரு பச்சிலையை எடுத்துக் கொண்டுவந்து.]

திருமதி: அப்பா! அண்ணனுக்கு விருது தந்திருக்கிறார்களாம்! நமது நாட்டைப் பற்றியும், நம் நாட்டு வீரர்களைப் பற்றியும் தாழ்வாகப் பேசிக் கொண்டிருந்தீர்களே அப்பா! இப்போது பார்த்தீர்களா, நமது நாட்டு வீரர்களின் அறிவாற்றலை! வெற்றி முரசு கொட்டிக்கொண்டு வருகின்றனர். எதிரிகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்துவிட்டு வருகின்றனர். அப்பா! நம் அண்ணனுக்கு அஞ்சாநெஞ்சன் என்ற விருது வழங்கினாராம் மன்னர் குமாரவேலர்!

அறிவானந்தர்: மகிழ்ச்சி மகளே! மகிழ்ச்சி! போருக்கு அஞ்சும் நெஞ்சம் எனக்கு; போருக்கு அஞ்சா நெஞ்சம் உன் அண்ணனுக்கு! அதனால்தான் அவனுக்கு அஞ்சாநெஞ்சன் என்ற விருது! வேண்டியதுதானே மகளே. வீரனுக்குத் தரப் படும் விருது...

திருமதி: இல்லையப்பா! அண்ணனுக்கு விருது எதற்காகக் கொடுத்தார்களாம் தெரியுமா? களத்திலே எதிரி நாட்டவரைக் கண்டதுண்டமாக்கி, கையை வெட்டி, காலைத் துண்டித்து, கண்களைக் குருடாக்கி, குடலை எடுத்து மாலை தரித்துக் கொண்டதற்காக அல்லவாம்! வெண்ணாட்டு வேந்தனின் வீரவாளையே பறித்து எடுத்துக் கொண்டு வந்தவர் அண்ணன்தானாம்! உக்கிரமான போராம்! யானையின் துதிக்கையையும், மன்னனின் கழுத்தையும் அண்ணனின் வாள், ஓரே வீச்சில் வீழ்த்தியதாம்! வேலப்பன் சொன்னானாம் வில்வத்துக்கு! அவள் சொன்னாள் எனக்கு!

அறிவா: அப்படியா மகளே! வீரன்தான் உன் அண்ணன். பெயர்தான் குணாளன்! பாவம் அந்தப் பெயரை, அவன் இயல்பு இப்படி ஆகும் என்று அறியாமல் சூட்டிவிட்டேன்.

திருமதி: பார்த்தீர்களா அப்பா, மறுபடியும் உங்கள் பாதைக்கே நீங்கள் போகிறீர்களே...

அறிவா: என் பாதை என்றுமே தனிப் பாதைதான் மகளே! என் பாதைதான் இந்த நாட்டுக்கு மனவளத்தைத் தரப் போகிறது. மண் வளத்தைத் தரப் போகிறது! மதி வளத்தைத் தரப் போகிறது. மகளே! குணாளனுக்கு அஞ்சா

நெஞ்சன் என்று விருது வழங்கியதின் மூலம் என்ன எதிர் பார்க்கிறது நாடு என்று தெரியுமா? அஞ்சாநெஞ்சன் அவன். யாருக்கு? எதிரிக்கு! போருக்கு! களத்துக்கு! ஆபத்துக்கு! இதைப் போல இன்னும் பலவும் சொல்லுவார்கள். இதற்குப் பொருள், நம்முடைய புலவர்களைக் கேட்டால் அந்தாதி யொன்றையே ஆக்கிக் கொடுத்து விடுவார்கள்! அஞ்சா நெஞ்சன்! என் மகன்! நான்? என் நெஞ்சம்? அஞ்சுகிறேன் அம்மா, அஞ்சுகிறேன். என்ன ஆகுமோ? என்ன ஆபத்து பெருகுமோ என்று அஞ்சுகிறேன். அவன் அஞ்சா நெஞ்சன்! கரத்திலே வீரம்! ஆமாம்; அப்படித்தான் பேசுகிறார்கள் போர் வீரர்கள்! நான், நான்...இந்தக் கலயம், இந்தப் பச்சிலை யென்று...

எதிரிகள் கரிமீதும், பரிமீதும் வருகின்றனராம்! நேருக்கு நேர் சந்திக்கிறார்கள் வீரர்கள்! நான் போரிடுவது எந்த எதிரியிடம்? அது ஒரு விந்தை திருமதி, ஒரு விந்தை! என் எதிரி, வெளிநாட்டில் இல்லை! எல்லைக்கு; அப்பாலே இல்லை; இதோ இங்கே, அங்கே! இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களாகவே இருக்கிறார்கள்! நான் அந்த எதிரிகளைத் தேடித் தேடிச் செல்கிறேன்.

எத்தனையோ பேர், என்னிடமே கேட்கிறார்கள். என்ன சொல்வேன் அவர்களுக்கு? போர் வெறி கூடாது, அழிவு வேலையிலே ஈடுபடல் ஆகாது; தீயிடலும் வெட்டி வீழ்த்துதலும் கொடுஞ்செயல் என்கிறேன் (சிரிக்கிறார்கள்) போரிட்டுத்தானா பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்? அறிவின் துணைகொண்டு, அறவழியின் வழி நின்று, அன்புநெறி உடன்கொண்டு கருத்து வேற்றுமைகளைக் களைந்து கொள்ள முடியாதா என்றெல்லாம் கேட்கிறேன், எள்ளி நகையாடுகின்றனர்! எனக்குப் புரிகிறது. உரிமையென்றும், கடமையென்றும் உரத்தக் குரலில் கனல் கக்க முழக்கிடுவோருக்கிடையே என் பேச்சு, ஏச்சுக்குத்தான் பயன்படும் என்பதுவும் தெரிகிறது. இன்னும் பலவும் எடுத்துச் செல்ல நினைக்கிறேன்! இந்நாட்டு மக்களின் இதயத்தை எண்ணி, என் இதயத்துக்குள்ளேயே பூட்டிக் கொள்கிறேன்.

'எழுந்தது சேனை!
எட்டுத்திக்கும் அதிர்ந்தது முரசம்!
எங்கும் தூளி! எங்கும் குருதி!
வீரம் வென்றது!
தீரம் வென்றது!'

என்று இளைஞர்கள் மட்டுமல்ல, களம் பல கண்ட பெரியோரும் இப்படிக் கழறுவது கேட்கிறேன். போர் நடாத்திடச் செலவிடும் நேரம், உழைப்பு ஆகியவற்றினைப் பொருள் செய்திடப் பயன்படுத்தினால்? வறுமை ஒழியுமே! வாட்டம் தொலையுமே! வாழ்வு சிறந்திடுமே! கேட்கத்தான் நினைக்கிறேன்! பேய்க்காற்று பெரிதாக வீசிக் கொண்டிருக்கும் வேளையில், குழலெடுத்து கீதம் இசைக்கலாமா? உணர்கிறேன்; ஒடுங்கிப் போகிறேன்.

வீடுகள் வீரக் கோட்டங்களாகிவிட்டன; நாடு போர்க் கோலம் பூண்டுவிட்டது. அந்த நிலையில் அமைதியென்றும், அறம் என்றும் ஆலாபனை பாடலாமா? பாடவிடுவார்களா?

திருமதி: அப்பா! போரே கூடாது என்று நாம் இருந்து விடலாம். நம்மைப்போல் அடுத்த நாட்டவரும் இருப்பார்களா? அடுத்தவர் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும்போது நம் அறவுரைகளே நமக்கே ஆபத்தாகிவிடாதா?

அறிவா: உண்மை மகளே! நாம் மட்டும் அறம் உரைத்துக் கொண்டு அடங்கிப் போவது ஆபத்து மட்டுமல்ல, நம் வீரர்களது வீரம்கூட மங்கித்தான் போகும்! அடுத்தவனுக்கு நாம் அடிமையாய்த்தான் போவோம்; அதனால்தான் நான் கூடாது என்கிறேன் போரை! நம் நாட்டுக்கு மட்டுமல்ல— இந்த நானிலத்தையே நல்வழிப் படுத்தத்தான் மகளே நான் பாடுபடுகிறேன். இரவு பகல் பார்க்கிறேனா? வெயில் மழையென்று விரக்தியடைகிறேனா? இரவைப் பகலாக்கி, பகலை உழைப்பாக்கிப் பாடுபடுகிறேன்! திருநாட்டை வளங் கொழிக்கச் செய்யும் திருநாடாக்க! வறுமையை ஒழித்துக்கட்ட! வாழ்வு தர என் ஆராய்ச்சி மட்டும் முற்றுப்பெற்று விட்டால்?...

திருமதி: அமாவாசையிலே நிலவு ஒளிவிட வேண்டும் என்கிறீர்களா அப்பா?

அறிவா: எள்ளி நகையாடுவது எளிது திருமதி! நோக்கத்தில் காணக்கிடக்கும் ஆழ்ந்த பொருளினை உணரவேண்டும். அதற்குத்தான் நான் முயற்சிக்கிறேன்.

[அவர் மகன் குணாளன், மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வந்துகொண்டே...]

குணாளன்: இன்னும் உங்கள் முயற்சி வெற்றிபெற வில்லையா அப்பா! அல்லது புதிய முயற்சியோ?

[அவர்களுக்கிடையே அமர்கிறான்]

அறிவா: இதுவரையில் வெற்றி பெற்றிருந்தால் இந்தப் போரே நடைபெற்றிருக்காது குணளா! நீயும் அஞ்சா நெஞ்சன் ஆகி இருக்கமாட்டாய்! இப்போதுதான் வருகிறாயா?

குணாளன்: அரசவைக்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து நேராக இங்குதான் வருகிறேன்!

அறிவா: போர்க்களத்தில் மிகுந்த சேதமோ?

குணா: பயங்கரமான போர்! எதிர்ப்பு! பல்லாயிரக் கணக்கில் பலி—எதிரிகளுக்கு அப்பா!

அறிவா: எதிரிகளும் மனிதர்கள்தானே குணாளா?

திரு: (குறுக்கிட்டு) மனித உருவத்திலிருந்தால் மட்டும் மனிதர்களாகி விடுவார்களா அப்பா?

அறி: முடியாததுதான்! இதயம் இருக்கவேண்டும்! எண்ணங்கள் சீராக இயங்க வேண்டும்.

குணா: மனிதர்களுக்கு இதயமும் இருக்கிறது. எண்ணங்களும் பிறந்து கொண்டேதான் இருக்கின்றன. அந்த எண்ணங்கள் நல்லனவாக இருப்பதில்லை. நாடு தழுவிய யனவாக இருப்பதில்லை. தனக்கு தனக்கு என்கிறார் சிலர்! தமக்கு தமக்கு என்கிறார் சிலர்! சுயநல வடிவத்தில் சுழல்கிறார்கள் மனிதர்கள்!

அறிவா: ஆமாம் குணாளா! உலகுக்கே பொதுவான அந்தப் பிணி அகற்றப்பட்டுப் போனால், அதற்கொரு மருந்தினைக் கண்டுபிடித்து விட்டால், தனக்கு—தனக்கு என்பதோ, தமக்கு—தமக்கு என்பதோ என்றுமே ஏற்படாதே!

திரு: பசிப்பிணியைச் சொல்கிறீர்களா அப்பா!

அறிவா: ஆமாம்! பசித்துக் கிடப்பவர்களைப் பார்க்கும்போது என் இதயத்திலே ஒரு வலியேற்பட்டு விடுகிறது. அந்தப் பசி இருக்கிறதே திருமதி, அது, அந்தப் பிணி கொண்டவர்களை மட்டுமல்ல, அதனைக் கண்டவர்களைக் கூட வாட்டி வதைத்து விடும். திருமதி! தீரமாகப் போரிட்டு விட்டுத் திரும்பியிருக்கிறான் அண்ணன்! திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டிருக்கிறோம் நாம்! போய் பால், பழம் எடுத்து வாம்மா!

[திருமதி போகிறாள்—கூடவே குணாளனும் போய் விடுகிறான். அப்போது நொண்டிக் கொண்டே ஒரு ஏழை அங்கு வருகிறான். அவனது காலில் ஒரு கட்டுப் போடப்பட்டிருக்கிறது. அவனைப் பார்த்துவிட்டு...]

அறி: சடையப்பா! நாலு நாளைக்கு வயலில் இறங்கி வேலை செய்யக் கூடாது என்கிறேன். கேட்கமாட்டாயா? இப்போதுதானே வீக்கம் வடிய ஆரம்பித்திருக்கிறது. அதற்குள் வேலைக்குப் போகலாமா? கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு அப்புறம் வேலை செய்தால்தான் என்ன?

[அவனது கட்டுக்களைஅவிழ்த்து, மருந்துப் புட்டியிலுள்ள வேறு சில மருந்துகளை வைத்துக் கட்டி விடுகிறார்.]

சடையப்பன்: நாலு நாளைக்கா? முடியாதுங்களே ஐயா! பண்ணையார் கண்டிச்சுச் சொல்லிவிட்டாரே, செத்துப் போறதா இருந்தாக்கூட, பண்ணை வீட்டு வாசல்லே வந்து சாவுன்னு! ஏழைகளாச்சே நாங்க! இதெல்லாம் முடியுங்களா?

அறி: ஓய்வு இல்லைன்னா மருந்து போட்டுப் பயன் இல்லியே சடையப்பா.

சடை: படிப்படியா குறையட்டுங்க வீக்கம்! தங்கமான மனசு உங்களுக்கு! மத்தவுங்க கஷ்டப்படறதைச் சகிக்க முடியலை உங்களாலே! அதனாலேதான் வேலைக்குப் போக வேண்டாமுன்னு சொல்றீங்க! ஆனா, அதைப் பார்த்தா முடியுங்களா? வயிறு ஒண்ணு இருக்குதுங்களே...

அறி: ஆமாம்! வயிறு இருக்குது வயிறு! வீக்கமோ, ஏக்கமோ, காய்ச்சலோ கடுப்போ, இருமலோ, இழுப்போ, எது இருந்தா என்ன? வயிறு இருக்கே வயிறு...அந்த வயித்தைக் குளிரவைக்கணுமே! சடையப்பா! போ! உன் எஜமான் மனசைக் குளிரவை! அப்போதுதான் உன் வயிறு குளிரும். போ!

[சடையப்பன் போகிறான். அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் வாய் முணுமுணுத்துக்கொண்டே இருக்கிறது. வயிறு இருக்கிறதாம் வயிறு! வாழ்வு இருக்கிறதா? வளம் இருக்கிறதா? வயிறு மட்டும் இருக்கிறதாம் வயிறு!

காட்சி—3

[திருநாட்டுப் பெரியகோயில், அம்பாள் சந்நிதி, அலங்காரம் அற்புதமாக இருக்கிறது. போரில் கண்ட வெற்றி காரணமாக அன்று அம்பாளுக்கு விசேஷ அபிடேகத்துக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. கூட்டம் அதிகம்; குருக்கள்களும் அதிகம்தான்! அம்பாளுக்கு பலதரப்பட்ட பூசை, புனஸ்காரங்கள், தூப தீபங்கள் ஏற்றிக் காட்டப்படுகின்றன. பக்தர்கள் கன்னத்தில் போட்டும் தோப்புக் கரணம் போட்டும் தங்கள் பக்தியை, பரமாதாவுக்குப் படைக்கின்றனர். குருக்கள் நிவேதியம் வழங்குகிறார். வழங்கிக் கொண்டே...]

குருக்கள்: எல்லாம் அம்பாளுடைய கிருபை! அம்பாள் அருள் இல்லையானா திருநாட்டுக்கு வெற்றியேது? ஒரு மண்டலம் லட்சார்ச்சனை செய்துண்டிருந்தார் நம்ம திருமுடியார்! தெரியுமோன்னோ?

ஒருவர்: தெரியுமே! விக்ரமபூபதியோட வாள் வீச்சும் குணாளனுடைய வேல் வீச்சும் எதிரி நாட்டானை ஓட ஓட விரட்டிடிச்சாம்! தெரியுமே.

குருக்: அட பைத்தியக்காரா! வாளும் வேலும் இருந்து என்ன பண்றது? எதிரி நாட்டானுக்கிட்டே மட்டும் இல்லையா வாளும் வேலும்? நம்ம விக்ரமருக்கு அம்பாளோட வரப்பிரசாதமும் சேர்ந்து இருந்தது; வெற்றி கிடைச்சுது.

இன்னொருவர்: சரிதான் சாமி! வீரம் விளைஞ்ச மண்ணு இது. விவேகமும் இப்போ விளைஞ்சுக்கிட்டிருக்கு. வீணுக்கு எதுக்குப் பேச்சு! பிரசாதம் கொடுங்கோ! (குருக்கள் பிரசாதம் கொடுக்கிறார். கூட்டம் பெற்றுக்கொண்டு கலைகிறது. கலையும் கூட்டத்தில் இருவர்...)

ஒருவர்: திருமுடியார் ஒரு மண்டலம் லட்சார்ச்சனை செய்தாராமே!

மற்றவர்: ஆமாம்! திருநாட்டுக் கோயில்கள் எல்லாத்துக்கும் அவர்தானே அதிகாரி! குமாரவேலர் இந்த நாட்டுக்கு ராஜா. குருக்கள் திருமுடியார் இந்தக் கோயில்களுக்கு ராஜா! வீரம் வெற்றி பெற்றது அங்கே; திருமுடியாரின் விவேகம் அதை வெற்றி கொள்ளப்பார்க்குது இங்கே! திருமுடியார்க்கு விக்ரமபூபதி மேலே ஒரே கோபமாம். சண்டைக்கு அப்புறம், விக்ரமபூபதிக்கு முன்னைக் காட்டிலும் செல்வாக்கு அதிகமாப் போச்சு.

முன்னவர்: பின்னே இருக்காதா? வெண்ணாட்டுப் போர் சாமான்யமா? அடுத்தவீட்டு ஆறுமுகம் போயிருந்தானே சண்டைக்கு! அவன் சொல்றதைக் கேட்டா, விக்ரமபூபதி இல்லேன்னா வெற்றி நமக்கில்லேன்னுதான் நெனைக்கத் தோணுது.

பின்னவர்: குணாளனும் அப்படித்தானாம். குணாள னுக்கு சீக்கிரம் பட்டாளத்திலே பதவி உயரலாமுன்னு பேச்சு அடிபடுது அரண்மனைப்பக்கம்.

முன்னவர்: இப்ப, திருமுடியாருக்கு இது பெரிய பேரி டின்னு சொல்லு.

பின்னவர்: பேரிடியா! பேரிழவுன்னு சொல்லணும். குமாரவேலர் மகாராஜாவா இருந்தாலும், பச்சைக் குழந்தை தான். அதனாலே நாட்டு நிர்வாகத்தையும் விக்ரமரே கவ னிச்சுக்கிறார். கோயில் நிர்வாகத்தைக் கவனிச்சுக்கிட்டிருக் கிற திருமுடியாருக்கு, வீண் பொறாமை! தனக்கு செல்வாக்கு வளராமே, விக்ரமருக்குப் புகழ்னா, பொச்சரிப்பு இருக்கத் தானே செய்யும்?

முன்னவர்: மலைகிட்டே போயி மோதுறாரு.

பின்: ஏற்கனவே மண்டை வழுக்கை. இப்போ புத்தி யும் வழுக்கையாயிட்டுப் போலே இருக்கு!

முன்: திருமுடியார், அரண்மனைக்குக்கூட குருவாமே?

பின்: ஆமாம், பத்து வயது பாலகனுக்கு அரசியல் குரு, மதகுரு, ராஜகுரு!

முன்: படைத்தலைவரா, மடத்தலைவரான்னு இருக்கு இப்போ!

பின்: கத்திக்கும், புத்திக்கும் போர் ஆரம்பமாகி இருக்கு. காத்திருப்போம்! கவனிப்போம்!

காட்சி—4

[அரசகுருவும், கோயில்களுக்கெல்லாம் ஆட்சித் தலை வருமான திருமுடியார், நெற்றி நிறைய நீறுபூசிக் கொண்டு கழுத்து நிறைய உருத்திராட்ச மாலை யணிந்து, தூய வெள்ளுடையில் மணையொன்றில் அமர்ந்திருக்கிறார். கோயிலில் கண்ட குருக்கள் வந்துகொண்டே.]

குருக்: கேட்டேளா, நம்ம ஜனங்களோட புத்தி கெட்டுப்போனதை! மலைநாடு ஜெயிச்சது அம்பாளோட கிருபை காரணமில்லியாம். விக்ரமனோட வீரமாம். பேசிக் கிறா இப்படி..

திருமுடி: தெரியுமே எனக்கு! விக்ரமன் விபரீதங்களை விளைக்கத் தொடங்கி இருக்கிறான். அன்னை பராசக்தியின் அருளை அவன் துச்சமாக மதிக்கிறான். மன்னனிடம் கூறி இருக்கிறேன்! மண்டைக் கனத்தைக் குறைத்தே தீருவேன்!

குருக்: கோயிலுக்கு வரவா, குமாரவேலனைவிட, விக்ரமனைப் பத்திதான் பேசிண்டுபோறா, வாறா. யாரோ குணாளனாமே, அவன் பேரும் இப்ப அடிபடத் தொடங்கி இருக்குன்னேன்.

திருமுடி: பைத்தியக்காரர் அறிவானந்தரின் மகன் குணாளன்தானே! கட்டான வாலிபன்! கண்ணுக்கழகான உருவம்! காளைப்பருவம்!

குருக்: கமலி, உங்களுக்காகக் காத்திண்டிருக்காள். கண்டுட்டுதான் போஜனம் பண்ணுவாளாம்!

திருமுடி: (சிரித்துக் கொண்டே) கழுத்துக்கு மாலை கேட்கிறாள் அவள்! கட்டழகுதான்! கன்னிப்பெண்! காணாமலிருக்க முடியுமோ! வருவதாகச் சொல்லுங்கள்! (குருக்கள் போகிறார். அவர் போனதும், திருமுடியார் எழுந்து அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்துவிட்டு..) வீரமிருக்கிறது விக்ரமனிடம்! விவேகம் இல்லை. அரசன் ஒரு பொம்மை! கோபுரத்துக் கலசமாக இருக்கவேண்டும் அவன். கோயில் தேவனாகவே ஆகிவிட்டான்! என் புகழ் மங்குகிறது. மண்டலங்களையே உருட்டிவிடக் கூடிய மதி யூகங்களைப் படைத்த என்னைத் துச்சமென மதிக்கத் தொடங்கிவிட்டான்! வென்றுவிட்டானாம், போரில்! வீணன்! பேசித் திரிகிறான் வீண் பேச்சுக்களை!

## காட்சி—5

[திருநாட்டு அரண்மனை. அமைச்சர் அருணகிரி ஓலைச் சுவடியொன்றை வைத்துப் புரட்டிக் கொண்டிருக்கிறார். நாட்டுப் பாதுகாவலன் விக்ரமன் அங்கு வருகிறான்.]

அருண: உம்மைத்தான் எதிர்பார்த்தேன் விக்ரமரே! அவசரமான செய்தி!

விக்ர: அரசியல் என்பதே அவசரத்துடன் பிணைக்கப் பட்டதுதானே அமைச்சர் அவர்களே! உண்ண நேரமில்லை; உறங்க நேரமில்லை; ஓய்வில்லை; ஒழிச்சலில்லை.

அருண: இருக்காதா பின்னே! வெண்ணாட்டை வென்ற மகிழ்ச்சியைவிட, களைப்பு அதிகம் மேலிட்டிருக்குமே; காவல் பணிகள் மிகுந்திருக்குமே!

விக்ர: உண்மை! அமைச்சர் அவர்களே! திருநாட்டின் மக்கள் தீரர்கள் என்பதை, தினவெடுத்தவை அவர்தம் திண் தோள்கள் என்பதை, திக்கெட்டும் உணர்த்தியாக வேண் டாமா? மமதையுடன் இருக்கிறது மல்லநாடு! மருதூரான் மண்டைக்கனம் கொண்டுள்ளானாம். கலனாகிக் கிடக்கும் கருவிகளைப் புதுப்பித்தாக வேண்டுமே! வேல்கள் வடிக்க வேண்டும்; வாட்கள் படைக்க வேண்டும்! கூரற்ற வேலுக்கும் முனையற்ற வாளுக்கும் உயிர் உண்டாக்க வேண்டாமா? ஓய்வேது, ஒழிவேது!

அருண: ஆமாம் விக்ரமரே! ஓய்வின்றி ஒழிவின்றி போர்க் கருவிகளைப் புதுப்பிக்கவும், படைப் பெருக்கம் உண்டாக்க வும் உழைக்க வேண்டியதுதான். வீரர்கள் போர் முகத்தி லிருந்து போர்புரிய, எதிரியின் மார்புறத்தில் வேல் பாய்ச்ச, வாள்வீச, உயிர் இருந்தால்! உயிரைத் தாங்கி நிற்கும் வலு விருந்தால்! தளபதியாரே! திருநாட்டின் வீரம் என்றுமே சோரம் போனதில்லை என்பதற்கு நீர் சான்று! ஒப்புக் கொள்கிறேன். வீரர்களின் உயிரைத் தாங்கி நிற்கும் உட லுக்கு வலுவேற்றும் பணி தடைப்பட்டிருக்கிறது! மறவர் குடி மக்களின் மனம் போர்வெறித் தன்மையிலிருந்து மாறு பட்டிருக்கிறது...

விக்ர: அமைச்சரின் பேச்சு...

அருண: ஆத்திரத்தை ஊட்டக் கூடாது; கருவூலம் முழுவதும் கருவிகளின் முன்னேற்றத்துக்கு மட்டுந்தானா என்று கண்டிக்கின்றனர். வாழ்வு காண முடியாத மக்கள்,

போர் முடிந்தபின், போரில் ஈடுபட்ட நாடு, நாட்டின் நலிவை நல்லபடியாக்க புதுவரிகளைப் போடத்தான் செய்யும்! அறிவேன்! அரசாங்கத்தால் போடப்பட்ட வரிகளை அக்கறையுடன் செலுத்தவேண்டிய கடமையும் மக்களுக்கு உண்டு. இல்லையா விக்ரமரே!

விக்கிர: சொல்லுங்கள்!

அருண: வரி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் மக்கள், மக்களுக்கு வாழ்வளிக்கக் கடமைப்பட்டவர்கள் நாம்! வரிப் பணம் நம்முடைய நலனுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதை, அறிவுள்ள எந்த மக்களும் விரும்பமாட்டார்கள்! வரி வசூல் மட்டுமே அரசாங்கக் கடமை என்று எந்த அறிவுள்ள அரசும் கருதாது; செயல்படாது.

விக்ர: சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் கவனிக்கப்பட வேண்டும் அமைச்சரே!

அருணா: கவனிக்கப்படத்தான் வேண்டும். மக்களால் மட்டுமல்ல—அரசினாலும்! போர்க் கருவிகளைப் புதுப்பிக்க நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளில் பத்தில் ஒரு பங்காவது நாட்டு மக்களின் நலிவகற்றும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கினோமா? வயல்கள் வறண்டு கொண்டிருக்கின்றன; தொழில் துறைகள் தேக்கமடைந்து வருகின்றன! இல்லாத மக்கள் இருப்பவரைப் பார்த்து ஏங்குகிறார்கள்! இந்த ஏக்கம், இருப்பவனிடமிருந்து இல்லாதவற்றை, இல்லாதவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தைத் தந்துவிட்டால்? மக்கள் கேட்கிறார்கள் இப்படி. பதில் சொல்ல முடியவில்லை! எங்களுக்கு வாழ்விருந்தால்தான் அரசுக்கும் வாழ்வு என்று வெளிப்படையாகவே கூறுகிறார்கள். எதிர்த்துரைக்க இயலவில்லை.

விக்ர: அமைச்சர் அல்லவா நீங்கள். அக்கறை அதிகம் இருக்கத்தானே செய்யும். மல்ல நாடு வளம்மிக்கபூமி! மருதூர் பொன்கொழிக்கும் நாடு. போர்த் தொடுப்போம்! பூண்டோடு அழிப்போம் அந்தப் புல்லர்களை! பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொண்டுவந்து அளிப்போம், திருநாட்டு மக்களுக்கு!

அருணை: உங்கள் பேராற்றலை நான் மிகவும் மதிக்கி றேன் தளபதியாரே! ஆனால் போர் வெறியைக் கண்டிக்காம லிருக்க முடியாது. 'உணவுக்கு வழி என்ன? உடுப்பதற்கு வேறென்ன' என்று ஏங்கிக் கிடக்கும் மக்களின் எண்ணிக்கை மிகுந்துகொண்டு வருகிறது.

விக்ர: இயற்கை வளம் இல்லை. தொழில் திறமை இல்லை! செல்வம் மிகுதி இல்லை! என்ன செய்ய முடியும்?

அருணை: திருநாட்டிலில்லாத வளமும், திறனும், வாழ்வும் பிற நாட்டுக்கு ஏது? மக்கள் வாழவேண்டும் என்று நினைக்கி றார்கள்! வாழ்வுக்கான வழிமுறைகளை வகுக்கிறார்கள். மக்கள் வாழ்கிறார்கள். மன்னர்களும் வாழ்வு பெறுகிறார் கள். தளபதியாரே! படைகளுக்கு மட்டும் நீர் தளபதியா யில்லை. பாராளும் மன்னனுக்கும் நீங்கள் தலைவராக இருக் கிறீர்கள். நாட்டைப் புரக்கும் நற்பணிக்காக நீங்கள் நிய மிக்கப் பெற்றிருக்கிறீர்கள். அதற்கான முறைகளில் உங்கள் சிந்தனை, செயல், சேவை அனைத்துமிருக்க வேண்டும்; ஆலோசியுங்கள்.

[வேகமாகப் போய்விடுகிறார். குமாரவேலன் வந்து கொண்டே...]

குமார: அமைச்சர் பேசியவைகளை கேட்டுக் கொண்டு தானிருந்தேன் தளபதியாரே! அறிவுரை தரும் அளவுக்குத் தானே அவரை வைத்திருக்கிறோம். ஆக்கப் பணிகளை ஆக்கித் தரவேண்டியது நீங்கள் அல்லவா! அதனால்தான் அவர் அவை பற்றி உங்களிடம் கூறுகிறார்.

விக்ர: உண்மைதான் மன்னா! அவை பற்றிக் கவனிக் கிறேன்! சீன நாட்டிலே இருக்கும் நம் தூதுவருக்கு வயதாகி விட்டதாம்! அலுவல்களைக் கவனிக்க முடியாத அளவுக்கு முதுமை. அறிவுச்செறிவுமிக்க ஒருவரை அனுப்புவதுதான் நல்லது. அமைச்சர் அருணகிரியாரை, சீனநாட்டுத் தூதுவ ராக அனுப்பி வைக்க, தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

குமார: நல்லது என்று எண்ணுகின்ற எந்த ஒன்றுக் கும் என் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியதில்லை என்று எத்தனையோ முறை எடுத்துச் சொல்லிவிட்டேன்.

விக்ர: என்றாலும், நான்...

குமார: நாட்டுப் பாதுகாவலர்! அறிவேனே நான். நல்லதைச் செய்யுங்கள். நாட்டு மக்களை நல்லபடி வாழச் செய்யும் திட்டங்களைத் தீட்டுங்கள்!

[மன்னன் போகிறான். குழம்பிய நிலையில் அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கும்போது திருமுடியார் வருகிறார்.]

திருமுடி: (வந்துகொண்டே) அரசர் இங்கே இருக்கக்கூடும் என்று வந்தேன்...

விக்ர: இருந்தார், போய்விட்டார்! ராஜ குருவுக்கு ராஜனிடம் மட்டும்தான் வேலையோ?

திருமுடி: அப்படியொன்றுமில்லை. அரசரிடம் சில ஆலோசனைகளைக் கூறலாமென்றுதான் வந்தேன்!

விக்ர: அந்த அற்புத ஆலோசனைகளை அடியேன், அறிந்துகொள்ளலாமோ?

திருமுடி: அரசர் அறிந்தாலும், அது விக்ரமரிடம் வந்துதானே தீரும். அறிந்துகொள்வதோ, அறிவிப்பதோ தவறில்லையே! தளபதியாரே! நாட்டிலே வறுமை மிஞ்சி, வளங்கெட்டுக்கிடக்கிறது. வரி செலுத்தக்கூட வக்கற்றுக் கொண்டிருக்கிறார்கள் மக்கள். இவையெல்லாம் எதனால்? வளமார் திருநாடு என்று வாய் மணக்கப் பாடினோமே, அந்த வளம் எங்கே மறைந்து கொண்டுவிட்டது? வீரத்தின் சிகரம் விக்ரமன் இருக்கும்போது வீழ்ச்சி நிலை ஏன்? வெண்ணாட்டை வென்ற பேராற்றல் இருக்கும்போது மக்களிடம் விரக்தி நிலை ஏன்?

விக்ர: அரசகுரு அதற்குக்கூறும் காரணம்?

திருமுடி: விக்ரமரே! வீரத்தை வெளிக்காட்டும் ஆற்றல் மட்டும் இருந்தால் போதாது; அருள் வேண்டும்! ஐயன்மீது ஆள்வோருக்கும், மக்களுக்கும் பக்தி சுரக்க வேண்டும்! அதனைச் சுரக்கச் செய்யும்படி கலனான கோயில்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்; விழாக்களையும் வேள்விகளையும் விடாமல் நடத்தும்படி உத்திரவு அல்ல, உருப்படியான உதவிகளைச் செய்ய வேண்டும், ஒழுங்கான முறையில்.

விக்ர: அப்படியா திருமுடியாரே! அறியேனே நான். இதுவரையில் ஐயன் அருள்பற்றியெல்லாம்! அறிய முயல்கிறேன்; சென்று வாருங்கள்...!

[திருமுடியார் ஏமாற்றத்துடன் போகிறார். அவர் போனதும்] முட்டாள்கள் ஐயனாம்! அருளாளர் ஆண்டவனாம்! வீரத்தை விலைகூறிவிட்டுகோழையாகிவிடு என்று கூறுகிறார் அமைச்சர்; வயிறு இருக்கிறது என்று வாதாடுகிறார்களாம் மக்கள். வீறு கொண்ட வேங்கையிடம் வீழ்ந்துகிட என்று ஆணையிட்டு அடக்கப் பார்க்கிறார்கள் அனைவரும்.]

காட்சி—6

[அறிவானந்தர் தம் ஆராய்ச்சி பற்றி குறிப்புத் தொகுத்து வைத்திருப்பதைப் புரட்டியபடி இருக்கிறான் குணாளன். அருகே அவன் தங்கை திருமதி அமர்ந்து கொண்டிருக்கிறாள்.]

திருமதி: அப்பாவின் போக்கு எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. வேளாவேளைக்குச் சோறுகூட தின்பதில்லை. அப்படி என்ன ஆராய்ச்சியோ?

குணா: திருமதி! எழுந்ததிலே இருந்து அப்பா தூங்குகிற வரைக்கும் அவர்கூடவே இருக்கிறாய். மலைச்சாரல், பாறைப்பகுதி, காட்டுப்பக்கம் அங்கே இங்கே என்று அலைந்து அலைந்து ஊரில் இருக்கிற வேர்களையும், பச்சிலைகளையும் கொண்டு வந்து ஆராய்ச்சி செய்கிறார் அப்பா! அவர் கவலை அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. அப்பாவின்ஆராய்ச்சிக்கு ஒரு முடிவேற்பட்டுவிட்டால், அந்தப் பொன்னாள் இந்த நாட்டின் நன்னாள்! போர் இருக்காது! போர் காரணமான புகைச்சல் இருக்காது! புரட்சி இருக்காது! வறட்சி இருக்காது! வறுமை இருக்காது! பசிப்பிணியே பாரைவிட்டு அகன்று போகும்.

[இதைக் கேட்டுவிட்டு திருமதி விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.]

குணா: பைத்தியமா உனக்கு? திருமதி! ஏன் சிரிக்கிறாய்?

திருமதி: அப்பா வெற்றியடைந்து விட்டால் அப்புறம் பசி, பஞ்சம், பட்டினி இருக்காது; சரி, ஒப்புக் கொள்கிறேன். போரும் புகைச்சலும் இருக்காது என்கிறாயே அண்ணா, நீ எங்கே போவாய் வேலைக்கு?

குணா: திருமதி! எனக்கு வேலை கிடைக்க வேண்டு மென்பதற்காக, அந்த வேலையின் மூலமாகப் பொருள் ஈட்ட வேண்டுமென்பதற்காகப் போர் ஏற்படும் நிலை நீடித்துக் கொண்டிருக்கவேண்டுமென்று நான் நினைத்தால், என்னைவிடக் கேடுகெட்ட ஒரு குடிமகன் இருக்க முடியாது. சுயநலத்துக்காக நாட்டில் குழப்பநிலை இருந்து கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற இழிகுணம் நாட்டில் எந்த ஒருவருக்குமே இருக்கக்கூடாது திருமதி, இருக்கக் கூடாது! திருநாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாய் மாற்றி விடவேண்டும்; மக்கள் குறையற்றவர்கள், குணமிக்கவர்களாய் வாழவேண்டு மென்பதற்காகத்தான் அப்பா, அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்! அந்தப் பணியில் இனி நான் முழுமூச்சாக ஈடுபட முடிவெடுத்து விட்டேன். ஆராய்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும்.

திருமதி: தளபதி விக்ரமருக்கு அடுத்த பட்டாளப் பதவியைத் தங்களுக்குத்தான் தரப்போவதாகப் பேசிக் கொள்கிறார்களே அண்ணா!

குணா: உண்மைதான்! போரும் அதன் கொடுமைகளும் புவனத்தைவிட்டே போக்கப்பட வேண்டுமென்று ஒருநாளின் முழு நேரத்தையும் செலவிட்டுக் கொண்டு இருக்கிறார் அப்பா! திருமதி நான்...வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன்—பட்டாளத்தில் பதவி தேடிக் கொண்டிருப்பதற்காக!

திருமதி: அரண்மனைப் பதவியிலிருந்து வெளியேறி விடப் போகிறீர்களா? அப்பா ஒப்புக் கொள்வார்களா?

குணா: மகிழ்ச்சியுடன் வரவேற்பார்! தந்தையின் கொள்கை வேறு, தனயனின் கொள்கை வேறு என்று இது வரையில் இருந்து வந்த முரண்பாடுகள் மூலைக்குச் சென்று

விடும். தந்தையும் தனயனும் நாட்டின் எதிர் காலத்துக்காக ஒருமித்த கருத்தோடு ஒன்றுபட்டார்கள். வென்றுவிட்டார்கள்! என்று எல்லோருமே இனி இயம்புவர்! வாழ்த்துவர்! வரவேற்பர்!

திரு: இந்த இனிய முடிவை, இப்போதே சென்று அப்பாவிடம் கூறி வருகிறேன்!

[போக முயல்கிறாள் திருமதி; குணாளன் அவளைத் தடுத்து—]

குணா: இரு அம்மா, இந்தச் சேதியை நானே அப்பாவிடம் கூற வேண்டும். திருமதி! மாதவன் எங்கே? மடையன் வெகு நேரமாகக் காணோம்!

திரு: ஏதோ மூலிகை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார் அப்பா! ஒருவேளை தேடிக் கொண்டுபோய் இருப்பான்—காட்டுக்கு!

குணா: மாதவனாவது, காட்டுக்குப் போவதாவது....

திரு: மாதவன் போகும் காட்டில் புலியும் இல்லை; பாம்புப் புதரும் இல்லை. சிங்கமும் இல்லை; சிறுத்தையுமில்லை. மான் இருக்கும், மயில் இருக்கும்! பைங்கிளி இருக்கும்; பஞ்சவர்ணக்கிளி இருக்கும்!

[சிரித்துக்கொண்டே போய்விடுகிறாள்.]

குணா: பொல்லாத போக்கிரி நீ...!

[அவன் வேறு பக்கம் போகிறான்.]

காட்சி—7

[ஊரின் புறப்பகுதி. அறிவானந்தரது ஆராய்ச்சிக் கூடத்தில், ஆராய்ச்சிப் பிரிவில் வேலை பார்க்கும் ஒருவனான மாதவன் என்னும் இளைஞன் உல்லாசப் பிரியன். இளமை இன்பத்தை எப்படியும் துய்ப்பது என்பதை இலட்சியமாகக் கொண்டவன். மாலதி என்ற அலங்காரவல்லியுடன் அளவளாவிக் கொண்டிருக்கிறான்.]

[மாலதி, மாதவன்மேல் ஏதோ ஊடல் கொண்டவள்போல் காணப்படுகிறாள்.]

மாதவன்: இன்பவல்லி! எழிலரசி! அஞ்சுகமே! உனக்குக் கோபம் ஆகாதடி!

மாலதி: ஆமாம்... இன்பமே! எழிலே! மயிலே! குயிலே எல்லாம் எதிரிலிருக்கும் பொழுதுதான் கொஞ்சுவது...

மாத: (அவள் கரத்தைப் பற்றி இழுத்தபடி) மாலதி! என் நெஞ்சிலே நீ எப்போதும் நிறைந்திருக்கிறாய்!

மாலதி: (கொஞ்சு மொழியில்) நேற்று இரவு நிலவு எவ்வளவு அழகாக இருந்தது! காத்து காத்து...

மாத: என்னை நெருப்பாய்ச் சுட்டது. என்ன செய்வேன்? வேலை ஓயவில்லை.

மாலதி: என்னதான் வேலையோ, இரவு பகலென்று இல்லாமல்! மணலைக் கயிறாகத் திரிக்கிறீர்களோ, வானத்தை வில்லாக வளைக்கிறீர்களோ அல்லது செம்பு பித்தளையைத் தங்கமாக்கும் வித்தையைச் செய்கிறீர்களோ- இப்படி ஓயாமல் அந்தக் கிழத்துடன் கூடிக் கொண்டு அரைப்பதும் உரைப்பதும் காய்ச்சுவதும், செச்சே! பைத்தியம் அந்தக் கிழத்துக்கு! உங்களுக்குமா?

மாத: (ஆர்வத்துடன்) மாலதி! எங்கள் காலடியில் தங்கத்தைக் கொண்டு வந்து கொட்டுவதற்கு மன்னாதி மன்னர்களெல்லாம் தவங்கிடப்பார்கள், எங்கள் வேலை வெற்றிகரமாக முடிந்துவிட்டால்! தெரியுமா?

மாலதி: தெரியுமே, அந்தக் கிழவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு நீங்கள் கெட்டுப் போயிருப்பதும் தெரியுதே!

மாத: உலகிலே, ஏழ்மை, பஞ்சம், பிணி எல்லாம் பஞ்சு பஞ்சாகப் பறக்கப்போகிறது. மாலதி! பார்க்கப் போகிறாய் அந்த அற்புதத்தை, அறிவானந்தரின் ஆராய்ச்சி வெற்றி பெற்றதும்!

மாலதி: (குறும்பாக) மாயாஜாலம், மகேந்திரஜாலம் செய்றீங்களா!

மாத: (எழுச்சியுடன்) செச்சே! ஊரை ஏய்த்து உண்டு கொழுக்கிற ஆசாமிகளோட பேச்சல்லவா மாயாஜாலம், மகேந்திரஜாலம் எல்லாம்! இது மெய்ப்பொருள் காண்பது!

மாலதி: (மேலுங் கேலியாக) உங்களோட அறிவுதான் மெய்! மற்றதெல்லாம் பொய்! அப்படித்தானே?

மாத: (சலிப்போடு) எப்படி அதை உனக்கு நான் விளங்கவைப்பது? புரியவில்லையே கண்ணே!

மாலதி: உங்களுக்கே அது விளங்கலைன்னு சொல்லுங்க... சபாஷ்! சபாஷ்!

மாத: கேலி பேசுகிறாய் மாலதி. வேலைச் செருகு கிறாய். அறிவானந்தரின் ஆராய்ச்சி, அற்புதமானது; அபார மானது! அறிவுபூர்வமானது!

மாலதி: அப்படித்தான் இருக்கட்டுமே, இந்த அழகுப் பூமானுக்கு அதனுலே லாபம் என்னவாம்?

மாத: எனக்கு மட்டுமில்லை மாலதி! ஆராய்ச்சி வெற்றி யடைந்தால், அதனால் லாபம், இந்தக் கலாபத்துக்குக்கூடத் தான் (என்று கூறி மாலதியை இழுத்து அணைத்துக் கொள்கிறான்)

காட்சி—8

[ஊர்ப் பெரியவர்கள் சிலபேரை, தன் மாளிகை யில் கூட்டிவைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார் திருமுடியார். பெரியவர்கள் இடுப்பில் அங்க வஸ் திரங்களைக் கட்டிக் கொண்டு, கைகட்டி, வாய் பொத்தி பக்திச் சிரத்தையுடன் நின்று கேட்கின் றனர்.]

திருமுடியார்: ஐயனின் அருள் இந்த நாட்டுக்கு இனி சித்திக்காது! அம்பாள் அருள்பாலிக்கமாட்டாள்! பசியென் றும், பஞ்சமென்றும், பட்டினியென்றும் அவலக் குரல் ஆரோ கணத்திலிருக்கிறதே, ஏன் என்று உங்களில் எவரேனும் எண்ணிப் பார்த்தீர்களா? ஆண்டவன் குடியிருக்கும் ஆலயங் கள் அழிந்துகொண்டு வருகின்றன. ஏனென்று, கேட்டீர்களா, உங்களில் எவரேனும்? விக்ரமனிடமிருக்கும் வீரம் ஒன்றே, இந்த திருநாட்டை வளநாடாய் மாற்றிவிடப்போதும் என்று மமதையிலிருக்கிறீர்கள்! மன்னனும் மத்தளங்கொட்டுகிறார்..

கலனாகிவரும்கோபுரங்களைப்புதுப்பித்து,புணருத்தாரணம் செய்து, கும்பாபிடேகம் செய்துவைக்க வேண்டுமென்றால், கருவூலம் காலியாக இருக்கிறது. புது வரிகள் விதிக்கிறேன். நிரம்பட்டும் பொக்கிஷம்—நினைத்துப் பார்க்கலாம் என் கிறார் விக்ரமர்! நாடு,காடாக வேண்டும். கடவுளின் கடாட் சம் இல்லாது போகவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர் களா?

ஒரு பெரிய: அதை எப்படி அனுமதிக்க முடியும்? ஆண்ட வன் இட்ட பிச்சைதானே அரசும், மன்னனும். கேட்கத்தான் வேண்டும், அரசரிடம்.

இன்னொரு பெரியவர்: நாட்டின் வரிப்பணம், நாட்டு மக்களுக்காகத்தான்! போர் வெறியர்களின் போர் முழக்கத் துக்கல்ல!

திரு: என்று மன்னனிடம் கேளுங்கள், மன்னனை வைத்து விளையாடும் விக்ரமனிடம் கேளுங்கள்! விபரிதம் விளையாடி—திருநாட்டைத் தீய்க்குமுன் கேளுங்கள் மன்ன ரிடம்!

அனை: கேட்கத்தான் வேண்டும்! கேட்கத்தான் போகி றோம்.

திரு: போய்க் கேட்டுவிட்டு வாருங்கள். மன்னனுக்காக மக்களா? மக்களுக்காக மன்னனா என்று கேளுங்கள். அரசன் ஒரு குழந்தை; அறியாச் சிறுவன்! ஆட்டிப் படைப்பவனிடம் கேளுங்கள்! போங்கள்.

(பெரியவர்கள் போகிறார்கள். போனதும் விக்ரமன் அங்கு வருகிறான்]

விக்ர: (வந்துகொண்டே) ஆட்டிப் படைப்பவனே வந் திருக்கிறேன், கேளுங்கள். திருமுடியாரே! கேட்கச் சொல்லிச் சொல்லிக் கொடுத்தனுப்பினீர்களே, நீங்களே; கேட்கலாமே! மக்களுக்காக மன்னனா? மன்னனுக்காக மக்களா? கேட்க வேண்டிய கேள்விதான். திருமுடியாரே, கேட்டுக் கொள் ளுங்கள். மக்களுக்காக இருக்கிறான் மன்னன்; அந்த மன்ன னுக்காக இருக்கிறார்கள் மக்கள். அவர்கள் இருவருக்குமாக

இருக்கிறேன் நான்! வறண்டு கிடக்கிறது நாடு. வாழ்விழந்து கிடக்கிறார்கள் மக்கள்! தெரியாமலிருக்கிறேனா! எதிரி நாட்டவர்களின் தாக்குதல் எந்த நேரத்திலும் நிகழலாம் என்று இருக்கிறது நிலைமை. இலட்சியங்களைக்கூட விட்டுக் கொடுத்துத்தான் தீரவேண்டும். இந்த வேளையில், களமுகத் தில் இருந்து கடமை வீரன், உயிரையே கொடுக்க முன் வரு கிறான். நாட்டுக்காக! நாட்டவர் சிலநாள் நலன்களை விட்டுக் கொடுத்தால் என்ன கெட்டுப் போவரோ! திருமுடி யாரே! தேவாலயங்களின் ஆட்சி உம்முடையது. தேவர் களைக் கண்காணித்துக் கொண்டாலே போதும்! தேவை யற்ற முறையில் என் பாதையில் குறுக்கிட்டுக்கொண்டு வருகிறீர்கள்! எச்சரிக்கிறேன்! முடிந்தால் உங்கள் தேவன், உங்களைக் காப்பாற்றட்டும்!

திருமுடி: விக்கிரமரே! இப்படிக் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள் மக்களில் சிலர். நாடாள்வோர், நமக்கென்ன என்று இருந்து விடும்போது, நாட்டவர்தானே கேட்டுத் தீருவர். நலியும் மக்கள் அல்லவா வாழ்வுக்குப் போராடுவர். என்பால் கேட்டனர் மக்கள்! இறைவனிடம் கேளுங்கள் என்றேன் நான். நாட்டு மக்கள் தங்கள் போக்கின் மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். வெளிப்படையாகவே பேசத் தொடங்கிவிட்டார்கள். உயர்ந்த இடத்திலிருக்கும் உங்களிடம் நேரில் வந்து உரைக்க முடியவில்லையாம், உற்ற குறைகளை! உரைக்கச் சொன்னார்கள்—அதனையே உரைக் கும்படிக் கூறினேன். மக்களது ஆத்திரத்தைக் கிளறிவிட்டு அரசியல் நடத்துவது நல்ல பலனைத் தராது. ஆண்டவனும் அனுமதிக்கமாட்டான். எனவேதான் கேட்டுக்கொள்கிறேன்; மக்களுக்கு வாழ்வளிக்கும் திட்டங்கள் ஏதேனும் தீட்டுங்கள் என்று! ஐயனின் அருளுக்கு வழி தேடுங்கள் என்று!

விக்ர: ஆலயத்துக்குள்ளிருந்து ஒலிக்கும் மணியோசை ஒன்றின் மூலமே, உற்பாதங்களைச் சமாளித்துவிடும் ஆற்றல் உங்களுக்கிருக்கலாம்! நிரூபித்துக் காட்டுங்கள்; வருகிறேன்.

[திடுக்கிட்டுப் போனவராக நிற்கிறார் திருமுடியார்]

காட்சி—9

[வீதியில் வீரன் ஒருவன் தண்டோரா போட்டுக் கொண்டு போகிறான். பலபேர் நின்று அதனைக் கவனிக்கின்றனர்]

''இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால், திருநாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக அரசர், புதிய சில திட்டங்களை மேற்கொள்ள விருக்கிறார். புதிய திட்டத்தின் மூலம் புதுவாழ்வு பெறப்போகிறார்கள் மக்கள். புது வாழ்வு அளிப்பதற்காக, திருநாட்டுத் தேவாலயங்களை யும், இனிமேல் அரசாங்கமே நேரடியாக நிர்வாகிக்கப் போகி றது. அரசாங்க நிர்வாகத்தின்கீழ், ஆலயங்களின் பூஜை, புனஸ்காரங்கள் அனைத்தும் எப்போதும்போல் நடைபெற் றுக் கொண்டேவரும். இதன்மூலம், தனிப்பட்டவர்களிடம் ஆலயத்தின் சொத்துக்கள் இருப்பது இன்றுமுதல் பறிமுதல் செய்யப்படுகிறது. இது மன்னர் குமாரவேலரின் உத்தரவு..''

[படித்துவிட்டுப் போய்விடுகிறான் வீரன். மக்களில் சிலர்...]

ஒருவன்: கோயில் சொத்துக்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தவன்களுக்கு வந்துட்டுது ஆபத்து!

இரண்டாமவன்: பின்னென்ன! ஆண்டவனுக்கு ஆயிரம் காணி எதுக்கு? ஆறுகால பூசைக்கு 5 லட்சம் 50 லட்சம்ன்னா, அடுக்குமா? ஆண்டவன் அப்படிக் கேட்கிறாரா? உள்ளன் போடு பக்தி செலுத்தினா போதாதா?

மூன்றாமவன்: இதெல்லாம் ஒரு சம்பிரதாயந்தானே! அந்தந்த காலத்துக்குத் தக்கபடி ஏதோ ஒரு ஏற்பாடு செய்து வச்சிருந்தாங்க! இது விக்ரமன் காலம்! விபரீத புத்தி!

வேறொருவன்: விபரீதமும் இல்லே, விளையாட்டும் இல்லே, திருமுடியார் இருக்காரே, அவருடைய ஆதிக்கத்திலே மட்டும் ஐயாயிரம் ஏகரா புஞ்சை இருக்கு. அவரது அதிகாரத் திலே இருக்கிற எல்லா கோயில்களுக்கும் ஐம்பதாயிரம்

ஏகரா சொத்து இருக்காம்! இவ்வளவையும் அவர் மட்டுமே அனுபவிக்கிறதா? அது தப்புன்னுதான் இப்ப, அரசாங்கமே அந்தச் சொத்துக்களையெல்லாம் எடுத்துக்கிட்டு, நமக்கு வரிகளைக் குறைக்கப் போகுதாம்!

மற்றொரு: என்னமோ, வரி குறைஞ்சா சரி; வாழ்வு ஓசந்தா சரி!

காட்சி—10

[திருமுடியார் மாளிகையில் தனியாக அமர்ந்திருக்கிறார். ஆழ்ந்த சிந்தனையைப் பிரதிபலிக்கும் தோற்றம். அவர் மனம் மட்டும் பேசிக் கொண்டிருக்கிறது.]

மனம்: நிலைகுலைத்துவிட்டான் நீச்சன். நிர்மூலமாக்கி விடவேண்டும்! கோயில் சொத்துக்கள் என்றால் கொள்ளையடித்துக் கொண்டு வரப்பட்டவையா என்ன? தேவனின் ஆறுகால பூசைக்கு ஆகும் செலவுக்குக்கூட, இருக்கின்ற சொத்துக்கள் போதியனவா, இல்லை. நேரில் எதிர்க்க ஆற்றல் அற்றுப்போனன் அந்த அறிவு கெட்டவன். சட்டத்தைத் துணைக்கழைத்துக் கொண்டான்! சமூகத்தையே எதிர்க்கத் துணிந்தான். நிலையில் இழிந்தார்க்கு நேர்வழி பயன் தராது. இருக்கவே இருக்கிறது குறுக்கு வழிகள். திருமுடியார்—யார் என்பதைக் காட்டுகிறேன். தீயதை விளைத்தவன், தீயவற்றையே அறுவடை செய்யட்டும்!

[ஆழ்ந்த யோசனையுடனேயே, திருமுடியார் எழுந்து போகிறார். விக்ரமனின் குரல் மட்டும் கேட்கிறது. திருமுடியார் நிற்கிறார்.]

குரல்: எச்சரிக்கிறேன்! முடிந்தால் உங்கள் தேவன் உங்களைக் காப்பாற்றட்டும்! தேவன் உங்களைக் காப்பாற்றட்டும்...!!

திரு: விக்கிரமா! தேவனையே அறைகூவலுக்கு அழைத்து விட்டாய்! அழைக்கப்பட்டவனின் அருள் உனக்கா? எனக்கா? பார்க்கிறேன்.

காட்சி—11

[மன்னன் குமாரவேலனின் தனியறை. அமர்ந்திருக்கும் மன்னனிடம் விக்ரமன்...]

விக்ர: ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மல்ல நாட்டான் போர்த் தினவு கொண்டிருக்கிறானாம். நம் வீரத்தைப் பழித்துப் பேசிக் கொண்டிருக்கிறான் அந்த வீணன். திருநாட்டின் நிலையோ, போர்க் கருவிகள் புதுப்பிக்கப்படவும், புதிய கருவிகளைப் படைக்கவும், வீரர்களுக்குப் புதுமுறை பயிற்சி தரவும், புதிய வீரர்களைச் சேர்க்கவுமான படைப்பெருக்கத்துக்கான கருவூலத்தின் பெரும் பகுதியும் செலவிடப்பட்டிருக்கிறது. நாட்டு மக்களது வாழ்க்கைத் தரம், சற்றே குறைவுற்றுக் காணப்படுவது உண்மைதான்! வேறு வழியில்லை. அரசாங்க வருவாய்க்காகப் பல புது வரிகளையும் விதித்திருக்கிறேன். இனிமேலும் புதிய வரிகளின் பளுவினைச் சுமக்கும் சக்தியில் மக்கள் இல்லை என்பதையும் உணர்கிறேன். மன்னருக்கு மாற்றாரின் மதத்தில் தலையிடவேண்டும் என்ற நிலையில்லை; தேவையுமில்லை. நம் நாட்டுத் தேவாலயங்களின் வருவாய் ஆண்டுக்குப் பல லட்சம் இருக்குமாம்! நாடு போர் ஒன்றை நடத்தியாக வேண்டிய நிலையிலிருக்கும் போது ஆண்டவனின் பேரால் ஆயிரக் கணக்கான பொற்காசுகளைப் பாழாக்குவதை, நாகரிகமுள்ள ஒருநாடு, அனுமதிக்க முடியாது. அதற்காக அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறேன் தங்கள் பேரால்! இனி ஆலயங்களின் வருவாய் அனைத்தும்அரசாங்கத்துக்குச்சொந்தம். ஏழை எளிய மக்கள் வரி கட்டமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆலய வருவாய் மூலம், வரி விலக்கு தரலாம் என்று நினைக்கிறேன். தங்கள் அனுமதி வேண்டும்! நம் படையில் சிறப்புச்சேவை செய்த வீரன் குணாளன் என்பவனுக்குத் தாங்கள் 'அஞ்சாநெஞ்சன்' என்ற விருது வழங்கியது நினைவிருக்கலாம். துணைத் தளபதிகளில் ஒருவனாக நியமிக்க நினைத்திருந்தேன்! பட்டாளப் பணியே தேவையில்லை என்று அறிவித்திருக்கிறான் இப்போது. அவன் தந்தை அறிவானந்தர் ஆட்சிக்கு எதிராகச் செயல்படுவதாகக் கேள்விப்பட்டேன்...

குமார: நிறுத்துங்கள் பாதுகாவலரே! நீண்ட நேரம் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். அதனால்தான் அறிவானந்தர் பற்றி அப்படிக் கூறுகிறீர்கள்.

விக்ர: இல்லை மன்னா! ஆட்சிக்கு எதிராக என்றால் சதித்திட்டம் தீட்டியோ, மன்னருக்கெதிராக மக்களைத் தூண்டிவிட்டோ, எதிரி நாட்டாரிடம் கையூட்டுப் பெற்றுக் காட்டிக் கொடுக்கும் முறையிலோ அல்ல—போர் கூடாது என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம். நாம் எல்லாம் போர் வெறியால் கூத்தாடிக் கொண்டிருக்கிறோமாம். ஏதோ ஆராய்ச்சி செய்கிறாராம்! ஆராய்ச்சியில் வெற்றி பெற்றால் ஏழைகள் வாழ்வு மட்டுமல்ல—அரசனின் வாழ்வும் உயரும் என்று பேசிக்கொண்டிருக்கிறாராம்!

குமார: நான்கூட கேள்விப்பட்டேன்! அறிவானந்தரின் ஆய்வுக்கூடம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறதாம். அபூர்வமான பல உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். தலையீடு தேவையில்லை. ஆலய விஷயம் சரியான நடவடிக்கைதான்! மல்ல நாட்டானுக்கு மண்டியிட தளபதி விக்ரமர் கோழையல்ல; குமாரவேலனின் குடிப் பெருமை குன்றிக் கிடக்கவில்லை என்பதை முறைப்படி உணர்த்திவிடுங்கள்! சரிதானே தளபதி!

விக்ர: மன்னர் உத்திரவு!

[மண்டியிட்டு வணங்கிப் போகிறான்.]

காட்சி—12

[அறிவானந்தரின் ஆய்வுக்கூடத்தில் வெடிச்சத்தம் கேட்கிறது. திருமதியும் குணாளனும் பரபரப்புடன் ஓடிவந்து பார்க்கிறார்கள். குழாய் வெடித்துச்சிதறி அறிவானந்தரின் முகத்தில் கண்ணாடித் துண்டுகள் பட்டுக் கிடக்கிறார். குணாளனும் திருமதியும் கண்ணாடித் துண்டுகளை நீக்கி, அவரைத் தூக்கி வந்து ஒரு சாய்வு நாற்காலியில் போட்டு, உபசாரஞ் செய்கிறார்கள்.

குணாளன் முகத்தைத் துடைத்து விடுகிறான். திருமதி மருந்தைவிட்டு, ஒரு துணியால் கட்டி விடுகிறாள். அறிவானந்தர் கண்விழித்து எழுந்து உட்காருகிறார்]

திரு: அப்பா! எப்படி இருக்கிறது?

அறி: நன்றாகத்தானிருக்கிறேன்! (அவர்களை விலக்கிக் கொண்டு ஆய்வுக்கூடத்தை நோக்கிப் போகிறார்.)

குணா: போதும், அப்பா! படுத்துக் கொள்ளுங்கள்; நாளைக்குக் காலையில் பார்த்துக் கொள்ளலாம்!

அறி: நாளை நாளையென்று எதை ஒத்திப்போட முடியும் குணாளா! இன்று எவ்வளவு நாழியானாலும், அதை முடித்துவிட்டால்தான் எனக்குத் தூக்கம் வரும்!

திருமதி: இப்பொழுதுதான் குழாய் வெடித்து விபத்து வந்தது! (சிதறிக் கிடக்கும் கண்ணாடித் துண்டுகளைச் சேர்க்கிறாள்.) அதற்குள் மறுபடியும் அதே வேலைக்கு வந்து விட்டீர்கள்!

அறி: (உடைந்த கண்ணாடித் துண்டு ஒன்றை எடுத்துப் பார்த்த வண்ணம்) திருமதி! நாற்பது நாட்களாக எவ்வளவு சோதனைகள்! எத்தனை தடவை திருப்பித் திருப்பிச் செய்தேன்! எவ்வளவு மனப் போராட்டம், சிக்கல்கள்! இந்தக் கண்ணாடிக் குழாய் வெடித்திராவிட்டால், என் மண்டையல்லவா இந்நேரம் வெடித்திருக்கும்? குணாளா! இயற்கையிடமிருந்து ஒரு இரகசியத்தைப் பெறுவது, எதிரியிடமிருந்து ஒரு கோட்டையைப் பிடிப்பதைவிடக் கடினமான செயல்!

[அறிவானந்தர் பேசிக் கொண்டே குழாய்களை அடுக்கி வைக்கிறார்.]

குணா: அப்பா களைப்பாக இருக்கிறீர்கள்! சற்றுப் படுத்து உறங்குங்கள்! நான் அதுவரையில் பார்த்துக் கொள்கிறேன்!

அறிவா: குணாளா! அஞ்சாநெஞ்சன் என்ற வீர விருது பெறத்தான் இதுவரையில் பயிற்சி மேற்கொண்டிருந்தாயே தவிர, இந்தக் கிழவனின் ஆராய்ச்சி பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளாமலேயே இருந்துவிட்டாய். பட்டாளத்தில் பணி வேண்டாம் என்றவுடன் பற்றேற்பட்டுவிட்டது, ஆராய்ச்சி யில்! வீரமும், விவேகமும் இருந்தால் எதிரியின் தலையை, தாளின்கீழ்ப் போட்டு மிதிக்க முடியும். இது அப்படி அல் லவே! இயற்கையின் இரகசியங்கள் மகனே! மிகுந்த கவனம் தேவை! கடுமையான உழைப்பு வேண்டும்! முடியுமா உன் னால்?

குணா: முழு அளவும் உழைக்காமல், உரிமைக்கும், ஊதியத்துக்கும் மட்டுமே உரத்த குரலெழுப்புவோரை உற் பத்திச் செய்துதரும் நாளாக இது இருக்கிறதேயென்று அப்படிக் கேட்கிறீர்களா அப்பா! உயர்வு, உழைப்பில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தவன்; உணர்த்துபவன்! உங் கள் மகன் அப்பா நான்! உங்கள் மகன்!

அறி: (புன்னகையுடன்) சரி, பார்க்கலாம்! இந்தக் குழாய்மீது சூடேறியதும் கொதித்து ஆவி கிளம்பும் பொழுது (ஒரு குப்பியைக் காட்டி) இந்தப் புட்டியிலிருப் பதை (ஒரு குறியிட்டு) இந்த அளவுக்கு ஊற்றவேண்டும்! பின் அது அதிகமாகக் கொதித்து வருகிறதா என்று பார்க்க வேண்டும்.

குணா: சரியப்பா!

[குணாளன் மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருக்கிறான். அறிவானந்தரும் கவனித்துக்கொண் டிருக்கிறார். ஆனால் களைப்பு மிகுதியால் சாய்ந்து உறங்கிவிடுகிறார்.]

திருமதி: அண்ணா! ஆபத்தான சோதனை. சற்றுமுன் தான் வெடித்தது!

குணா: அதற்காகப் பயந்து ஓடிவிடச் சொல்கிறாயா? அப்பா மட்டும், அவ்வளவு ஆபத்துக்களுக்குமிடையில், மூர்ச் சையாகும் வரை நிற்கவில்லையா?

திருமதி: இதைப்போல் பல தடவை அவர் மூர்ச்சையாகி விழுந்திருக்கிறார்! மூர்ச்சை தெளிந்ததும், முன்னைவிட உற்சாகத்துடன் வேலைக்குப் போவார்!

குணா: பாவம், அவருக்கு உதவியாக யாரும் கிடையாது!

திரு: உதவிக்கு என்றுதான் மாதவன் இருக்கிறான்! ஆனால் உதவி வேண்டிய சமயத்தில் மட்டும் அவன் அருகில் இருக்கமாட்டான்.

[குழாயில் கொப்பளம் எழுகிறது. குணாளன் 'உஸ்' என்று அமைதிப்படுத்திவிட்டு, அருகில் உட்கார்ந்து கவனிக்கிறான்.]

[ஆய்வுச் சாலையில் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒலிகள் கேட்டபடி இருக்கின்றன. தண்ணீர்க் கடிகாரத்தில் தண்ணீர்ச் சொட்டுகள் மெதுவாக விழுந்தபடி இருக்கின்றன. குணாளன் இந்தப் புட்டியை எடுத்து இந்த அளவு ஊற்றி, இந்தக் குறி வரும்வரைப் பார்த்து...என்று தன் கையால் காட்டியபடி, தனக்குத் தந்த வேலையை மறந்துவிடாமலிருக்க மனப்பாடம் செய்தபடி உட்கார்ந்திருக்கிறான்.

குழாயில் குமிழிகள் வரத்தொடங்கி சத்தம் அதிகமாகிறது. குணாளன் மிகப் பயத்துடன், புட்டியை எடுத்துத் தயாராக வைத்திருந்து, அறிவானந்தர் சொன்னபடி ஊற்றுகிறான். கொந்தளிப்பு அதிகமாகித் திடீரென்று அடங்கிவிடுகிறது. அறிவானந்தர் சொன்னதைப்போல பொங்கி வழியாமல், அது அடங்கி, கீழ் கட்டிகள் உண்டாகின்றன. குணாளன் திகைப்படைகிறான்.]

குணா: (உறக்கத்திலிருக்கும் அறிவானந்தரை எழுப்பி) அப்பா! நீங்கள் சொன்னபடி செய்தேன். ஆனால் கொதித்து வழியாமல் அடங்கிவிட்டது!

அறிவா: (கண்ணைக் கசக்கிக் கொண்டு) என்ன, என்ன?

[விரைந்து வந்து சோதனைக் குழாயைப் பார்த்துவிட்டுப் புன்னகை செய்கிறார்.]

37824
MARAIMALAI ADIGAL LIBRARY

குணா: ஏனப்பா! நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா?

அறி: இல்லை குணாளா! சரியாகச் செய்திருக்கிறாய். நான் எதிர்பார்த்ததைவிடச் சீக்கிரமாகப் பலன் கைகூடி வருகிறது!

குணா: நீங்கள் எதிர்பார்த்த முடிவு கிடைத்து விட்டதா?

அறி: அதற்குள் அவசரப்படாதே! எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியில் ஒரு படி முன்னேறியிருக்கிறோம்; அவ்வளவு தான். இனி முடிவை நோக்கிக் கடக்க வேண்டிய படிகள் பல இருக்கின்றன! பயணம் கடுமையானதாயிற்றே!

குணா: அந்தப் பயணத்தில் நானும் உங்களுக்குத் துணையாக இருப்பேன் அப்பா!

[தந்தையும், மகனும் சோதனையைப் பார்த்தபடி நிற்கிறார்கள்.]

காட்சி—13

[ஆய்வுக்கூட அலுவலில் தந்தையும் மகனும் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளனர். காலம் ஓடுகிறது. நாட்டிலே பல்வேறு இடங்களிலே மாறுதல்கள் தெரிகின்றன. கொல்லன் உலைக்கூடத்தில் ஆயுதங்கள் வடித்தெடுக்கப்படுகின்றன. விக்ரமன், வாட்களைச் சுழற்றிப் பார்த்துவிட்டு, திருப்திப் படாமல் வீசி எறிகிறான். விக்ரமன் அமைச்சர் அருளானந்தருடன் பாசறைப் பக்கம், குதிரைமீது செல்கிறான்.]

விக்ர: என்ன, அருளானந்தரே! எனக்குத் திருப்தியாயில்லை, இந்த ஆயுதங்கள்.

அரு: தரமான ஆயுதங்களுக்கான திட்டம் தயாராக இருக்கிறது...ஆனால் போதுமான அளவு பணம் இல்லை... சிரமமாக இருக்கிறது.

விக்ர: நாட்டுப் பாதுகாப்பு தமது கடமை என்பதை மறந்தனரோ மக்கள்...நன்றி கெட்ட மக்களய்யா இவர்கள்...

அரு: வரி செலுத்தவும் வாட்டமாம்! தொழில்வளம் குன்றிக்கிடக்கிறதாம்...

விக்ர: மூக்கால் அழுவார்கள்...வேறென்ன தெரியும் இந்த மக்களுக்கு? அருளானந்தரே! அல்லும் பகலும் எந்தநேரமும் திருநாடு கீர்த்தி பெறவேண்டும், மண்டலங்கள் பலவும் அதன் முன் மண்டியிடவேண்டும், வீர வெற்றிகள் பெற வேண்டும் என்பது பற்றித் திட்டம் தீட்டியபடி இருக்கிறேன். இந்நாடு பொன்னாடு ஆகவேண்டும். நன்றி காட்டக் கூடவா மனம் இடம் தரவில்லை.

அரு: மக்கள் தங்களை வாழ்த்தாமலில்லை. விக்ரம பூபதி பெற்ற வெற்றியால்தான், நாடு, அடிமைக்காடு ஆகாமல் இருக்கிறது என்பது பற்றி பெருமையாகத்தான் பேசிக்கொள்கிறார்கள்...நாடு அடிமைக் காடு ஆகவில்லையே தவிர...(விக்ரமன் அருளானந்தரை முறைத்துப் பார்க்க,] நாடு, பூந்தோட்டமாகவில்லையே என்று கவலை...

விக்ர: அருளானந்தரே திருநாடு; வளம் அதிகம் கொண்டதல்ல...தங்கம் விளையும் நாடுகள் உள்ளன...மல்ல நாட்டின் மண்வளம், சொல்லி முடியாதாம்...உம்! என் திட்டப்படி காரியம் நடைபெற்றால், திருநாடு செல்வக்களஞ்சியமாகும்.

காட்சி—14

[ஆய்வுக்கூடத்தில்]

அறிவா: கல்லிலே நார் உரிப்பது போல உழைக்கிறார்கள். மக்கள்..படுகிற பாடு அதிகம்...கிடைக்கும் பலன் குறைவு.

குணா: ஆமப்பா...மிருக வாழ்க்கை என்றுகூடச் சொல்லலாம்...

அறி: மிருகங்களைக் கேவலமாகப் பேசாதே, குணாளா! அவைகளுக்கு என்ன மகனே குறை! பிச்சை எடுப்பதில்லையே! நத்திப் பிழைப்பதுமில்லை! உணவு, உடை, குடி இருக்கும் இடம், மனிதனுக்குத்தான் இல்லை; மயிலுக்குத் தோகை இருக்கிறது, அழகான தோகை..மனிதனுக்கு ஆடை இல்லை, போதுமான அளவு...

குணா: நாடு வளம் பெற்றால், செல்வம் வளரும்...

அறி: மனிதன், குறைந்த அளவு உழைத்து, நிறைந்த அளவு பலன் காண்பான்...இப்போது அவனுக்கு, ஓயாத உழைப்பல்லவா...சுருண்டு கீழே விழுகிறவரையில் உழைக்கிறான்...முயற்சி திருவினையாக்கும் குணாளா! எல்லோரும் இன்பவாழ்வு பெற வழி காண முடியும்...

குணா: பல நாடுகள் உள்ளன அப்பா! பழமுதிர்ச் சோலைகள், பாங்கான வயல்கள், சொகுசான சோலைகள், தங்கச் சுரங்கங்கள்...

அறி: இயற்கை அன்னை, இங்கும் எல்லாச் செல்வத்தையும் வைத்துக் கொண்டுதான் இருக்கிறாள், மகனே... தாய், தன் குழந்தையிடம் வேடிக்கை காட்டிக் கொஞ்சுவதில்லை, பழம் தராமல் எல்லாவற்றையும் ஒளித்துவைத்துக் கொண்டு அதுபோல், வேடிக்கை காட்டுகிறாள்...செல்வக் களஞ்சியம் காணலாம்...நமது வெற்றி அதிலேதான் இருக்கிறது...உன்னதமான ஓவியம் தீட்டுவதற்கு, வண்ணங்கள் வகை வகையாக வேண்டாமா...வண்ணம் தேடிக் கொண்டுதான் இருக்கிறோம்...

## காட்சி—15

[தலைநகரின், வேறோர்புறம். வணிகச் சீமான்கள் வாழும் பகுதிக்குப் புதிதாகக் குடிவந்த முத்துவணிகர் கார்மேகமும், அவரது சகோதரன் மணிவண்ணனும், அன்னையார் அமராவதித் தாயாரும் அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள்.]

அமராவதி தாயார்: நாடு விட்டு நாடு வந்து அப்படி என்னதான் வாரிக் கொட்டப் போறியோ! உருப்படற மாடுன்னா உள்ளூர்லேயே விலைபோகாதா?

கார்: உனக்குத் தெரியாதும்மா, திருநாட்டு வளத்தைப் பற்றி. கழுதைக்கு கற்பூர வாசனையும், கழுகுக்கு கமல மலரின் அழகும் தெரியாது. முத்தின் அருமை இந்த நாட்டுக்குத்தான் தெரியும்.

மணி: ஆமாம்மா! முத்தோட அருமை தெரியாமெ தான் அந்தக் காலத்திலே ரோம் நாட்டுப் பேரரசி சாராயத்திலே கலந்து கரைச்சிக் குடிச்சாளாம்! அருமை பெருமை புரிஞ்சவர் அண்ணன்! அதனால்தான்...

கார்: டேய் மணிவண்ணா! சித்திரம் எங்கே இருக்கு? வண்ண ஓவியம் வரையப் பட்டிருக்கிற முறை என்ன? காலத்துக்கும், இயற்கைக்கும் கவிதைகள் பொருந்தி வருதாங்கிற பைத்தியக்காரத்தனமான ஆராய்ச்சியிலேயும், அழகிலேயும் புதைஞ்சி கிடக்கிறவன் நீ. அருளும் திருவும் ஒன்றாக அமைந்திருப்பது திருநாடு. அதன் அருமை பெருமைகளை அறிந்துப் பயன்படுத்திச் கொள்ள வந்திருக்கிறேன் நான்.

அமரா: என்னமோ போங்க! நீங்க ரெண்டு பேரும் ரெண்டு கண்ணு எனக்கு. ஒண்ணு உயர்வுமில்லே; இன்னொன்னு தாழ்வுமில்லே. ஒற்றுமையா இருந்து உழைக்கணும்; உயரணும்.

மணி: அண்ணா! வணிகர்கள் என்றால் எப்போதுமே சமூகத்தின் ஒரு தனி அங்கமாகவே கருதப்பட்டுவிடக்கூடாது. சமூகத்தில் அதுவும் ஒரு பகுதி! சமூக மக்களின் உயர்வுக்கும் தாழ்வுக்கும், நல்லதற்கும், கெட்டதற்கும் வணிகர்களும் காரணமாக இருக்கிறார்கள்—என்றெல்லாம் பெரியவர்கள் பேசக் கேட்டிருக்கிறேன்! வணிகத்தின் பேரால், இருப்பவர்கள், இல்லாதவரிடமிருந்து சுரண்டும் தன்மையை சுபாவமாகக் கொண்டுவிடக் கூடாது.

கார்: ஆமாம்! நான் கொள்ளையடிக்க வந்திருக்கிறேன்; போடா போ, பைத்தியக்காரா! நான் வந்திருப்பதற்கு வகுத்துக் கொண்டிருக்கும் கொள்கையே வேறு! இல்லாதார்—இருப்பார்—சுரண்டுவோர்—சொகுசு வாழ்வுக்காரர்கள் பற்றியெல்லாம் நான் கவலைப்பட முடியுமா? ஏழை என்பதற்காக இந்தா எடுத்துக் கொள் என்று ஒரு எழில் முத்தைத் தந்துவிட்டால்? ஏற்றம் பெற்றுவிடுவானா என்ன?

மணி: உங்கள் போக்கே எனக்குப் புரியவில்லை!

கார்: புரிந்து கொள்ளும் நாள் வரும்டா! புரியாமலா போகப் போகுது. போ! போய், படம் போடு; பாட்டெழுது.

அம: நல்ல புள்ளைங்கடாப்பா நீங்க. ஒரு வயத்திலே தான் பொறந்திருக்கீங்க! ஒருத்தருக்கொருத்தர் இப்படியா இருக்கிறது!

காட்சி—16

[குணாளன் சோலையொன்றில் அமர்ந்து பொழுது போக்கிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு அருகில் மணிவண்ணன் அமர்ந்து கவிதையொன்றை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறான். அதைக் கவனித்த குணாளன்...]

குணா: அற்புதமா இருக்கே பாட்டு! யார் எழுதினது?

மணி: யாருண்ணே தெரியலே! நேற்று அங்காடிப் பக்கம் போயிருந்தேன். கீழே கிடந்தது ஓலைச் சுவடி ஒன்று. எடுத்துப் பார்த்தேன்... இன்பமூட்டும் இசைப் பாடல்கள்! நீங்க யாரு?

குணா: இந்த நாட்டுக்குச் சொந்தக்காரன்தான்! நாட்டு மக்கள் வாழ்வு நலியக்கூடாதென்று பாடுபடற கூட்டத்துக்குச் சொந்தக்காரன்தான்! நீங்க?

மணி: வெளியூரு. ஆனால் வந்த இடத்திலே இருக்கிற வாழ்வு, வந்தவுங்களுக்கே என்கிற வேதாந்தம் பிடிக்காதவன்.

குணா: அழகா தத்துவம் பேசுறிங்களே!

மணி: ஒவ்வொரு காட்சிகளும், கற்பனைகளும் தத்து வாசிரியர்களாக இருந்து பாடம் புகட்டிக் கொண்டிருக்கின் றனவே! வேலும், வாளும் புகட்டுகின்ற தத்துவங்களைக் காட்டிலும், குடியும் கோனும் கூறுகிற தத்துவங்கள் எப் போதுமே என்னைக் கவர்ந்து விடுகின்றன.

குணா: கவிதைகள் என்றால் அதிகம் பிடிக்குமோ?

மணி: கனவுகளுக்குக் கொஞ்சம் கற்பனை முலாம் பூசிப் பார்க்கும்போது இன்பமூட்டும் எழிற் காட்சிகளாகி விடுகின்றன. கண்டு களிக்க வேண்டியதுதானே!

குணா: அபாரம், அபாரம்!

[சட்டென்று எழுந்து மணிவண்ணனை அப்படியே ஆரத்தழுவிக் கொள்கிறான். அவன் பிடியி லிருந்து விடுபட்டு...]

மணி: உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்!

குணா: என்னைப் பற்றியா! எந்தப் பகுதியைச் சொல் வேன்?

மணி: ஓகோ, பல பகுதிகள் இருக்கிறதா, உங்கள் வாழ் வில்!

குணா: பல அல்ல சில; முதற்பகுதி—மண்ணை நேசிக்க வேண்டும் என்பதற்காக, மண்ணிலே தவழ்ந்து கிடந்தேன். அடுத்து, பார்வை ஒரே திசையில் மட்டும் இருக்கக் கூடாது என்பதற்காகக் கவிழ்ந்தேன். அப்புறம் பலதிசைப் பார்வை மட்டும் போதாது. பகுதிகளிலும் பாதம் பதிக்கவேண்டும் என்று ஊர்ந்தேன், தவழ்ந்தேன், நடந்தேன்...(மணிவண் ணன் வாய்விட்டுச் சிரிக்கிறான். சிரித்துக் கொண்டே...)

மணி: பால் குடித்தேன்; பழம் தின்றேன்; சோறுண் டேன்...அப்படித்தானே?

குணா: (சிரித்துக் கொண்டு) இல்லை, இல்லை! குழந் தையாக இருந்தேன்; சிறுவனானேன்! இளைஞனானேன்! அப்புறம்...

மணி: அப்புறம்...?

குணா: அப்புறம், பெற்றோர் பட்ட கடன் தீர்ந்தது; பெரியவன் நான்பட்ட கடன் எஞ்சியது. பட்டாளத்தில் சேர்ந்தேன்; பணியாற்றினேன்! நாடு வென்றது! நலிந்தனர் மக்கள்! நலிந்தவரைக் காக்க நல்வழி தேடும் பகுதிதான் இப்போது...

மணி: நகைச்சுவையோடு நல்ல கருத்தைப் பேசுகிறீர்கள். மகிழ்ச்சியடைகிறேன். நல்ல நண்பர்! இனியவர், நீங்கள்!

குணா: வீட்டுக்கு வாருங்களேன்!

மணி: இன்னொரு நாளைக்கு...எங்கே இருக்கிறீர்கள்?

குணா: அறிவானந்தர் ஆராய்ச்சிக்கூடம் என்று கேட்டாலே போதும்!

மணி: யார்? அறிவானந்தரா? நீங்கள் அவருக்கு...

குணா: எனக்கு அவர் தந்தை!

மணி: அறிவானந்தரின் மகன் குணாளனா? நீங்கள் தானா? அஞ்சாநெஞ்சன் என்ற வீர விருதுக்குச் சொந்தக்காரர் நீங்கள்தானா?

குணா: இவ்வளவு அறிந்து வைத்திருக்கிறீர்கள். அப்பாவை, அறிவீர்களா?

மணி: ஊரெல்லாம் புகழக் கேட்டிருக்கிறேன். அவசியம் பார்க்க வேண்டும்! நாளைக்கே வருகிறேன்!

குணா: கண்டிப்பாக வரவேண்டும்!

காட்சி—17

[திருமுடியார், மடம் ஒன்றில் அமர்ந்திருக்கிறார். விக்ரமனால் வஞ்சிக்கப்பட்டு, கோவில்களின் நிர்வாகத்தை இழந்த பின்பு எப்படியும் விக்ரமனை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற நோக்கம் அவரைக் குடைந்து கொண்டிருக்கிறது. ஆட்சி

அதிகாரத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டிருக்கும்போது, ஆண்டியாகிவிட்ட ஒருவனால் என்ன செய்ய முடியும்? என்றாலும் விக்ரமனைப் பழி வாங்கியே தீருவது என்று துடியாய்த் துடிக்கிறார். விக்ரமன் பழி வாங்கப்படவும் வேண்டும்; இழந்த தன் பெருமையையும் பீடினையும் மீட்டாக வேண்டும். விக்ரமனைவிட, ஈசன் அருள் பெற்ற தானே மேலோன் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்பன போன்ற எண்ண அலைகளால் ஈர்க்கப்பட்டு இருக்கிறார். இந்த நிலையில்தான் அறிவானந்தரது ஆராய்ச்சிகள் பற்றியசெய்திகள் அவருக்கு எட்டுகின்றன. முடிவான ஆராய்ச்சியின் இடைப்பட்ட சில வெற்றிகள் பற்றி அவருக்குக் கிடைத்த செய்திகள் அவரது திட்டத்துக்கு வலு ஊட்டுவனவாயிருக்கக் கூடும் என்று நம்புகிறார். எனவே, அறிவானந்தரது ஆராய்ச்சிக் கூடத்துடன் தொடர்பு கொள்ள முயன்று தோற்கிறார். ஆகவே அங்கே தொடர்பு கொண்டிருப்பவர்கள் பற்றி அறிய முயன்று, சரியான வழி அதுதான் என்று முடிவுக்கு வருகிறார். முகத்தில் மகிழ்ச்சிக்குறி அரும்புகிறது.]

காட்சி—18.

[ஊரின் புறப்பகுதி. திருமதி பச்சிலை வகைகளைத் தேடிக் கொண்டிருக்கிறாள். அங்கு மணிவண்ணன் வருகிறான். அவனைப் பார்த்துவிட்டு...]

திருமதி: நான் பச்சிலை பறிக்க வந்தேன்!

மணி: நானுந்தான்! உன் அப்பா, எனக்கும் அந்த வேலையைத் தந்துவிட்டாரே! எங்கே நான் உன்னைப் பறித்து விடுவேனோ என்று பயப்படுகிறாயா, திருமதி!

திருமதி: ஆசையைப் பாருங்களேன், ஆசையை! வேலைக்கு வந்து ஆறு மாசம்கூட ஆகலே! அப்பாவுக்குத் துணை வேணும்னா...

மணி: நான் உனக்குத் துணையா வந்துட்டேன்னு நினைக்கிறியா திருமதி! வரக்கூடாதா? அந்தப் பாக்கியம் எனக்குக் கிடையாதா?

[அவள் நிற்குமிடத்துக்கு நெருங்கி வருகிறான்.]

திருமதி: அங்கேயே நில்லுங்க!

மணி: திருமதி! ஆராய்ச்சி செய்யும்போது ஆராய்ச்சிக் கருவிகளை விட்டு எட்டி நின்றால் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. தெரியுமா? மிகுந்த முன் எச்சரிக்கை வேண்டும். ஆழ்ந்த சிந்தனை வேண்டும். துல்லியமான நினைவு தேவை. துவளாத மனம் இருக்கவேண்டும்...

திரு: ரொம்பவும் அனுபவம் போலிருக்கு!

மணி: அவசியப்படும்போது எடுக்கின்ற நடவடிக்கை தானே திருமதி, இன்னொரு சந்தர்ப்பத்துக்கு அனுபவமாகி விடுகிறது!

திரு: இந்த ஆராய்ச்சி அனுபவத்தை அப்பாவிடம் வைத்துக் கொண்டால் அவருக்கும் உபயோகமாக இருக்கும்; உங்களுக்கும் பலன் கிடைக்கும்.

மணி: எந்தெந்த இடத்தில் எந்தெந்த ஆராய்ச்சி என் பதற்கு முறையில்லையா? திராவகம் இருக்கிறதே திருமதி, அதில் வெள்ளியையும் கரைக்கலாம், தங்கத்தையும் கரைக் கலாம்! வெள்ளியைக் கரைக்கும்போது ஒருவித பலன்; தங்கத் தைக் கரைக்கும்போது வேறொரு பலன். பயனும் அப்படித் தான்!

திரு: ஏதேது! அப்பாவுக்கு முன்னே, நீங்களே எல்லா ஆராய்ச்சியையும் முடிச்சிடுவிங்கபோலே இருக்கே!

மணி: விஞ்ஞான ஆராய்ச்சியை அவரிடமிருந்துதானே பழகிக் கொள்கிறேன். யவன நாட்டு அனுபவம் அவருக்கு அந்த முறையில் பயன்படுகிறது. நிறைந்த இயற்கை நூல் பயிற்சியை நாட்டுக்குப் பயன்படுத்த முயல்கிறார். நான் உன் அப்பாவோடு பழகத் தொடங்கினேன்! ஆராய்ச்சிஅறிவு கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. உன் அண்ணன் குணாளனுடன் பழகத் தொடங்கினேன்; தமிழர்களின் உயரிய பண்பாட்டைக் கற்றுக்கொள்ள முடிந்தது. இப்போது உன்னிடம் பழக நினைக்கிறேன்...

திரு: எதைக் கற்றுக் கொள்ளப் போகிறீர்களாம்?

மணி: திருமதி, திருமதி! மானைப் பார்த்து, அதன் மானத்தைப் பற்றி அறிகிறோம்; பசுவைப் பார்த்து அதன் எளிமையை உணர்கிறோம். பஞ்சவர்ணக் கிளியைப் பார்த்து எழில்களின் கூட்டுச்சேர்க்கை எப்படி இருக்கும் என்று கற்கிறோம்! இயற்கையின் படைப்பில் எத்தனையோ இரகசியங்கள் இருக்கின்றன என்றுதானே உன் அப்பாவும் ஆராய்ச்சியில் மூழ்கிக்கிடக்கிறார். நாமெல்லாம் அவருக்குத் துணையாக இருக்கிறோம்; எழிலின் இருப்பிடமாய், இன்பத்தின் பிறப்பிடமாய், குயிலுக்குக்கூட குரல் கொடுப்பவளாய் வாழ்ந்தால் உன்னோடு வாழவேண்டுமென்ற உள்ளக் கிளர்ச்சியை ஊட்டுபவளாய், எழில் வடிவத்தின் இன்பக் கலவையாய் இருக்கின்ற உன்னிடமிருந்து கற்றுக்கொள்ள எத்தனையோ இருக்கிறதே திருமதி! என்னையேஉன்னிடமிருந்து தானே இப்போது உணர்ந்திருக்கிறேன்.

திரு: போதுமே புகழ்ச்சி! புகழ்ச்சி ஒரு மயக்கம்;அதிலே நான் தேனீயாய் விழுந்துவிடுவேன்னு நினைக்காதீங்க!

மணி: நீ தேன் திருமதி, நான்தான் தேனீ!

திரு: இருக்கும் இருக்கும்! அப்பாகிட்டே சொல்கிறேன்.

மணி (குழைவாக) சொல்லேன்! எனக்கென்ன பயமா? எழிலரசி இத்தனை வயதாகி இருக்கிறாளே, இவளுக்கு என்னென்ன ஆசைகளோ இருக்குமே! நாம் ஆராய்ச்சியிலேயே

மூழ்கிக் கிடந்துவிட்டோமே! அடடா, தவறு செய்துவிட்டோம்! நம் தவறை நல்லபடி மணிவண்ணன் உணர்த்திவிட்டான் என்று நினைத்துப் பாராட்டத்தான் செய்வார்! தெரியுமா திருமதி?

திரு: ரொம்பவும் துணிச்சல்தான்!

[ஏதோ பச்சிலையொன்றைப் பறிக்கக் கீழே குனிகிறாள். மணிவண்ணன் அவளை நெருங்கி, அவள் இடுப்பில் இருகரங்களையும் கோர்த்துப் பிடித்துக் கொண்டு]

மணி: இப்போது சொல் திருமதி! என் துணிச்சல் சரியானதுதானா, இல்லையான்னு!

[திருமதி சிரித்துக் கொண்டே நிமிர்கிறாள். மணிவண்ணன் அவளை இழுத்து அணைத்துக் கொள்கிறான்.]

திரு: (அணைப்பிலிருந்து விடுபட்டு) பொல்லாத குறும்புக்காரர் நீங்கள்!

மணி: இந்தக் கரும்பைச் சுவைக்க, குறும்புதானே வேண்டியிருக்கிறது! என் தவறா இது? நீ அழகா இருப்பது தவறு; அதைவிட அறிவுமிக்கவளாக இருப்பது தவறு; அதை விடப் பெரிய தவறு அறிவானந்தருக்கு மகளாக மட்டும் இருப்பது?

திரு: ஊம்? அப்புறம்...

மணி: எனக்கு...எனக்கு...

திரு: சொல்லுங்களேன்! சொல்லமுடியவில்லையா?

மணி சொல்லிவிடுவேன். சொல்லட்டுமா?என் வாயால் சொல்லிக் கேட்கவேண்டும். சொல்லிவிடுகிறேன்!

[சட்டென்று திருமதி அவன் வாயைப் பொத்தி விடுகிறாள்.]

மணி: இது குறும்பு அல்லவா திருமதி! ஒரு பெண், ஒரு ஆடவனைத் தொடலாமா?

[அவள் நாணத்துடன் தலைகுனிந்து கொள்கிறாள்.]

மணி: திருமதி! நேற்றிரவு, நீ தூங்கிவிட்டாய்! அப்பாவின் ஆராய்ச்சியில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது தெரியுமா?

திரு: என்ன, என்ன! புதிய திருப்பமா?

மணி: ஆமாம் திருமதி! ஒருவித பொடி கண்டுபிடித்திருக்கிறார். அதில் ஒருதுளியை எடுத்து ஒருவர்மேல் தெளித்தால் போதும்; பட்ட இடத்தில் ஆறாத இரணம் உண்டாகிவிடும். இந்தப் பொடியால் ஆபத்து அதிகம்!

திரு: (வருத்தத்தோடு) எனக்குப் பிடிக்கவில்லை, இந்தக் கண்டுபிடிப்பு!

மணி: ஏன் திருமதி?

திரு: அழிவுச் சக்திக்கு விஞ்ஞானப் படைப்புகள் பயன்படக் கூடாது என்பவர் அப்பா! அவரே அழிவுப் பொருள்களைப் படைக்கலாமா?

மணி: கூடாதுதான்—கண்டுபிடிப்பை அழிவுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பது குறிக்கோளானால்! இலட்சியம் அது அல்லவே! இலட்சியப் பாதையில் இப்படி ஒரு கண்டுபிடிப்பு! எதிர்ப்பட்டது இது! இதுவேதான் ஆக்கச் சக்திக்குப் பயன்படும் மூலப் பொருளாக இருக்கும்போது ஒதுக்கிவிட முடியுமா?

திரு: அப்படியா! அப்பாகூட எனக்கு இப்படியெல்லாம் விளக்கவில்லை.

மணி: அவர் உனக்கு எல்லாவற்றையுமே விளக்க முடியுமா? விளக்க வேண்டியதைத்தானே அவரால் விளக்க முடியும்! மீதியை...

[குறும்பாகச் சிரிக்கிறான்; அவளும் சிரித்துவிடுகிறாள்.]

காட்சி—19

[அறிவானந்தரின் ஆராய்ச்சிக்கூடம். குணாளன் பச்சிலை மூலிகைகளிடையே மூழ்கி இருக்கிறான். திருமதி சிலவகை பச்சிலைகளை ஒரு கூடை நிரம்ப எடுத்துக் கொண்டு வருகிறாள்.]

திரு: அண்ணா! நீங்கள் கேட்ட மூலிகையைக் கொண்டு வந்துவிட்டேன். சுலபத்தில் கிடைக்கவில்லை. பாறைகளின் பக்கங்களில் தேடித் தேடிப் பறிக்க வேண்டியிருந்தது. அதனால்தான் நேரம் அதிகமாகிவிட்டது!

குணா: இருக்கும்! தேடித் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்! மூலிகையை அந்தக் கூடையில் போட்டு விடு!

[குணாளன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதைப் போல் இருக்கிறான். புன்முறுவலுடன் திருமதி மூலிகையை வைக்கப் போகிறாள். கூடையில் பாதியளவு அவள் கொண்டு வந்ததைப் போன்ற பச்சிலை இருக்கிறது. திகைப்படைந்து, அண்ணனைப் பார்க்கிறாள். அண்ணன் மூலிகை எடுக்க வந்திருக்க வேண்டும் என்று அவள் புரிந்து கொள்கிறாள். பின்பு குணாளனின் பின்னால் வந்து நிற்கிறாள். குணாளன் கவனிக்காததுபோல இருக்கிறான்.]

திரு: (மெதுவாக) அண்ணா!

குணா: (வேலையில் ஈடுபட்டவனைப் போல) என்ன திருமதி?

திரு: மூலிகை பறிக்க நீங்கள் வந்தீர்களா?

குணா: ஆமாம்!

திரு: அப்படியானால்...

குணா: அப்படியானரல் என்ன?

[திருமதி பேசாமலிருக்கிறாள், என்ன சொல்வதென்று தெரியாமல்]

குணா: நீ மூலிகை தேடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்!

[தப்பித்துக் கொண்டோமென்று திருமதி பெருமூச்செறிகிறாள்.]

குணா: (ஆராய்ச்சியைப் பார்த்தபடி) தேடியது மூலி கையை; கண்டுபிடித்தது மணிவண்ணனை; அப்படித்தானே!

[திருமதியைத் திரும்பிப் பார்க்கிறான்; அவள் தலைகுனிந்து நிற்கிறாள்.]

எச்சரிக்கையாக இருக்கவேண்டும் திருமதி! விளையாட்டுக் குழந்தை நீ. வாழ்க்கை என்பது விளையாட்டு அல்ல! எதிர் நீச்சலில் கரை சேரவேண்டிய ஓடம்! நினைவிலிருக்கட்டும்!

காட்சி—20

[ஊர் மக்களில் சில பேர், அறிவானந்தரது புதிய கண்டுபிடிப்புப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டே போகிறார்கள். திருமுடியாரும், அறிவானந்தரது கண்டுபிடிப்புப் பற்றி பெருமூச்சு உகுக்கிறார். முத்து வணிகரும், மணிவண்ணனின் அண்ணனு மாகிய கார்மேகம் தனக்கு அந்தக் கண்டுபிடிப்பு வேண்டும் என்பதற்காக—எப்படிப் பெறுவது என்று கவலைப் படுகிறார். அரசவை வரையில் விஷயம் எட்டி, பாதுகாவலன் விக்ரமனுக்கும் தெரிய வருகிறது; விக்ரமனின் மூளை சுறுசுறுப் படைகிறது.]

காட்சி—21

[அறிவானந்தரது ஆராய்ச்சிக் கூடம்! சில வீரர் கள் வந்து, அறிவானந்தரிடம் நின்று வணங்கு கின்றனர். அறிவானந்தர் ஒருவன் முதுகில் தட்டிக் கொடுத்து...]

அறி: என்ன தம்பி! அரண்மனை வாசம் எப்படி இருக் கிறது?

ஒரு: அரண்மனைக்குள்ளே எப்போதாவது அமைதி இருக்குமா பெரியவரே! அதுவும் பேராசையால் தாக்குண்ட வர்கள் இருக்கிற இடம் என்றால் அமைதி, அண்டி இருக்கக் கூட அஞ்சுமே!

அறி: என்னமோ! இன்னும் கொஞ்ச நாள்! என் ஆராய்ச்சி வெற்றி பெற்று விட்டால் இவைகளுக்கெல்லாம்

கூட ஒரு முடிவேற்பட்டு விடும்! போகட்டும்; எங்கே இவ் வளவு தூரம் இந்தக் கிழவனைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?

மற்: விக்ரம பூபதி, தங்களை உடனே அரண்மனைக்கு வந்துவிட்டுப் போகும்படிக் கூறச் சொன்னார்.

அறி: (சிரித்து) இதற்கா இத்தனை பேர்? வரவில்லை யென்றால் கட்டித் தூக்கிச் செல்ல வந்திருக்கிறீர்களா?

[மறுபடி சிரிக்கிறார்.]

மற்: அப்படியெல்லாம் இல்லை ஐயா! விக்ரமரின் அன்புக் கட்டளை! அறிவிக்கும்படித்தான் கூறினார்.

அறி: போய்க்கொண்டே இருங்கள் பின்னால்; வந்து கொண்டே இருக்கிறேன்,

[வீரர்கள் போகிறார்கள். சில நிமிடங்கள் கழித்து அறிவானந்தரும் புறப்படுகிறார்.]

காட்சி—22

[திருநாட்டு அரண்மனையில் ஒரு பகுதி. என்று மில்லாத மகிழ்ச்சிகரமான முறையில் பாதுகாவலன் விக்ரமன் அமர்ந்திருக்கிறான்.அருகே அமைச்சர் அருளானந்தர் அமர்ந்திருக்கிறார். அங்கு வந்து சேருகிறார் அறிவானந்தர். அவரைக் கண்ட விக்ரமன் எதிர்கொண்டழைத்து...]

விக்ர: அறிவானந்தரே! உங்களுக்காகவே காத்திருக்கிறோம்! இத்தனை நாட்கள் உங்கள் பெருமையை உணராது போனோம்.

அறிவா: நான் மிகச் சாமான்யன்...

விக்ர: சாமான்யமானவரா? உங்களை அழைக்கப் படைத்தலைவரையே நான் அனுப்பியிருக்க வேண்டும்!..!

குணா: நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே.

[மெல்ல புன்னகை பூக்கிறார்.]

விக்ர: பெரியவரே! இப்படி உட்காருங்கள்.

[அறிவானந்தர் ஓர் ஆசனத்தில் அமர்கிறார். விக்ரமன் ஒரு கட்டாரியை எடுத்துக் கனியொன்றை அவனே நறுக்கி அவர்முன் கொண்டுவந்து வைத்து...]

விக்ர: அருந்துங்கள் பெரியவரே! மதுரமான கனி! உங்கள் ஆய்வுக்கூடத்தில், அற்புதமான மருந்துப் பொடிகள் இருப்பதைக் கேள்விப்பட்டோம்! திருநாடு இத்தகைய பேரறிஞரைப் பெற்றிருப்பது கண்டு மகிழ்ந்தோம்! தங்களுடைய ஆராய்ச்சிகள் நாட்டுக்குப் பயன்பட வேண்டும்!

அறி: மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றுதான் நானும் பாடுபட்டு வருகிறேன். ஆனால் நானெடுத்த ஆராய்ச்சிகள் முடிவடையவில்லை; அங்கொன்றும் இங்கொன்றுமாக, முடிந்தும் முடிவடையாமலும் இருக்கின்றன.

விக்ர: உங்களைப் போன்றோர் நடத்தும் உயர்ந்த ஆராய்ச்சிகளுக்கு, அரசாங்கம் தகுந்த ஊக்கம் தரவேண்டும். இதுநாள்வரை தங்களின் அருமை பெருமை தெரியாமல் நானிருந்தது பெருங் குற்றமே! இனிமேலும் அந்தக் குற்றம் நீடிக்க விடமாட்டேன்! இனி உங்களுக்கு எந்தக் குறையும் இருக்காது! மிகப் பெரிய அளவில் உங்கள் ஆராய்ச்சிகளை நடத்தி விரைவில் அற்புதங்களைக் கண்டுபிடிக்கலாம்! பெரிய ஆராய்ச்சிக்கூடம் சகல வசதிகளுடன்! நீங்கள் வேண்டுகிற எல்லாப் பொருள்களுடன் உங்களுக்குத் தருகிறேன்!

அறி: விக்ரமரே! நீங்கள் கூறுவது என்னை வியப்பில் ஆழ்த்துகிறது! வசதிகள் மட்டும் சரியாகக் கிடைத்தால், நான் குறித்திருக்கும் எவ்வளவோ ஆராய்ச்சிகளை நடத்தி, நாட்டுக்கும் மக்களுக்கும் நலம் பல தரலாம்.

விக்ர: பொருளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அரசாங்கப் பொருளனைத்தும் உங்கள் ஆராய்ச்சிக்காகச் செலவிடத் தயாராக இருக்கிறேன்.

அறி: பாதுகாவலரே! அறிவாராய்ச்சிக்கு நீர் தரும் உதவி மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டாகும். உமது சீரிய போக்குக் கண்டு அறிவுலகம் உம்மை வாழ்த்தும்; ஆராய்ச்சியாளர் போற்றுவர்; நாட்டுமக்கள் களிப்படைவர்.

விக்ர: இன்றே உத்தரவிடுகிறேன், உமக்கு வசதிகள் மிக்கதொரு ஆராய்ச்சிக்கூடம் அமைக்குமாறு! நீர் கேட்டது கிடைக்கும். தேவையென்றது கொண்டு வரப்படும்! ஆராய்ச்

சிக்கு அரசாங்க ஆதரவு இனி அமோகமாகக் கிடைக்கும்; அமைச்சர் அருளானந்தரை உம்மிடம் அனுப்புகிறேன். திட்டங்களை அவரிடம் கூறுங்கள்.

அறி: விக்ரமா! உன் புகழ் பரவுவதாக!

[புறப்படுகிறார் அறிவானந்தர். விக்ரமனும் அமைச்சர் அருளானந்தரும் தனித்து இருக்கிறார்கள்.]

அரு: அந்தப் பைத்யக்காரக் கிழவனுக்காக நமது பொருளையெல்லாம் பாழாக்குவதா? யோசித்துச் செய்ய வேண்டும் பாதுகாவலரே!

விக்ர: அவரைப் பைத்தியக்காரர் என்று நினைத்து வந்த நாம்தான் பைத்தியக்காரர்கள்! அவர் ஆராய்ச்சி செய்து ஒருவகைப் பொடியைத் தயாரித்திருக்கிறார்கள். அதைத் தூவினால் புண்கள் ஏற்படுகிறதாம். அந்த எரிச்சல் தரும் பொடி ஏராளமாக நமக்குக் கிடைத்துவிட்டால்...

அரு: கிடைத்துவிட்டால்...

விக்ர: போர் மூளும்பொழுது, எதிரிப்படை மீது தூவச் செய்வேன்! புண்ணைத்தரும் அந்தப் புகைப் பொடியை எதிர்த்து யாரால் நிற்கமுடியும்? பின், நல்லநாடும், மருதூர் அரசும் நமக்கு அடிமைப்பட வேண்டியதுதான்! இந்த விக்ரமனுக்கு எதிராக எவராலும் நிற்க முடியாது! ஆண்டவனாலும் முடியாது. அவர் அடியாரான திருமுடியாராலும் முடியாது. ஆயிரக்கணக்கான வீரர்கள் தரும் பலத்தைவிட, அறிவானந்தர் தரும் ஒரு பிடி மருந்தில் அதிக பலம் இருக்கிறது! எவருக்கும் கிடைத்திடாத படைபலம் என்னிடம் சேர்ந்திருக்கிறது இப்பொழுது!

காட்சி—23.

[சாந்து கொட்டப்படுகிறது. கல் அடுக்கப்படுகிறது. கட்டிடம் வளர்கிறது. விக்ரமனும் அறிவானந்தரும் பேசிக் கொள்கிறார்கள். வண்டிகளில் வந்து இறங்கும் புதுச் சாமான்களை எடுத்து வைக்கு

மாறு மாதவன் சைகை செய்கிறான். ஆராய்ச்சி சாமான்களை குணாளன் விளக்குகிறான். மணி வண்ணனும் திருமதியும் கேட்டபடி இருக்கிறார் கள். கட்டடம் வானோங்கி வளர்ந்திருக்கிறது.]

காட்சி—24

[ஆய்வுக்கூட அமைப்புக் காரணமாக, அரசாங்கத் தின் சார்பில் கலைவிழா ஒன்று ஏற்பாடு செய் யப்பட்டு, ஊர் பிரமுகர்களும், முக்கியஸ்தர்களும் அழைக்கப் பட்டிருக்கிறார்கள். முன்னேற்றத் திட்டங்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த் தப் பெறுகின்றன. இறுதியில் மாலதியின் நடனம் நடைபெறுகிறது. நடன அரங்கின் முன் வரிசை யில் மன்னன், விக்ரமன், மற்றும் கார்மேகமும், மணிவண்ணனும்! அவர்களை அடுத்து குணாள னும், திருமதியும்! அவளை அடுத்து மாதவனும் அமர்ந்திருக்கிறார்கள். திருமதி நடன நிகழ்ச்சி களுக்கிடையே மணிவண்ணனைக் கண்டு கண் களினால் பேசுகிறாள். அவனும் அப்படியே பேசு கிறான். இவற்றைக் குணாளன் கவனித்தபடி இருக்கிறான். முன் வரிசையிலிருந்து கார்மே கத்தை, மாலதி கூர்ந்து கவனிக்கிறாள். ஆடிக் கொண்டிருந்த அவள், திடீரென்று மூர்ச்சை யடைகிறாள். சட்டென்று விக்ரமன் மேடையேறி வந்து...]

விக்ர: பிரமுகர்கள் மனம் வருந்தும்படியாக நிகழ்ச்சி தடைப்பட்டுப் போனதற்கு வருந்துகிறோம். நாட்டியக்கலா ராணி என்ற விருது பெற்றவள்தான் மாலதி. ஏனோ, எதிர் பாராதது இந்த நிலை! இதற்காக...

[என்றதும் யாரும் எதிர்பாராத விதமாக, திருமதி தன் இருக்கையிலிருந்தபடியே]

திரு: இதற்காக யாரும் குழப்பமடைய வேண்டாம்! விழா இனிதே முடிய வேண்டும்! நானே ஆடுகிறேன்.

[திருமதி அரங்கின் உள்ளே போய், நாட்டிய உடையினை மாற்றிக் கொண்டு வந்து அரங்கில் ஆடுகிறாள். திருமதியின் ஆட்டம் கண்டு, அவையே ஆடுகிறது. மன்னர் பாராட்டிப் பரிசளிக்கிறார் அவளுக்கு.]

குமார: எதிர்பாராமல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் உளம் பூரிக்கச் செய்த கலையரசி திருமதிக்கு, என் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்! ஆடலரசி என்ற விருதினைச் சூட்டுகிறேன்.

[அவையில் மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்படுகிறது. அரங்கில் இருந்தோர் கலைகின்றனர். அரங்கின் உள்ளே...]

மாலதி: நல்ல நேரத்தில் என்னைக் காப்பாற்றினீர்கள். அரசரின் கோபம், என்ன செய்திருக்குமோ என்னை? என்றும் என் நன்றி இருக்கும்.

[பரபரப்புடன் கூறிவிட்டு வேகவேகமாகப் புறப்பட்டுப் போகிறாள்.]

காட்சி—25

[கார்மேகத்தின் மாளிகை. முத்து வணிகர் கார்மேகமும், மல்ல நாட்டுப் பிரபு ஒருவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

மல்லபிரபு: ஓராண்டாகியும் நமக்குவேண்டிய உளவுகள் எதையும் உம்மால் கண்டுபிடித்து மல்ல நாட்டுக்கு அனுப்ப முடியவில்லையே கார்மேகம்! நீகேட்டபடி இந்த மாளிகையை வாங்கித் தந்தோம். முத்து விற்கும் வியாபாரியாக்கினோம். ஆனால் இதுவரையில் திருநாட்டின் படை பற்றிய இரகசியங்கள் ஒன்றிரண்டு தவிர குறிப்பிடத்தக்கது எதுவும் நமக்கு வரவில்லை! உன் திறமையைப் பெரிதாக நினைத்து மல்ல நாட்டு மன்னர் உன்னை இங்கு அனுப்பி வைத்தார்!

கார்: ஒற்றர் வேலையென்றால் சாமான்யமானதா? அதிலும் விக்ரமன் ஆட்சியில் கட்டுக்காவல்கள் அதிகமிருக்கின்றன. சற்றுப் பொறும்!

பிரபு: இதுவரை பொறுத்தது போதும்! படைத் தலைவர் துடித்துக்கொண்டிருக்கிறார். படைகள் தயாராகக் காத்திருக்கின்றன. திருநாட்டு அரண்மனையில் நடைபெறும் அக்கப்போர்களைப் பற்றி ஏராளமாகக்குறித்து அனுப்புகிறீர்கள். ஆனால் அறிவானந்தரின் ஆராய்ச்சிக்கூடத்தில் நடைபெறுவதை உம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை! தூவினால் இரணமுண்டாக்கும் பயங்கரப் பொடியை அறிவானந்தர் கண்டு பிடித்திருக்கிறாராமே! அது பற்றி உமக்குத் தெரியுமா! அதைப்பெற ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கிறீரா?

கார்: எல்லாவற்றுக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்! விரைவில் அறிவானந்தரின் ஆராய்ச்சிக் கூடத்தைவிடப் பெரிய ஆராய்ச்சிக் கூடத்தை மல்ல நாட்டில் உண்டாக்கலாம்!

பிரபு: எப்படி?

கார்: என் தம்பி மணிவண்ணன் இருக்கிறானே, அவன் அறிவானந்தரின் ஆராய்ச்சிக் கூடத்தில் வேலை பார்க்கிறான்.

பிரபு: அப்படியா? சிங்கத்தை அதன் குகையிலேயே தாக்கிவிட்டீர்கள்? மணிவண்ணன் அங்கு இருக்கிறானென்றால் இரகசியங்கள் நம் கையில் இருக்கிற மாதிரிதான்! மகிழ்ச்சியுடன் நான் மல்ல நாட்டுக்குப் போகிறேன். இன்னும் ஒரு வாரத்திற்குள் இரகசியத்தை அனுப்ப ஏற்பாடு செய்யும்!

கார்: முயற்சிக்கிறேன்.

பிரபு: உம்முடைய திறமையால்—சேவையால் மல்ல நாட்டுக்கு மகத்தான சேவை செய்கிறீர்! வெற்றி பெற்றதும் உமக்குப் பிரபுப் பட்டம் வழங்குவார்கள்! மன்னரே சொல்லியிருக்கிறார்!

கார்: தங்களைப் போன்றோரின் ஆதரவால்தான் அடியேன் அரண்மனையில் உயர்வு பெற்றிருக்கிறேன். கீழே விழ விரும்புவேனா?

[பிரபு போகிறார். அமராவதி தாயார் வருகிறார்கள்.]

அமரா: நேரமாகிவிட்டது. மணிவண்ணன் இன்னும் காணோமே!

கார்: அவன் நேரம் போவது தெரியாமல், அறிவானந்தர் மாளிகையில் அடைபட்டுக்கிடப்பான்.

அமரா: ஒருவகையில் நல்லதுதானே! இதற்குமுன் படம், பாட்டு என்று வீண் பொழுது போக்கிய பையன், இப்பொழுது அடக்க வொடுக்கமாக இருக்கிறான்! அவனைப் பற்றி நல்ல பெயர்தான் வருகிறது! அந்தப் பெரியவர் அறிவானந்தர் அவனைத் திருத்திவிட்டார்! அவர் நல்லாயிருக்க வேண்டும்.

கார்: (சிரித்துக் கொண்டு) அறிவானந்தர் திருத்தவில்லை, அம்மா! அறிவானந்தருக்கு ஒருபெண் இருக்கிறாள்; அவளைப் பார்த்தபின்தான்...

அமரா: நீ சொல்றது வேடிக்கையாயிருக்கே! தப்புத் தண்டா எதுக்கும் போகமாட்டானே என் மகன்!

கார்: யார் தப்புன்னு சொன்னது? அவளை இவன் காதலிப்பதாகச் சொல்றான்.

அமரா: பொண்ணு நல்ல குணமா, சிவப்பா, அழகா இருப்பாளா?

கார்: வரப்போகிற மருமகளைப் பற்றி அதற்குள் அக்கறையா விசாரிக்க ஆரம்பித்துவிட்டாயே! எல்லாம் அதோ, உன் சின்ன மகனே வருகிறான். அவனையே கேட்டுத்தெரிந்து கொள்!

[மணிவண்ணன் வருகிறான்; அன்னை எதிர்சென்று நின்று...]

அமரா: ஏண்டா, மணி! பொழுதில் வராம இவ்வளவு நேரம் ஏன்? எடுத்து வைத்த சாப்பாடுகூட ஆறிவிட்டது! அறிவானந்தரின் மாளிகையில் அப்படியென்ன ஓயாத வேலை?

மணி: ஆராய்ச்சிக் கூடத்தில் வேலை அம்மா! அங்கிருப்பதை வந்து நீ பார்த்தால், ஆச்சரியப்படுவாய்!

அமரா: உன் அண்ணனுக்கிருக்கிற சம்பத்துக்கு நீ வேலை பார்க்கவேணும்ங்கிற அவசியமேயில்லை.

மணி: வயிற்றுப் பிழைப்புக்காகவா நான் வேலை பார்க்கிறேன்? இல்லை. ஆராய்ச்சிக்காக! அறிவு வளர்ச்சிக்காக அங்கு வேலை.

அம: என்ன ஆராய்ச்சியோ! மணிவண்ணா! உன்னுடன் யாரார் வேலை பார்க்கிறது?

மணி: அறிவானந்தர், அவருடைய மகன் குணாளன், மாதவன், இன்னும் பலபேர்!

அம: அறிவானந்தரின் மகள்கூட அங்குதான் எப்போதும் இருப்பாளா?

மணி: (வேறு பக்கமாக) அவ்வளவு தூரம் தெரிந்துவிட்டதா? (தாயின் பக்கமாக) ஏனம்மா கேட்கிறே?

அம: அந்தப் பொண்ணு பேரென்னா!

மணி: (சற்றுக் கூச்சத்துடன்) போம்மா!

அம: ஒரு பொண்ணு பேரைச் சொல்ல இவ்வளவு கூச்சமா?

மணி: (கூச்சத்துடன்) திருமதி!

அம: அந்தப் பெண்கூட இப்படி நாணிக்கோண மாட்டாள் போலிருக்கே! பேரு நல்லதான் இருக்கு! பெண் எப்படிடா இருப்பாள்?

மணி: (உற்சாகத்துடன்) தங்க நிறம், தங்கக் குணம், தேனைப் பழிக்கும் மொழி, மானைப் பழிக்கும் விழி, நிலவைப் பழிக்கும் முகம், மயிலைப் பழிக்கும் நடை!

அம: மானே தேனேன்னு ஏதேதோ சொல்றியே! பெண் எப்படித்தான் இருப்பாள்?

மணி: அவளைப் பற்றி சொல்லி முடியாது!

அம: அந்த அளவு அழகா!

மணி: அழகு அவளிடம் பிச்சை வாங்கணும்! நேரில் பார்த்தாதான் தெரியும்!

அம: ஒரு நாளைக்கு அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும்.

[மணிவண்ணன் கிளம்புகிறான்.]

அம: எங்கு கிளம்பிவிட்டாய், மணிவண்ணா!

மணி: இப்பொழுதே போய் திருமதியை அழைத்துக் கொண்டு வருகிறேன். உங்களுக்கு எதற்கு மனக்குறை?

அம: இப்பொழுது வேண்டாம்! நாளைக் காலை பார்க்கலாம்! சாப்பிடவா! நீங்கள் குறையில்லாமல் வாழ்ந்தால் அதுவே எனக்குப் போதுமானது! (போகிறாள்)

[மணிவண்ணன் உள்ளே போக எத்தனிக்கிறான். கார்மேகம் கூப்பிடுகிறான்.]

கார்: தம்பி! மிகவும் அலுத்திருக்கிறாயே, ஆய்வுக் கூடத்தில் வேலை அதிகமோ?

மணி: அனலிலும் ஆவியிலும் நின்றல்லவா ஆராய வேண்டியிருக்கிறது!

கார்: அப்படியென்ன கடுமையான வேலை நீ செய்கிறாய்?

மணி: இரணத்தை உண்டாக்கும் பொடிக்கு மாற்று ஒன்று அறிவானந்தர் கண்டு பிடித்துள்ளார். அதைச் செம்மைப்படுத்தி வருகிறோம்!

கார்: ஆமாம், ஒரு பொடியைத் தூவினால் உடனே இரணம் உண்டாவது வேடிக்கைதான்! அந்தப் பொடியை எப்படிச் செய்கிறார்கள்?

மணி: எப்படிச் செய்கிறார்களென்று எனக்குத் தெரியாது!

கார்: உனக்குத் தெரியாதா? நீ மட்டும் அறிவானந்தரைக் கொண்டாடி வருகிறாயே யொழிய, அவர்கள் பல இரகசியங்களை உன்னிடம் சொல்லாமல் மறைத்து வருகிறார்கள்!

மணி: நான் இதுவரை கேட்கவில்லை; அதனால் அவர்கள் சொல்லவில்லை. அவ்வளவுதான்!

கார்: இல்லை; அவர்கள் மிக இரகசியமாக வைத்திருக்கிறார்கள்! நீ எவ்வளவுதான் நெருங்கிப் பழகினாலும் சொல்லமாட்டார்கள்! நீ வேண்டுமானால் கேட்டுப் பார்! உனக்குத் தெரிந்துவிடுகிறதா என்று பார்ப்போம்!

மணி: ஏன், அண்ணா! அந்த இரகசியத்தைப் பற்றி அடிக்கடி நீங்கள் கேட்பதைப் பார்த்தால், எனக்குச் சந்தேகமாக இருக்கிறதே!

கார்: என்னடா சந்தேகம்?

மணி: அறிவானந்தரின் ஆராய்ச்சிக் கூடத்திலிருக்கும் இரகசியங்களைக் கண்டறிய திட்டம் ஏதோ இங்கு உருவாகிறது!

கார்: திடீரென்று உனக்கு ஏன் அந்த எண்ணம் பிறந்தது? திட்டமாவது, மட்டமாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை!

மணி: நானும் நெடுநாளாகக் கவனித்து வருகிறேன். நேற்று நீங்களும், மல்ல நாட்டுப் பிரபுவும் அறிவானந்தரின் ஆராய்ச்சி பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் வந்ததும் திடீரென்று நிறுத்திவிட்டீர்கள்! இரவு நேரத்தில் நமது தோட்டத்தில் பலர் கூடிக் கூடிப் பேசுகிறீர்கள்! போகும் பொழுது முகத்தை மறைத்துக் கொண்டு செல்கிறார்கள். இருளில்கூட முகத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் ஏன் போகவேண்டும்? இங்கு என்ன சதித் திட்டம் உருவாகிறது? இன்றுகூட மல்ல நாட்டுப் பிரபு வந்து போகிறான்! ஊரை விட்டு, அரண்மனை அந்தஸ்தை விட்டு, திடீரென்று நீங்கள் ஏன் இங்கு வந்து மாளிகை வாங்க வேண்டும்? எனக்குப் புரியவில்லை! அறிவானந்தரின் இரகசியங்களைத் தெரிந்து, மல்ல நாட்டுக்கு அனுப்ப முயல்கிறீரா? அது நாட்டுத் துரோகம் ஆகும்!

கார்: எந்த நாட்டுக்குத் துரோகம்? மல்ல நாட்டுக்கு நான் சேவை செய்கிறேன்! அதே நேரத்தில், மல்ல நாட்டின் இரகசியங்களை அறிந்து வர, விக்ரமனின் ஆட்கள் அங்கு

சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியுமா உனக்கு? நம்மைக்கூடக் கண்காணித்தபடி இருக்கிறார்கள். தம்பி! வெளிப்படையாகச் சொல்கிறேன்! நான் இங்கே வந்தது முத்தும் மணியும் விற்க அல்ல! மல்ல நாட்டுக்கு—நாம் பிறந்த தாயகத்துக்கு எதிராக இங்கே நடைபெறும் சூழ்ச்சிகளை—வேலைத் திட்டங்களை அறிந்து போக வந்துள்ளேன்!

மணி: ஒற்றனாக வந்திருக்கிறீர்—அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்!

கார்: எப்படி அழைத்தாலும் சரி, கவலையில்லை! திருநாடு பலமடைந்தால் மல்ல நாட்டுக்கு ஆபத்துதான்! விக்ரமன் பேராசை பிடித்தவன்; மண்ணாசை கொண்டவன்; மல்ல நாட்டை அடிமைப்படுத்தத் தயங்கமாட்டான்! இப்பொழுது திருநாட்டைவிட மல்ல நாட்டுப்படை பெரியது! இந்த நிலை மாறினால் மல்ல நாடு அடிமைத் தளையில் அல்லற்பட வேண்டியிருக்கும்! திருநாட்டுப் படைக்கு உதவியாக அறிவானந்தர் இருக்கிறார்! அறிவானந்தர் தனக்குத் தெரிந்ததை தனது நாட்டுக்குப் பயன்படுத்துகிறார்! அதைப்போல், உனக்குத் தெரிந்ததை உனது நாட்டுக்குப் பயன்படுத்தத் தயங்கக் கூடாது. மகிழ்ச்சியுடன் முன்வரவும் வேண்டும்!

மணி: இல்லை! தனது ஆராய்ச்சியை அறிவானந்தர் போர்முறைக்குத் தரமாட்டார்! அப்படித் தந்தாலும், அது அவருடைய உரிமை! அவர் கண்டு பிடித்ததை நான் எடுத்து வந்து தங்களுக்குத் தருவது, அவருக்குத் துரோகம் செய்வதாகும்.

கார்: துரோகமல்ல! நீ இதை உன் சுயநலத்தால் செய்யவில்லை! சொந்த நாட்டைக் காப்பாற்றச் செய்கிறாய்! ஆபத்தில் இருக்கும் தாய்நாடு உன் உதவியைக் கேட்கிறது; தாய்நாட்டுக்குப் பணி புரிவது உன் கடமை! அதை மறந்துவிடாதே மணிவண்ணா! அறிவானந்தரின் இரகசியத்தை நான் கொண்டுவரச் சொல்வது, நமது நாட்டுக்காகத்தான்.

மணி: ஆபத்தில் நமது நாடு இருக்கிறதென்றால், திரு நாட்டுப் படையால் மல்ல நாடு வீழ்த்தப்படுமென்பது உண் மையானால், படையில் சேர்ந்து நான் போராடுகிறேன்! அறிவானந்தரே எதிர்வந்தாலும், வாளைக் கீழே தணிக் காமல் கடைசி மூச்சுவரைக் காத்து நிற்பேன்! அது நேர்மை, வீரம்! நீங்கள் சொல்வது நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோ கம்!

கார்: துரோகமல்ல, வஞ்சகமுமல்ல! நீ செய்வது தான் நாட்டுக்குத் துரோகம்! நிலையுணராமல் ஏதேதோ உளறுகிறாய்! நீ என்ன செய்வாய், எல்லாம் அந்த மாயக் காரி தந்த மயக்கம்!

மணி: திருமதியைப் பற்றித் தாழ்வாகப் பேச உங் களுக்கு ஏதும் உரிமை கிடையாது!

கார்: உன்னை ஆய்வுக்கூடத்தில் வைத்து, அவர்கள் வேலை வாங்கிக் கொள்கிறார்கள்! வேலைக்காரன் போல உழைக்கிறாய் அங்கே

மணி: உன்னைப்போல வியாபாரி வேடத்தில் சதி வேலைகள் செய்வதைவிட, ஆராய்ச்சிக்கூடத்தில் வேலைக் காரனாகப் பாடுபடுவது எவ்வளவோ மேல்!

[அமராவதி தாயார் வருகிறார்கள்]

அட: என்ன சண்டை அதற்குள்? உண்ண வாருங்கள்!

கார்: தின்றுவிட்டு, அறிவானந்தர் மாளிகையில்போய் அடப்பம் பிடித்துக் கொடு.

மணி: இனிமேல் இந்த வீட்டுச் சோறு—உன் வீட்டுச் சோறு எனக்கு வேண்டாம்! இதுவரை உல்லாசத்திற்காக— பொழுது போக்கிற்காக வேலை செய்தேன்! இனி உண்மை யில் ஒரு வேலைக்காரனாக உழைப்பேன். சதிவேலை செய்தோ, உளவு வேலை பார்த்தோ, அடுத்துக்கெடுத்தோ ஒரு பிரபுப் பட்டத்தைப் பெறுவதைவிட, நம்பிக்கையுள்ள, நேர்மையான பணியாளாக இருப்பது மேல்! ஒருவனுடைய

உயர்வு, பளபளப்பான உடையிலில்லை. மார்பில் தொங்கும் பதக்கங்களிலில்லை; உள்ளத்திலிருக்கும் உயரிய பண்பிலிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

கார்: மயக்கம் என்று முதலில் சொன்னேன். அது தவறு! பைத்தியம் சரியாக முற்றிவிட்டது!

[மணிவண்ணன் வெளியேறுகிறான் வீட்டைவிட்டு]

அம: ஐயோ, இதென்ன விபரீதம்? மணிவண்ணா! நீ எங்கு போகிறாய்? இதோ, உணவு தயாராக இருக்கிறது!

மணி: (நின்று) எனக்கு இந்த மாளிகையில் இனி இடமில்லையம்மா!

அம: ஏன், ஏன்? கார்மேகம் ஏன் பேசாமலிருக்கிறாய்? உன் தம்பியை ஏன் விரட்டுகிறாய்?

கார்: தம்பி! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி! ஏனடா நிற்கிறாய்? விக்ரமனிடம் போய்ச் சொல், என் அண்ணன் ஒரு சதிகாரனென்று!

மணி: நான் ஒன்றும் காட்டிக் கொடுக்கப்போவதில்லை; நீ செய்யும் காரியங்களுக்குள்ள பலன் காணாமல் போகமாட்டாய்! நான் போகிறேன்!

அம: என்ன கூத்து இது கார்மேகம்! அவனைக் கூப்பிடு! தம்பி தவறு செய்தாலும் அண்ணன் பொறுத்துதான் போக வேண்டும்!

கார்: ஒன்றும் பயப்படாதே, அம்மா! அறிவானந்தர் மாளிகையில் இரண்டு நாள் சுற்றியிருந்துவிட்டு பின் தன்னாலே இங்கு ஓடிவருவான்!

அம: ஐயோ!

[நிலை சோர்ந்து உட்காருகிறார்கள்.]

கார்: மணிவண்ணன் மறுத்துவிட்டான்! அறிவானந்தர் ஆராய்ச்சிக் கூடத்துக்குள் யாரார் நுழைபவர்கள்?(யோசித்து முகமலர்ச்சியுடன்) ஆம், மாதவன் இருக்கிறான். அவனைப் பிடிக்க மாலதியைப் பிடிக்க வேண்டும்! அந்த மாலதி...

காட்சி—26

[மாலதி, நடன அரங்கில் ஏற்பட்ட தடுமாற்றம் பற்றி வருந்தியவளாக அமர்ந்திருக்கிறாள். அந்த நிலைக்குக் காரணத்தை எண்ணிப் பார்க்கிறாள். நெஞ்சம் திடுக்கிடுகிறது.]

மாலதி: (தனக்குள்) ஆமாம்; அவரேதான். மல்ல நாட்டுப் பிரபு—கார்மேகம்தான்! அவர் இங்கே எத்தனை நாட்களாக இருக்கிறார்? மல்ல நாட்டு அரண்மனையைச் சேர்ந்த அவருக்கு இங்கென்ன வேலை இருக்கும்?

[முடிவுக்கு வரமுடியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறாள். தோழி ஒருத்தி வந்து...]

தோழி: ஆண்டவனின் அடியார் ஒருவர் வந்திருக்கிறார். உள்ளே வர அனுமதி கேட்கிறார்.

மாலதி: (சிரித்துக் கொண்டு) ஆண்டவனின் அடியாருக்கு என் வீட்டில் வேலையா? எப்படி இருக்கிறார் அவர்?

தோழி: இளமை கழிந்தவர்தான்! திருநீற்று நெற்றி! உருத்திராட்சமாலை..உங்களுக்குத்தெரிந்தவர்தான்அம்மா!

மாலதி: பைத்யக்காரி! திருமுடியார் அல்லவா வந்திருக்கிறார்! வீதியிலே நிறுத்திவிட்டு வந்திருக்கிறாயா, அந்த ஆண்டவனின் அடியாரை!

தோழி: இதோ அழைத்து வந்துவிடுகிறேன் அம்மா!

[திருமுடியார் வந்துகொண்டே]

திரு: அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நானே வந்துவிட்டேன் மாலதி!

[மாலதி எழுந்து சென்று வரவேற்கிறாள்.]

மாலதி: சொல்லி அனுப்பி இருந்தால் நானே வந்திருப்பேன்...

திரு: செய்திருக்கலாம்! அவசரமாக இருந்தது. உணர்த்திப் போகலாமென்று நானே வந்துவிட்டேன்.

[ஆசனம் ஒன்றில் அமர்கிறார்.]

மாலதி! நிலைமை நெருக்கடியாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் வறுமையின் கொடுமையைத் தாளமாட்டாதவர் களாக, ஆண்டவனைக்கூட அலட்சியப்படுத்தத் தொடங்கி விட்டார்கள். விக்ரமனின் சுட்டுவிரல் அசைவுகளே சட்டங் களாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. நிலைமை நீடிக்கு மானால், விக்ரமன் ஒரு சர்வாதிகாரியாகி விடக்கூடும். அதனால் மன்னர் குமாரவேலனுக்குக்கூட ஆபத்து ஏற்பட லாம்...

மாலதி: உணர்ந்திருக்கிறேன், அடியார் அவர்களே! ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஆராய்ச்சிக் கூடம் புதி தாகக் கட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்ட பிறகு, இரகசியங்கள், மிகுந்த பாதுகாப்புடன் இருக்கின்றனவாம். இரகசியங்களைக் காத்துக் கொண்டு, எந்த நேரத்திலும் குணாளன் விழிப்போடிருக்கிறானாம்...

திரு: மாலதி! அறிவானந்தரின் இப்போதைய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. முன்பு கூறினேனே—அது. அதுதான் மாலதி, ''நீரும் நெருப்பும்''! அதுவே தேவை. விரைவாகத் தேவை. ஏற்பாடுகளைச் செய்! ஏதேனும் தேவைப்பட்டால் ஆள் அனுப்பு.

[என்று சொல்லி, ஒரு பை நிரம்பிய பொற்காசுகளை அவளிடம் நீட்டுகிறார். நளினமாக அதனைப் பெற்றுக்கொண்டு]...

மாலதி: எத்தனைச் சீக்கிரம் முடியுமோ அத்தனை விரைவில் முடிக்கிறேன். நம்பிக்கையுடன் போய் வாருங்கள்.

[திருமுடியார் போகிறார். கையிலிருக்கும் பையைக் குலுக்கியபடியே நடனம் ஆடத் தொடங்கு கிறாள். யாரோ வரும் காலடி ஓசை கேட்கிறது. பையை ஒரு மறைவிடத்தில் வைத்துவிட்டு, மஞ் சத்தில் அமர்கிறாள். அங்கு கார்மேகம் வருகிறார். அவரைக் கண்டதும் அவள், அவரை அறியாதவள் போல 'நீங்கள் யார்?' என்று கேட்கும் பாவ னையில் பார்க்கிறாள். கார்மேகம், அதை அலட் சியப் படுத்திவிட்டு, ஆசனமொன்றில் அமர்ந்த படி...]

கார்: எனக்கு நேரமில்லை; வந்த வேலையைக் கூறி விடுகிறேன்! மாலதி! நீ யாரென்பது எனக்குத் தெரியும்! திருட்டுக் குற்றத்துக்காக மல்ல நாட்டுச் சிறையில் தள்ளப் பட்டு, பின் சிறைக் காவலனை மயக்கி, மஞ்சத்தில் அவனைக் கொன்றுவிட்டுத் தப்பி ஓடிவந்துவிட்டவள் நீ! பெயரை மாற் றிக் கொண்டாய்! உன் பருவத்தையும் உருவத்தையும் மாற் றிக்கொள்ள முடியவில்லை! இதோ உன்னைப்பற்றிய விவரங் கள்: வயது 22, உயரம் 5 அடி, சிவப்பு நிறம், கண்ணுக்கரு கில் மச்சம், இடதுகையில் தழும்பு! நான் நினைத்தால், உன்னைக் கைது செய்து மல்ல நாட்டுக்கு அனுப்ப முடியும். அங்கு தூக்குக் கயிறு காத்துக் கொண்டிருக்கிறது, உனக்கு! புரிகிறதா...

[மாலதி திகிலுடன் விழிக்கிறாள்.]

கார்: நான் சொல்கிறபடி கேட்பது ஒன்றுதான் நீ தப்புவதற்கு இப்போதுள்ள வழி! ஆயிரம் பொன் பரிசும் கிடைக்கும்.

[பணப் பையைத் தூக்கிப் போடுகிறான். அது 'கலீரெ'ன்ற ஒலியுடன் அவள் முன் விழுகிறது.]

மாலதி: என்ன செய்ய வேண்டும்?

கார்: உன் காதலன் மாதவனிடமிருந்து ஒரு இரகசியம் தெரிய வேண்டும்! அறிவானந்தர் ஆய்வுச் சாலையில், இர ணத்தை உண்டாக்கும் பொடியும், அதற்கு மாற்றுப் பொடி யும் இருக்கின்றன! அவைகளில் கொஞ்சம் எனக்கு வேண் டும்! அத்துடன் அவைகளைச் செய்யும் முறையும் வேண்டும்!

பாலதி: அவர் கொடுப்பாரோ என்னவோ?

கார்: உன்னால் முடியாமற் போகாது! காதலியின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத காதலனும் உண்டோ? மாத வன் உன் காதலன்! அதுவும் எனக்குத் தெரியும். நாளைய காலைக்குள் இவை எனக்குக் கிடைத்தாக வேண்டும்!

[வெளியில் காலடிச் சத்தம் கேட்கிறது.]

மாலதி: அதோ! அவரே வந்துவிட்டார்! நீங்கள் இந்த வழியாகப் போய்விடுங்கள்!

கார்: நான் கேட்டவை நாளைக் காலை என்னிடம் வந்து சேரவேண்டும்! ஞாபகத்தில் வைத்துக் கொள். ஆயிரம் வராகன் அல்லது தூக்குத் தண்டனை.

[எதுவும் புரியாதவளாக மாலதி தடுமாற்றத்தோடு நிற்கிறாள். திருமுடியாரும் கேட்கிறார்; மல்ல நாட்டுச் சீமானும் கேட்கிறான், அறிவானந்தரின் இரகசியத்தை! அப்படி என்னதான் இருக்கிறது அந்த இரகசியத்தில்! தூவியவுடன் இரணமுண்டாக்கும் பொடி எதற்கு அந்தப் பிரபுக்கு? நினைத்தவுடன், நினைத்த இடத்திலிருந்தே நீரையும் நெருப்பையுமுண்டாக்கும் வழிகள், அடியாருக்கு எதற்கு? இரண்டுக்கும் ஒரேபொருள் தான் மூலமா? என்ற குழப்ப மேலிட்டு நிற்கிறாள் மாலதி. அவள் எதிரே இரண்டு பொன் மூட்டைகள் கண்ணுக்குத் தெரிகின்றன! மனக் கண்ணில் மாட மாளிகையும், கூட கோபுரமும் தெரிகிறது...சட்டெனக் குரல் கேட்டுத் திடுக்கிடுறாள்.]

மாதவன்: மாலதி, மாலதி!

மாலதி: (தெளிவடைந்தவளாய்) வந்துவிட்டீர்களா கண்ணாளா!

[அவனை நெருங்கி இறுக அணைத்துக் கொள்கிறாள்]

இதோ பாருங்கள்! இனிமேல் என்னை இப்படித் தனியாகத் தவிக்க விட்டீர்கள் என்றால், நான் தற்கொலைதான் செய்து கொள்வேன்.

மாத: அப்படியெல்லாம் செய்து வம்பில் மாட்டி விடாதே மாலதி! இப்ப உனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படி முகமெல்லாம் வீங்கி இருக்கிறது. என் ஆப்பிள் கன்னங்களில், கண்ணீர்க்கறை ஏன் வந்தது?

மாலதி: எவ்வளவு நேரம் உங்களுக்காகக் காத்திருப்பது? காத்திருந்து காத்திருந்து கண்கள் பூத்தே விட்டன.

மாத: அதனால்தான் கண்ணீரா?

மால: பின்னே, எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தால், அழுகை வராதா?

மாத: ஓகோ, அப்படியா சேதி! என் மீதுகூட உனக்கு அவ்வளவு அன்பு இருக்கிறதா?

மாலதி: காரியமாகிறவரைக்கும் கண்ணே, மணியே என்பது; அப்புறம் கண்ணீர் வரும்படி நடந்து கொள்வது! ஆண்களுக்கு இது ஒரு விளையாட்டாகவே போய்விட்டது!

மாத: தொடங்கிவிட்டாயே கண்ணே, தூற்றலை!

மாலதி: பின்னென்னவாம்! உங்களிடம் நான் என்ன எதிர்பார்க்கிறேன்? ஒட்டியாணம், வேண்டுமென்றேன்; கிட்டாது அது என்று கூறிவிட்டீர்கள்! பேசரி என்றேன், பே பே என்றீர்கள். முத்துப் பிலாக்கு என்றேன், மூக்கு கெட்டுப்போகும் என்றீர்கள். மொகரா என்றேன்; முகமே போதும் என்றெல்லாம் தட்டிக் கழித்து விட்டீர்கள். உங்களைக் காதலித்துக் கண்ட பலன் என்ன? பூச்சிப் புழுவுக்குக் கூட லாபமில்லை.

மாத: என்ன இப்படிச் சொல்லிவிட்டாய் மாலதி! அறிவானந்தரின் ஆராய்ச்சி முடியட்டும்! எனக்கு ஆயிரம் பொன் தருவதாகக் கூறிவிட்டார்! மணிவண்ணன் கொடுத்து வைத்தவன்! அவர் மகளையே கொடுக்கப் போகிறார் அவனுக்கு. எனக்கு? இனிமேல் நீதானே எல்லாம்! சுற்றிச் சுற்றி வந்தாலும், உன்னையும், உன் இடுப்பையும்தானே சுற்றியாக வேண்டும்!

மால: பேச்சுக்கு மட்டும் குறைச்சலில்லை.

மாத: அதெல்லாம் போகட்டும்; இப்போது என்ன வேண்டும்? என்ன நகை உனக்குக் குறைவாயிருக்கிறது?

மால: அதுக்கு மட்டும் குறைச்சலில்லை. கேட்டதும் கொண்டுவந்து கொட்டிக் குவித்து விடுவது மாதிரிதான்!

மாத: மாலதி, நான் ஆண் பிள்ளை! மீசை இருக்கு, முறுக்கா?

மால: தெரியுமே எனக்கு, நீங்க ஆண் பிள்ளைங்கிறது! எனக்குத் தெரியாதா? திறமை எவ்வளவுங்கிறதும் எனக்குத் தெரியுமே!

மாத: தெரியுமா! தெரிஞ்சுமா இப்படிச் சொன்னே?

மால: இதோ பாருங்க, நான் எவ்வளவோ உங்க கிட்டே கேட்டிருக்கேன்! கொடுத்து என் மனசைக் குளிர வச்சது ரொம்பவும் குறைச்சல்! கிடைக்காததைக் கேட்டா கொடுக்க முடியுமான்னு கேட்டிருக்கிங்க! ஒப்புக் கொண் டிருக்கேன்.

மாத: இப்ப என்ன வேணும் உனக்கு?

மால: உங்களாலே கொடுக்க முடிந்ததைத்தான் கேட் கப்போறேன்! முடியும்னு தெரிஞ்சுதான் கேட்கிறேன்.

மாத: சீக்கிரமா கேட்டுவிடேன்!

மாலா: (அவன் கழுத்தை வளைத்துப் பிடித்துக் கொண்டபடி) கொடுக்கிறேன்னு சத்தியம் செய்து கொடுங்க முதலில்!

மாத: என்ன கேட்கப் போறேன்னு தெரியாம சத்தியம் கித்தியமன்னா எப்படி மாலதி! சத்தியம் பண்ணிப்புட்டா, அப்புறம் அதுப்படி நடந்துக்கணுமே!

மால: விக்ரமரோடெ உயிரைக் கொடுங்கன்னா கேட் டுடப் போறேன். இல்லே, திருநாட்டுக்கு மகாராணி யாக்கி எனக்குப் பட்டஞ் சூட்டிவையுங்கோன்னு கேக்கப் போறேனா? உங்களாலே முடியும்; மனசு வச்சா முடியும்னு தெரிஞ்சுதான் கேட்கிறேன்; சத்தியம் செய்யுங்களேன்!

மாத: என்மேலே இல்லாத நம்பிக்கை நான் செய்யிற சத்தியத்துமேலே இருக்கா! சரி, சத்தியமா தர்றேன்! சொல்லு!

மால: (மாதவன் கன்னங்களில் மாறி மாறி முத்தங்கள் கொடுத்து) அப்பாடா! இப்பதான் என் கண்ணாளர் நீங்க! மாலதி—மாதவன்ங்கிறதுக்கு இப்பதான் பொருத்தமே ஏற்பட்டிருக்கு! கண்ணாளா, அப்படி ஒண்ணும் பெரிசா கேட்டுடப் போறதில்லை; பட்டதும் இரணம் உண்டாக்கும் பொடி கொஞ்சமும், அதற்கு மாற்றுப்பொடி கொஞ்சமும் வேணும்!

மாத: ஐயையோ! பெரிசாக் கேட்டுட்டியே மாலதி! இப்ப இவை உனக்கு எதுக்கு?

மால: சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கப் போறேன்! நீங்க இருந்து என்ன பிரயோசனம்? ஐம்பது பொன்னுக்கு அல்லும் பகலும் பாடாய்ப்படுறீங்க! நான் கேட்டதைக் கொடுத்தா ஐநூறு வராகன் முழுசாக் கிடைக்கும்! ரெண்டு பேருக்கும் கொண்டாட்டம் இல்லையா!

மாத: ஐநூறு வராகனா!

[வாயைப் பிளக்கிறான். மாலதி அவன் கைக்களை எடுத்துத் தன் கன்னங்களில் ஒற்றிக் கொண்டவளாக...]

மால: இன்னொன்னு! அதைத் தயாரிக்கிற முறையும் எழுதிக் கொடுத்தா, இன்னொரு ஐநூறு வராகன்!

மாத: ஆயிரமா! அம்மாடியோவ்!

மால: அதிகமும் கிடைக்கும்!

மாத: அதெல்லாம் ரொம்ப ரகசியமாச்சே மாலதி!

மால: அப்போ, என்மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னு சொல்றிங்களா...

மாத: நீ அப்படியெல்லாம் கோவிச்சிக்கப்படாது... வா, போகலாம்!

மால: எங்கே, கூப்பிடுறீங்க...ஆராய்ச்சிக்கூடத்துக்கா? அங்கெல்லாம் நான் வரமாட்டேன்!

மாத: போயும் போயும் உன்னை அங்கே அழைப்பேனா? வழக்கமாபோற இடத்துக்குப்போவோம் வான்னா..

மால: அதான் முடியாது! முதல்லே நான் கேட்டது வரணும்! நான் வேணும்னா, இப்பவே வரணும்! போங்க, போய் முதல்லே, கேட்டதைக் கொண்டாங்க. சீக்கிரமா கொண்டாங்க! உடனே திரும்பி வாங்க! காத்திருக்க வச்சி, அழும்படியா ஆக்கிடாதிங்க.

காட்சி—27

[மிக நீண்ட சோதனைக்கூடம். கொதிப்பதும், புகைவதும், எரிவதும், அரைப்பதும், கொல்லன், துருத்தியால் ஊதுவதும், தண்ணீர் விழக் கழுவுவதும், வடிப்பதும், பல வேலைகள் நடைபெறுகின்றன. உதவியாளர்களாக பலர் இருக்கின்றனர். உயர்தர உடையில் அறிவானந்தர் நின்று, ஒரு ஆராய்ச்சிக் கருவியைப் பொருத்திக் கொண்டிருக்கிறார்.]

[குமாரவேலன் வருகிறான்]

குமார: தாத்தா! இன்றைக்கு ஏதாவது ஒரு வேடிக்கை காட்டுங்கள்!

அறி: இயற்கை மறைத்து வைத்துள்ள வேடிக்கை விநோதங்கள் கோடி கோடி! அதனில் எதைக் காட்டுவது? நீரில் நெருப்பு வரச்செய்கிறேன். பார்க்கிறாயா?

குமார: எப்படித் தாத்தா! நீர் நெருப்பை அணைத்து விடாதா?

அறி: இதோ பார்! இந்தக் கட்டி எப்படி இருக்கிறது?

குமார: கரித்துண்டு மாதிரி இருக்கிறது!

அறி: தண்ணீரில் போட்டதும், மிகுந்த கொந்தளிப்புடன் அது எரியும்!

[தண்ணீரில் அதைப் போடுகிறார். அது எரிகிறது. குமாரவேலன் அதை ஆச்சரியத்துடன் பார்க்கிறான். பின் தண்ணீர் விழுந்து சுழலும் சக்கரத்தைப் பார்க்கிறான்; அதைப் பார்த்தபடி இருக்கிறான். விக்ரமனும் ஒரு புரோகிதரும் வருகிறார்கள்.]

புரோ: இன்றைக்குக் கிரகண நாளாயிற்றே! எப்படி இவாளெல்லாம் வேலை செய்யறாள்?

அறி: கிரகணமென்றால் என்ன?

புரோ: மேதாவியான உங்களுக்குத் தெரியாதா? பூலோகத்தைச் சுற்றிச் சூரியன் வரும்பொழுது, ராகு கேது என்ற பாம்புகள் அதைப்போய்ப் பிடித்துக்கொள்கின்றன.

அறி: முதலிலேயே தப்பு! பூமியைச் சுற்றிச் சூரியன் வரவில்லை; சூரியனைச் சுற்றித்தான் பூமி வருகிறது.

புரோ: தலை கீழான்னா பாடமிருக்கு!

விக்ர: சூரியனைச் சுற்றிப் பூமி வருகிறதா? நீங்கள் சொல்வதைக் கேட்டால் என் தலை சுற்றும் போலிருக்கிறது.

புரோ: நமது முன்னோர்கள் சொல்லாத புதுமையாக இருக்கிறதே! நீங்கள் சொல்வது புனைந்துரையோ, கற்பனையோ? யார் கண்டாள்!

அறி: புனையும், பொருந்தாக் கற்பனைகளும், மூட நம்பிக்கைகளும் நமது மக்கள் உள்ளத்தில் புகுந்த பின்தான் அறிவுண்மைகள் புரியாதனவாகிவிட்டன! நமது முன்னோர்கள்—இயற்கையை நுணுகி ஆராய்ந்த சங்ககாலத் தமிழ்ச் சான்றோர்கள், கதிர்ப்பிழம்பைச் சுற்றி இம் மண்ணுலகு வருகிறது என்ற உண்மையை அறிந்திருந்தனர். பாடல் மூலமும் அதை அறிவித்திருக்கிறார்கள்.

> ''செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
> பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
> வளிதிரிதரு திசையும்
> வறிது நிலைஇய காயமும்...''

என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் இதனை அழகாகக் கூறியுள்ளார். கருத்துக் கொவ்வாத கதைகள் புகுந்ததும், அறிவுண்மைகள் மறக்கப்பட்டன. மதியையும் ஞாயிறையும் பாம்புகள் விழுங்குகின்றனவோ

என்னவோ! மக்களின் மதியை மடமை யெனும் பாம்பு விழுங்கிவிட்டது! மடமை அகன்றால் நாட்டில் மதிதுலங்கும்; வாழ்வு மலரும்!

புரோ: பாதுகாவலரே! நேக்கு நாழியாயிடுத்து.

[போகிறார் தமது பழங்கட்டுடன்]

விக்ர: உம்மைக் கண்டால், நமது அரண்மனைப் பூஜ்ய ருக்குச் சற்றுக் கிலிதான்!

அறி: அவர் சிலவற்றைக் கண்மூடித்தனமாக நம்புங் கள் என்கிறார்; நான் ஆராய்ந்து மெய்ப்பொருள் காண்ப தறிவு என்று சொல்கிறேன். அவ்வளவுதான்!

[சிறிது அமைதி]

விக்ர: மல்ல நாட்டில் படைகள் பெருகுகின்றனவாம்! மருதூர் மன்னன் கோட்டைக் கொத்தளங்களைக் கட்டிய வண்ணமிருக்கிறானாம். நமது ஒற்றர்கள் வந்து சொன்னார் கள்.

அறி: படை பலத்தைப் பெருக்கி என்ன பலன்? போர்க் களத்தில் பெறும் பல வெற்றிகளைவிட, ஆய்வுக்களத்தில் காணும் சிறுவெற்றி அதிகப் பலனைத் தரத்தக்கது!

விக்ர: அதனால்தான் நாம் இந்த ஆய்வுக் கூடத்தை உண்டாக்க அரும்பாடு பட்டோம். விக்ரமா! உன் பாசறை எங்கே என்று கேட்டால், அதோ! இருக்கிற ஆய்வுக்கூடந் தான் என் பாசறை என்று சொல்வேன். உன் படைத்தலை வன் யாரென்றால் வெற்றிகளைத் தரும் ஆற்றல்மிகு படைத் தலைவர் அறிவானந்தர் ஒருவர்தான் என்று தயக்கமின்றி கூறுவேன்.

அறி: தாங்கள் அறிவாராய்ச்சியின் மீதும், என்மீதும் வைத்துள்ள நம்பிக்கை என்றும் வீண்போகாது!

விக்ர: அந்த எரிச்சல் தரும் பொடி தயாரித்தீர்களே! மிக அபூர்வமான சாதனை! அதற்கே உங்களுக்குப் பத்துக் கிராமமும் பிரபுப்பட்டமும் தரலாம். தயாரிப்பது மிகக் கடினமோ?

அறி: கடினமில்லை! ஆனால் அதைவிட மேலான மற்றொரு மருந்துப் பொடியை நான் கண்டுபிடித்திருக்கிறேன்!

விக்ர: அதைவிடப் பலம் வாய்ந்ததுவோ!

அறி: (தூளைக்காட்டி) இதோ, இருக்கிறதே! விரலால் எடுத்து தொடலாம். ஒன்றும் செய்யாது.

விக்ர: எரிச்சல் பொடியைவிடப் பலமானது என்கிறீர்கள்! தொட்டால் ஒன்றும் செய்யாது என்கிறீர்கள்!

அறி: எரிச்சல் பொடியால் உண்டாகிற புண்ணை இது மாற்றிவிடும். அதுவுமல்லாமல் எந்தக் காயத்தையும் சுலபமாக ஆற்றிவிடலாம். இந்த மருந்தை ஏராளமாகத் தயாரிக்க வேண்டும்! தயாரிப்பதுகூடச் சுலபந்தான்.

[விக்ரமன் தளர்ந்துபோய், நடந்து செல்கிறான். ''புண்களை உண்டாக்கும் மருந்துப் பொடியைக் கேட்டால், புண்ணை ஆற்றும் மருந்தைத் தயாரிப்பதில் அவர் முனைந்திருக்கிறார்' என்று விக்ரமன் தனக்குள் சொல்லிக் கொண்டே குமாரவேலனுடன் வெளியேறுகிறார்.]

[குணாளனும், மணிவண்ணனும்]

குணா: இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட, பொறுமை அதிகம் தேவை! உன்னால் முடியுமா குணாளா! முதலில் வேடிக்கையாக இருந்தாலும் பின் வேதனைப்படுமளவு வேலை வளர்ந்துவிடும். பித்துப் பிடித்தவன்போல உட்கார்ந்திருக்க வேண்டும்!

மணி: குணாளா! சிறிது காலம் கழித்துப் பார்! மணிவண்ணனைப் போன்ற சிறந்த ஆராய்ச்சியாளன் இல்லையென்று சொல்வாய்! நீ போய் உன் வேலையைப் பார்! நான் இதைக் கவனித்துக் கொள்கிறேன்!

[ஒரு அளவைக் காட்டி]

குணா: கவனமாயிரு! இந்த அளவு பொங்க ஆரம்பித்ததும், தீயை அணைத்துவிடு!

மணி: எல்லாம் சரியாகச் செய்வேன்!

[குணாளன் போகிறான், தன் வேலையைக் கவனிக்க. மணிவண்ணன் கவனித்துக் கொண்டிருக்கிறான்.]

[பக்கத்திலிருக்கும் தண்ணீர்க் கடிகாரத்தில் தண்ணீர் கொட்டுவது, திருமதி சிரிப்பது போலிருக்கிறது.

மற்றொரு இடத்தில், புகைநெளிந்து எழுந்து மேலே போவது திருமதி நடனமாடுவது போலிருக்கிறது.

அவள் கண்கள்—அவள் பார்வை—அவள் முகம்—எங்கும் தெரிகிறது. மணிவண்ணன் சுற்றுமுற்றும் பார்த்தபடி இருக்கிறான்.

திராவகம் பொங்கி வழிகிறது. புகை கிளம்புகிறது. குணாளனும் பக்கத்திலிருப்பவர்களும் வந்து தீயை நிறுத்தி புகையை அடக்குகிறார்கள்.]

குணா: பொங்கி வழிவதற்கு முன் தீயை நிறுத்திவிடச் சொன்னேனே! ஏன் செய்யவில்லை?''

[குணாளன் கோபத்துடன் செல்கிறான். மணிவண்ணன் ஒன்றும் புரியாமல் விழிக்கிறான்; குணாளனுக்குச் சிரிப்பு வருகிறது. மணிவண்ணனும் சிரிக்கிறான். மற்றொரு சிரிப்பொலியும் சேர்கிறது! எதிரில் திருமதி வந்து நிற்கிறாள்! திருமதி வந்ததும், குறிப்பறிந்து குணாளன், அவ்விடம் விட்டகல்கிறான். அவன் போனதும்]

மணி: திருமதி! செம்பவளத்தை அதரமாக்கி, முத்துக்களை அழகான பற்களாக்கி, பொன்னைப் பொடி செய்து உடலெல்லாம் பூசி, தேயாத் திங்களாக முகத்தைத் தீட்டி, இயற்கை அளித்துள்ள எழிற் செல்வமாம் உன்னை...

திரு: என்னை?

மணி: (பெருமூச்சு உகுத்து) இன்னும் இரண்டு திங்கள் பொறுத்திருக்க வேண்டுமாம்! கட்டித் தழுவி, காதல் ரசம் பருகுதற்கு! அப்பா சொல்லி விட்டார்.

[அவள் கரங்களைப் பற்றுகிறான்; கைகளை உதறி விட்டு...]

திரு: இரண்டு திங்கள் போகவேண்டும் தெரியுமா?

மணி: எதற்கு திருமதி?

திரு: அதை, அப்பா சொல்லவில்லை?

மணி: சொன்னார்! சொன்னார் என் சுந்தராங்கி! கையைப் பிடிக்கக் கூடாது என்று சொல்லவில்லையே!

திரு: அவர் சொல்லாததை நான் சொல்கிறேன். கையைப் பிடிக்கக் கூடாது. புடவையைத் தொடுவதுபோல் கிள்ளக்கூடாது; பூச்சூடுவது போல் முத்...(தலையைக் குனிந்து கொண்டு) கொடுக்கக்கூடாது!

மணி: அப்புறம்?

திரு: வந்து...வந்து...

மணி: வரவும் வேண்டாம்; போகவும் வேண்டாம்.

[இழுத்தணைத்துக் கொண்டு)

திருமதி! விதியைப் பற்றிக் கூறுகிறார்கள்! ஊழ் பற்றி உரைக்கிறார்கள். எவர் எப்படிக் கூறிய போதிலும், என் விதி உன்னோடு பிணைக்கப்பட்டு விட்டது. செம்புலப்பெயல் நீர்போல், அன்புடை நெஞ்சங்களாய் இணைக்கப்பட்டு விட்டோம். எழிலரசி! இது விதியா! சூழ்நிலையா என்றெல்லாம் என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. நீ இல்லாமல் இனி என்னால் இருக்கவே முடியாது. தேடக் கிடைக்காத புதையல் நீ! தேவருலகத்து அமிழ்தம் நீ! தின்னத் திகட்டாத தேமாங்கனி நீ. உன் அப்பா ஆராய்ச்சியில் தோல்வியடைந்து விட்டால்கூட மன அமைதி பெற முடியும்! உன்னைப் பெறுவதில் நான் தோல்வி கண்டிருந்தால்...திருமதி! என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை!

திரு: அன்பரே! இடையே அண்ணன் இருக்கிறார்!

மணி: குணாளனுக்கும்கூட என் எண்ணத்தை எடுத்துச் சொல்லிவிட்டேன்! முழு மனத்தோடு ஒப்புக் கொண்டு விட்டான்!

[அவள் முகத்தோடு அவன் முகம் சேர்க்கப் போகிறான். அவள் ஒரு கையால் அதனைத் தடுத்து...]

திரு: இரண்டு மாதம் இருக்கிறது.

மணி: குறும்பு உன் கூடப் பிறந்திருக்கிறது திருமதி!

[அவளை விட்டுவிட்டு தான் நிறுத்திவிட்டு வந்த ஆராய்ச்சி உலை அருகில் செல்கிறான். ஏதோ நினைவு வந்தவனாக துள்ளிக்குதித்து..]

திருமதி! பார்த்தாயா, உன்னோடு பேசிக் கொண்டிருந்ததில் முக்கியமான ஒன்றை மறந்துவிட்டேன். நண்பர் ஒருவரைச் சந்திப்பதாகக் கூறியிருந்தேன். போய்வரட்டுமா? குணாளன் வந்தால் கூற வேண்டாம்.

திரு: வெள்ளி நிலா, நடு வீதியில் இருக்கிற இந்த நேரத்திலா நண்பரைச் சந்திக்கப் போகிறீர்கள்!

மணி: அவர் மூலம்தான் என் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட இருக்கிறது. அவசியம் போகவேண்டும்.

திரு: நான் அறிந்து கொள்ளக் கூடாதவரோ அவர்?

மணி: விவரிக்கிறேன் திருமதி, வேளை வரும்போது!

[என்று கூறிவிட்டு வெளியேறுகிறான்.]

திரு: என்ன வேலையோ, என்ன வேளையோ?

[சொல்லிக்கொண்டே படுக்கைக்குச் செல்கிறாள்.]

காட்சி—28

[மாலதியின் வீடு. நள்ளிரவுக்கு மேலாகி இருக்கிறது. மாலதி மனத்திரையில் பல்வேறு காட்சிகள் உருவகமாகின்றன. திருமுடியார் ஒரு புறம் தன் இரு கைகளையும் ஏந்தி தனக்குக்கொடு என்று கேட்பதைப் போல ஒரு காட்சி! ஒரு கையில் தூக்குக்கயிற்றை வைத்துக்கொண்டு, அதிகார முறையில் அச்சுறுத்தி தன்னிடம் கொடுத்துவிடு

என்று கார்மேகம் மிரட்டுவதுபோல ஒரு காட்சி! மன்னன் குமாரவேலன் மீதும் பாதுகாவலன் விக்ரமன் மீதும், திருமுடியார், இரணப் பொடிகளைத் தூவி, கொலை செய்துவிட்டு, தானே மன்னன் என்று பிரகடனப் படுத்துவதைப்போல ஒரு காட்சி. மல்ல நாட்டு மன்னன், பைகளைப் பெற்றுக் கொண்டு, கார்மேகத்துக்கு முத்துமாலை பரிசளித்து, கட்டித் தழுவுவதைப்போல் காட்சி ஒன்று. திருநாட்டு மக்கள் எல்லாம் திரண்டுவந்து வாள், வேல் முதலான ஆயுதங்களால் தன்னைத் தாக்குவது போல் காட்சி ஒன்று. இந்தக் காட்சிகளை அவள், உருவகப்படுத்திக் கொண்டதும், உடல் வெடவெடத்து விடுகிறது. அச்சம் கவ்விக்கொள்கிறது. 'வீல்' என்று கத்திகொண்டே கீழே விழுந்து விடுகிறாள். தடுமாறிக் கொண்டே எழுந்து கட்டிலில் வந்து அமர்கிறாள். ஆழ்ந்த சிந்தனையை அது பிரதிபலிக்கிறது. மல்ல நாடு தெரிகிறது; சிறை தெரிகிறது; சிறைக்குள் அவள் பூட்டப்பட்டிருப்பது தெரிகிறது. சிறைக்காவலன் தெரிகிறான். மஞ்சத்தில் வைத்து கொஞ்சிக் கொண்டே அவனைக் கொலை செய்யும் காட்சி தெரிகிறது. திருநாட்டுக்கு வந்து, திண்டாடியது முதல், அரண்மனை உறவைப் பெற்று, நாட்டிய நங்கையாய் ஆனதும், பிரமுகர்கள் பலபேர் காதல் பிச்சைக்குக் காத்துக் கிடந்ததும், கடைசியாக மாதவனிடம் தான் மயங்கிப் போனது வரையில் நினைத்துப் பார்க்கிறாள். மீண்டும் திருமுடியாரும், கார்மேகமும் எதிரே நிற்பது போல் உருவகப்படுத்துகிறாள். நடன அரங்கில் மயங்கி விழுவதும், தக்க தருணத்தில் திருமதி தானே ஆடி விழாவுக்கு களை சேர்ப்பதும், திருமதியால் அன்று விக்ரமனின் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டதும் நினைவுக்கு வருகின்றன. மீண்டும் ஆழ்ந்த சிந்தனை. ஏதோ ஒரு முடிவை

அவள் கண்டு விட்டாற்போல, முகம் மலர்ச்சி யடைகிறது. அருகிலுள்ள பைகளையும், குறிப் பையும் எடுத்துக் கொண்டு உட்புறம் நோக்கிப் போகிறாள்.]

காட்சி—29

[மல்ல நாட்டு அரண்மனை. கார்மேகம் அனுப்பிய ஓலைச்சுருளை, அமைச்சர், அரசனுக்குப் படித் துக் காட்டுகிறார்.]

அமை: திருநாட்டில் இருக்கும் நமது ஒற்றர் கார் மேகத்திடமிருந்து கடிதம் வந்திருக்கிறது அரசே!

அரசர்: சொல்லிக் கொண்டிருக்கிறீர் அமைச்சரே... படியுங்கள் விரைவாக!

அமை: இரணப்பொடி பற்றிய இரகசியம் கிடைத்து விட்டதாம்! நாம் ஆராய்ச்சிக்கூடம் தொடங்கி, செய்ய வேண்டிய அவசியமே இல்லாத அளவுக்கு இரணப்பொடி அதிகமாகவே கிடைத்திருக்கிறதாம். படையுடன் எல்லைக்கு வந்து விட்டால் அங்கே பொடியுடன் வந்து தங்களைச் சந் திப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அர: கார்மேகம், கெட்டிக்காரர் ஆயிற்றே! சரியான ஆளைக் கண்டெடுத்துதான் அனுப்பிஇருக்கிறீர்அமைச்சரே! வெற்றிப் பெருமை உமக்குத்தான்! தீய்ந்தது திருநாடு; ஒழிந் தனர், திருநாட்டு வீரர்கள்;சாய்ந்தது திருநாட்டின் கொடி; வீழ்ந்தது அவர்தம் காவல்மரம்! அமைச்சரே, தித்திப்பான இந்தச் சேதியைத் தெரிவியுங்கள், உடனே படைத்தலைவ ருக்கு! முழங்கட்டும் முழவு! ஒலிக்கட்டும் முரசு!

அமை: அரசே! கார்மேகத்தைச் சந்திக்கு முன்னே, முடிவெடுப்பது...

அரச: முட்டாள்தனமாகப் பேசாதீர்! பறை கொட்டச் சொல்லுங்கள்! ஓய்வு பெறச் சென்ற படைவீரர்களுக்கெல் லாம் ஓலை அனுப்பச் சொல்லுங்கள்! மல்ல நாட்டின் வெற்

றியை, இனி, அந்த மகேஸ்வரனால்கூட தடுத்து நிறுத்த முடியாது! விவேகத்துடன் செயலாற்ற வேண்டிய வேளை இது! வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்...

*[மல்ல நாட்டுத் தளபதியார் வருகிறார்]*

தளபதி: (வந்துகொண்டே) செய்துவிட்டேன் அரசே! திருநாட்டை வெற்றி கொள்ள வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். கார்மேகம் எனக்குக்கூட ஓலை அனுப்பி இருந்தார்.

அர: மகிழ்ச்சி தளபதியாரே! மகிழ்ச்சி. பார்த்தீரா அமைச்சரே, நாம் பேசிக் கொண்டே இருக்கிறோம்; படைத் தலைவர் செயல்பட்டுவிட்டு வந்து நிற்கிறார். தளபதியாரே! உமக்குத் தெரியுமா, நம் அமைச்சர் கேட்கிறார், கார்மேகத்தைச் சந்திக்கு முன்பு படையெடுத்துச் செல்வது சரியான முறையா என்று. சிரிப்பு வருகிறது எனக்கு!

அமை: சிந்திக்கவேண்டும் என்றேன்.செயல்படு என்பது அரசர் பெருமானின் கட்டளையென்றால்—கடமைப்படுகிறேன்!

தள: அரசே, ஓர் வேண்டுகோள்! போர்க்களத்துக்கு நானே முழுப் பொறுப்பும் ஏற்றுச் செல்ல அனுமதிக்க வேண்டும்!

அர: (சிரித்துக் கொண்டே) கேட்டீரா அமைச்சரே, தளபதியாரின் தந்திரத்தை! கண்ணுக்குத் தெரிகிற வெற்றியை, கையிலெடுத்துக் காட்டப் போகிறார். அதனால் நான் தேவையில்லையாம். அவரே போனால் போதுமாம்!

*[மறுபடியும் சிரிக்கிறார்.]*

தள: மன்னிக்க வேண்டும் அரசே! வீரத்திற்கே வேலை இல்லாத போர் இது! தாங்கள் வந்து போர்க்களத்தில் நின்றால், தங்கள் தகுதியைத் தவறாகப் பேசுவர் மக்கள் என்றுதான் அப்படிக் கூறுகிறேன்.

அர: தளபதி! நீர்கூடப் போகத் தேவையில்லை. கார்மேகத்தைச் சந்தித்து பொடியைப் பெற்றுக் கொண்டு ஒரே ஒரு வீரனிடம் கொடுத்து, திருநாட்டுப் படை வீரர்மீது தூவி விட்டுவா என்றால்கூடப் போதுமே!

[மறுபடியும் சிரிக்கிறார்.]

தள: அரசர் தவறாக எண்ணிக் கொண்டார்...

அர: இல்லை தளபதி! உண்மையாகவே சொல்கிறேன். வீரத்தைக் காட்டியா திருநாட்டை வெற்றி கொள்ளப்போகிறோம்? இல்லையே! காணப்போகும் வெற்றி விவேகத்தால் அல்லவா! அமைச்சர் கண்டெடுத்த கார்மேகத்தால் அல்லவா!

அமை: (கேலியாக) இப்போது கார்மேகம் திருநாட்டிலேயே இருக்கிறார். அவரைக் கொண்டே, பொடியை, அந்த வீரர்கள் மீது தூவிவிட்டு வரச்சொல்லிவிட்டால்?

அர: (நகைத்து) கேட்டீரா தளபதியாரே! அமைச்சரின் கேலியை! அரசன் நான்...

அமை: கேலியல்ல அரசே! உண்மை. ஆனால், ஊரும் உலகும் பழிக்குமல்லவா...நட்பு நாடாக இருக்கும் மருதூர் கூட கேலிபேசும்! அதற்காகவாவது படையெடுப்பு போல ஒரு பாவனை செய்து காட்டத்தானே வேண்டும்!

தள: உண்மைதான் அரசே! உண்மையான படையெடுப்பு நடக்கத்தான் வேண்டும்! உற்றதெல்லாம் செய்து முடித்துவிட்டேன்! மன்னரின் கட்டளை கிடைக்கப் பெற்றால், படைகள் பாய்ந்து கிளம்ப வேண்டியதுதான்!

அர: கேட்கக்கூடாது தளபதி! இந்நேரம் எல்லையில் இருக்கவேண்டும் நீங்கள். ஓடுங்கள்! ஓடுங்கள்!

[கூறிவிட்டு அரசின் அந்தப்புரம் நோக்கி ஓடுகிறான்! தளபதியும் அமைச்சரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.]

அமை: மல்ல நாட்டின் தலையெழுத்து, இப்படி ஒரு அரசர் இங்கே! திருநாட்டின் தலையெழுத்து, அங்கு ஒரு சிறுவன் அரச பீடத்தில்!

[பெருமூச்சு விடுகிறார்.]

காட்சி—30

[மல்ல நாட்டுப் படையெடுப்பு உறுதியாகிவிட்டது என்பதறிந்த திருமுடியார் சுறுசுறுப்படைகிறார். மாலதியின் உதவியும் கிடைத்துவிட்டது. இனி தன் செல்வாக்கைச் சீரழித்த விக்ரமனைப் பழிவாங்கவேண்டியதுதான் என்று தீர்மானிக்கிறார். மக்கள் மன்றத்தின்முன் தன் தெய்வீக அருள்பற்றி நிரூபித்து விடுவதன் மூலம், மீண்டும் மக்கள் துணைகொண்டு,ஆலயங்களின் அதிகாரங்களைப் பெறலாம் என்று நம்புகிறார். அதையொட்டிய திட்டங்களைத் தீட்டி, தன் அடியார்கள் மூலம் மக்களுக்கிடையே அறிவிக்கச் செய்கிறார்.]

அடியார் 1: சேதி தெரியுமோ! நம் திருமுடியாருக்கு தெய்வீக அருள் சித்தித்திருக்கிறதாம்! நீரிலிருந்து நெருப்பை உண்டாக்குவாராம்! நிலத்திலிருந்து புழுதியை விரட்டுவாராம்!

அடி 2: ஆமாம்! நான்கூட கேள்விப்பட்டேன். வரசித்திவிநாயகப் பெருமானின் துதிக்கையிலிருந்து அடுத்த வெள்ளிக் கிழமை அக்கினி குழம்பு வரவழைக்கப் போகிறாராம்!

அடி 3: ஆண்டவனின் அடியார் அவர். அவர் மனம் நோகும்படி விக்ரமன் நடந்து கொண்டதால்தான் நாட்டிலே பஞ்சமாம், பட்டினியாம்! வயல்கள் எல்லாம் வறண்டிருப்பதற்குக்கூட அவர் ஆண்டவனிடம் கேட்டுக் கொண்டதுதான் காரணமாம்! (என்கிறபோது இதைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த பெரிய தனக்காரர் ஒருவர்—)

பெரியதனக்காரர்: அப்படியா சேதி! திருமுடியார்க்கு விக்ரமன் கேடு செய்தால் ஊர் மக்கள் பழிவாங்கப்பட வேண்டும் என்று ஆண்டவனிடம் கேட்டுக் கொண்டாராமா அவர்? திருமுடியார் எவ்வளவு பெரிய பக்திமான்! இவ்வளவு சிறிய மனம் அவருக்கு இருக்கலாமா?

அடி 1: அப்படியல்ல ஐயா! ஆண்டவன் மீது பக்தி நாட்டு மக்களுக்குக் குறைந்துவிட்டதால்தான் இந்தக் கேடுகள் என்கிறார் அவர். மல்லநாடுகூட போர்தொடுத்திருக்கிறதாமே, அதிலே நம்நாடு வெற்றி பெறவேண்டுமானால் ஆண்டவன் அருள் இருக்கவேண்டுமாம்! வெண்ணாட்டை வென்றதற்குக் கூட, அம்பாளின் அருள்தான் காரணமாம். நாத்திகக் கருத்துக்கள் நாடாள்வோருக்கே வந்துவிட்டதனால்தான் இவ்வளவு பெரிய விபரீதங்கள் எல்லாம் ஏற்படுகின்றன என்கிறார். கடவுளின் கடாட்சம் பெரியதா? விக்ரமனின் வீரம் பெரியதா என்று காட்ட விநாயகப் பெருமானின் துதிக்கையிலிருந்து நெருப்பையே வரவழைத்துக் காட்டப் போகிறாராம்.

பெரிய: உண்மையாகவா! அப்படிச் செய்தால், அது அதிசயம்தான்! ஆண்டவனின் சக்திதான் அகிலத்தை ஆள்கிறது என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்!

அடி 2: அடுத்த வெள்ளிக் கிழமை, வரசக்தி விநாயகர் கோயிலுக்கு வாருங்கள்! இந்த அதிசயத்தை நேரிலேயே பாருங்கள்!

பெரி: பார்ப்போம், பார்ப்போம்.

[கூறிவிட்டு பெரியதனக்காரர் போகிறார். அவர் இரண்டொரு தெருக்களைக் கடப்பதற்குள் திருமுடியார், 'வித்தை' செய்து காட்டி ஆண்டவன் அருளை நிரூபிக்கப் போகும் நிகழ்ச்சி தண்டோராமூலம் அறிவிக்கப்படுவதைக் கேட்கிறார். திருமுடியார், தேவாலயங்களின் அதிபராக இருந்த காலத்திலிருந்து அவரை அறிவாராகையால் உண்மையாகவே இப்படி நடக்கக் கூடுமா என்று ஐயுறுகிறார். இந்த அதிசயம் பற்றி அவரும் பலரிடம் கூறுகிறார். அந்தப் பலரும் வேறு பலரிடமும் கூறுகிறார்கள்.

[அறிவானந்தரைப் பற்றிய இந்தச் செய்தி அரண்மனைக்குள்ளும் நுழைகிறது.]

காட்சி—31.

[அரண்மனையில் ஆத்திரத்துடன் உலவிக் கொண் டிருக்கிறான் விக்ரமன். மல்ல நாட்டுப்படை வந்து கொண்டிருப்பது அறிந்து, ஒற்றன் ஒரு வன் ஓடிவருகிறான்.]

ஒற்றன்: பிரபு! கார்மேகம் இன்று காலை ஊரை விட்டே ஓடிப் போய்விட்டார்.

விக்ர: எதிர்பார்த்தேன்! சரி, நீ போ!

[அவன் போனதும் தனக்குள்]

சந்தேகித்தது சரியாகிவிட்டது! கார்மேகம் மல்ல நாட்டின் உள்வாளியாக இருக்க வேண்டும் என்று அனுமானித்தது, இத்தனை சீக்கிரம் உண்மையாகும் என்று நினைக்கவில்லை. முத்து வணிகன்-அயல் நாட்டான் என்றபோதே எச்சரிக்கை எடுத்திருக்க வேண்டும்! என்னென்ன இரகசியங்களுடன் போயிருக்கிறான் என்றே தெரியவில்லை! அறிவானந்தர் ஒருவரால்தான் இந்த நெருக்கடியிலிருந்து திருநாடு காப்பாற்றப் பட முடியும். பார்க்கலாம்!

காட்சி—32

[அறிவானந்தர், ஆய்வுக்கூடத்தில் ஆராய்ச்சியில் ஆழ்ந்து கிடக்கிறார். துணைக் கருவிகளும் துணைப் பொருள்களும் அங்குமிங்குமாகக் குவிக் கப்பட்டு அலங்கோலத்துடனிருக்கின்றன. நீர்க் கடிகாரம் மட்டுமே அங்கு அமைதியைக் குலைத் துக் கொண்டிருக்கிறது. கவலை கப்பிய முகத் துடன், விக்ரமன் அங்கு வந்து அமைதிச் சூழலை யொட்டி, தானும் அமைதியாக, அங்குள்ளவை களைப் பற்றிக் கண்ணோட்டம் விடுகிறான். மனம் மட்டும், நிலைமைகளை அசை போட்டுக் கொண்டிருக்கிறது]

விக்ரமன் மனம்: புறஉலகை மறந்து புதைந்து கிடக்கிறார் ஆராய்ச்சியில். இதன் வெற்றியின் மீதுதான் இவருக்கு எவ்வளவு நம்பிக்கை! ஆராய்ச்சியில் வெற்றி கிடைத்துவிட்டால், என்ன அற்புதத்தை நிகழ்த்திவிட முடியும் என்று நம்புகிறார். விஞ்ஞான அறிவின் வெற்றி, நாட்டில் வளஞ் சுரக்க எந்த வகையில் பயன்பட முடியும்? போர் கூடாது என்கிற இவர், போர், பகை, பசி காரணமாக மனிதன் சாகக் கூடாது என்பதற்காக முயற்சி மேற்கொள்வதாகக் கூறுகிறார். நம்பவும் முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை. இரணப்பொடியைச் சோதித்துக் காட்டினார். துளிபட்டால்கூட ஆறாத ரணம் உண்டாகிவிடுகிறது; அதற்கு ஒரு மாற்றுமருந்தாம்! இரணம் ஆறிப் போகிறதாம்! இவரது ஆராய்ச்சி உண்டாக்கிய அழிவை, இவர்தம் ஆராய்ச்சி தான் போக்க முடியும் என்றாகிறதே! நீரிலிருந்து நெருப்பை அழைப்பேன் என்கிறார் இவரும்! திருமுடியாரும் கூடத்தான் இந்த வித்தையைச் செய்யமுடியும் என்று ஊரைக் கூட்டி உரைத்திருக்கிறார். வேளை குறித்தும் விட்டிருக்கிறார். திருமுடியார் ஆண்டவன் அருள் என்கிறார்; அறிவானந்தர் அதனையே அறிவின் திறன் என்கிறார். ஆண்டவனுக்கும் அறிவுக்குமே இங்கே போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இருளும், ஒளியும் மோதத் தொடங்கி இருக்கின்றன. திருமுடியார் வெற்றிபெற்றுவிட்டால்...வெற்றி பெற்றுவிட்டால்...வெற்றி பெற்று...

[விக்ரமனின் சிந்தனை தடைப்படுகிறது. திருமுடியார் வெற்றி பெற்றுவிட்டால், தனக்கு வீழ்ச்சி நிச்சயம்; திருநாடும் மல்ல நாட்டிடம் மண்டியிட்டுத் தீர வேண்டியதைத் தடுக்க முடியாது என்று எண்ணுகின்றான். திருமுடியாரின் திருவருளை, அறிவானந்தரின் அறிவாராய்ச்சி மூலம் பொய்யாக்கிக்காட்ட வேண்டும் என்று நினைக்கிறான். அந்த எண்ணம் ஏற்பட்டவுடன், அறிவானந்தரின் அருகில் வந்து நின்று...]

விக்: அறிவானந்தரே...அறிவானந்தரே...

[மெல்ல அழைக்கிறான். மோன நிலையிலிருப்பதுபோன்ற ஆழ்ந்த சிந்தனையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு திரும்பிப் பார்க்கிறார். விக்ரமன் புன்னகை புரிந்தபடியே—]

விக்: விக்ரமன் வந்திருக்கிறேன்! சிந்தனையைக் கலைத்ததற்காக...

அறி: எப்போதுமே விக்ரமரே ஒரு விஷயம் என்றால், முழுமையான உணர்வுகள் அப்படியே என்னை ஆக்ரமித்துக் கொள்கின்றன! பசியோடிருக்கும் வேங்கை கிடைத்த வேட்டையைக் கவ்விக் கொள்வதைப் போல! அறிவுப்பசி! அறிவுப்பசி!

விக்: மல்ல நாட்டுக்கு வந்திருக்கும் பேரபாயம் பற்றி அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அறி: எனக்கு வெற்றி கிடைத்தால், மிகக் குறைந்த கால அவகாசத்தில் பொன் கொழிக்கும் பூமியாய் இதனை மாற்றியமைப்பேன்! பசி, பட்டினி இவைகளுக்கே பஞ்சம் வந்துவிடும் தளபதியாரே! வறுமை, வறட்சி என்பவைகளுக்கான விளக்கங்களை வருங்காலத் தலைமுறையினர், வயதான பெரியோர்களிடமிருந்து கேட்டுதான்தெரிந்துகொள்ள முடியும்! இதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது விக்ரமரே! வெற்றி நிச்சயம். அந்த வேளையைத்தான் நான் நிர்ணயிக்கப் பாடுபடுகிறேன்! முயற்சிக்கிறேன்!

விக்: நெஞ்சம் பூரித்துப் போகிறது, உங்கள் புல்லரிக்கும் செய்திகளைக் கேட்க! புளகாங்கிதமடைகிறேன்! அறிவானந்தரின் வெற்றி அறிவின் வெற்றி என்று அகமகிழ்கிறேன்.

அறி: ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் அகிலத்தை, அமைதிப்படுத்த வேண்டும்! அறிவுக்கு முதலிடம் தந்து, செயல்படச் செய்யவேண்டும்.

விக்: வியப்பாயிருக்கிறதே பெரியவரே! திருமுடியார் இருக்கிறாரே, அவர் ஆண்டவனின் அருள் பெற்றவராம்! அந்த அருளைக் கொண்டு, அவனியைச் செழிப்படையச்

செய்துவிட முடியுமாம்! செப்பித் திரிந்தார் இப்படியெல்லாம்! இப்போது செய்து காட்டவே போகிறாராம்! அறிவானந்தரை, இங்கே ஆண்டவனின் அருள் அல்லவா வெற்றி கொள்ளப் போகிறது! பசியையும், பட்டினியையும், அந்த அருள்கொண்டு பறந்தோடச் செய்ய முடியும் என்கிறார்; ஆனால் திருநாடு தேவநாடாய் ஆவதற்குக் காணிக்கை தரவேண்டுமாம் மக்கள், தங்கள் தூய ''பக்தி''யை! ஆண்டவனின் மீது அன்பு செலுத்த வேண்டுமாம்!

அறி: ஆண்டவன் மீது அன்பு செலுத்துவது என்பது, மக்கள் ஒருவர்மீதொருவர், ஆண்டவனின் பேரால், அன்பு செலுத்திக் கொள்வதே யாகும். அந்த முறையில் தவறில்லை.

விக்: காணிக்கை வேண்டுமாமே, காணிக்கை! கடவுளரின் காலடியிலேயே வீழ்ந்து கிடக்க வேண்டுமாமே!

அறி: வயிறு இருக்கிறதே வயிறு என்று வாடிக் கொண்டிருக்கும் மக்களிடம், வயிறு நிரம்பும் வழி இதுதான் என்று எவர், எதைச் சொன்னாலும் நம்பித்தானே தீர வேண்டும்! நம்புகிறார்கள் மக்கள்!

விக்: நம்பிக்கையுடன் நின்றுவிட்டால் சரி; தீங்கொன்றுமில்லை. ஆண்டவனின் அருள் கொண்டுதான் ஆபத்துக்களைக் கடக்க முடியும் என்று, பிரச்சாரத்திலும் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள்! சிற்சில அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்ட முன் வருகிறார்கள். அறிவானந்தரே! நீங்களும் கூறுகிறீர்கள். நினைத்த இடத்தில் நெருப்பினை உண்டாக்கிக் காட்ட முடியும் என்று! அறிவின் ஆராய்ச்சி என்கிறீர்கள் அதற்கு! திருமுடியாரும் கூறுகிறாராம் அக்னிக் குழம்பை, ஆண்டவன் அருளால் ஆக்கிக் காட்டுவதாக! எனக்கு வேறுபாடு விளங்கவில்லையே!

அறி: உண்மையாகவா விக்ரமரே! உழைப்பு உழைப்பு என்று ஆராய்ச்சியிலேயே உழன்று கொண்டிருப்பதால் உலக நடப்பு பற்றியே உணர முடியாமல் போய்விடுகிறது! திருமுடியாரின்அறிவிப்பு உண்மையானால், திருவருளின்பெருமை, பெருமைதான்!

விக்: அறிவித்திருப்பது உண்மைதான் அறிவானந்தரே!

அறி: அறிவித்திருக்கலாம்! ஆக்கிக்காட்ட வேண்டுமல்லவா!

விக்: அருளும், அறிவும் மோதுகின்றதே பெரியவரே!

அறி: மோதல்தான்.

விக்: ஒரு வேண்டுகோள்! வெள்ளிக்கிழமையன்று, வரசித்தி விநாயகரின் துதிக்கையிலிருந்து அக்னிக் குழம்பை வரவழைக்கப் போகிறாராம் திருமுடியார்! நீங்களும் இது போல் அந்த இடத்திலேயே ஏதாவது அற்புதங்கள் செய்து காட்ட வேண்டும்!

அறி: திருமுடியார், உண்மையிலேயே தெய்வீக அருள் பெற்றிருந்தால், நாம் விபரீதங்களைச் சந்திக்க நேரிட்டு விடுமே தளபதியாரே!

விக்: தெய்வீக அருளா அல்லவா என்பதை நிர்ணயித்துத் தீரவேண்டுமே! உண்மையின் பக்கம், ஒன்றுமறியாத அப்பாவி மக்களை அழைத்துப் போவது அரசாங்கத்தின் கடமை என்பது, உங்களுக்குத் தெரியாததல்லவே!

அறி: உண்மைதான்! நாம்கூட அதுபற்றித் தெரிந்து கொள்ளத்தானே வேண்டும்!

விக்: மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்! திருநாடு தங்கட்குக் கடமைப்பட்டிருக்கிறது! இன்னொன்று பெரியவரே, மல்லநாடு போருக்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டதாம்.

அறி: திருநாடு! ஏற்கனவே தீய்ந்துபோன சுடுகாடாகி இருக்கிறது என்பது தெரியாது போலும் அவர்களுக்கு! செச்செ! உடலையும், உதிரத்தையும் கழுகுகளுக்கும் காக்கைகளுக்கும், நாய்களுக்கும், நரிகளுக்கும் விருந்தாக வெட்டிச் சாய்ப்பதில் விவேகம் இருப்பதாக என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. வேலை இருக்கிறது விக்ரமரே, அப்புறம் வாருங்கள்!

விக்: நான் வருகிறேன்! வெள்ளிக்கிழமை...

அறி: நான் வருகிறேன்!

[மீண்டும் ஆராய்ச்சிக் கருவிகளிடையே புகு கிறார். பல்வேறுபட்ட திரவங்களையும் சுண் ணங்களையும் கலந்து, வெவ்வேறு முறையில், வெவ்வேறு கருவிகளில் கொட்டத் தொடங்கு கிறார்.

[விக்கிரமன் மகிழ்ச்சியுடனும், இன்னொருபுறம் வேதனையுடனும் போகிறான். மல்ல நாட்டுப் போருக்கு, அறிவானந்தரின் உதவி கிடைக்கா விட்டால் அவரை என்ன செய்வது என்ற சிந் தனை அவனைக் கப்பிக்கொள்கிறது. அதே சமயம் திருமுடியாரை அறிவானந்தர் வெற்றி கொள்ள முடியுமா? உண்மையிலேயே ஆண்டவனின் அருள் அவருக்குக் கிடைத்திருந்தால், என்ன செய்வது என்ற ஐயமும் ஏற்படுகிறது. குழப்பத்தோடு போகிறான்.]

காட்சி—33.

[சித்திவிநாயகர் கோவில்! வெகுவாக அலங்கரிக்கப்பட் டிருக்கிறது. கோவிலுக்குள்ளிருக்கும் எல்லா விக்ரகங்களும் சிறப்பாக, அலங்கரிக்கப்பட்டு, பார்க்கும் போதே பக்தி சுரக்கும்படியான பாங்கிலிருக்கின்றன. வரசித்தி விநாயகர் வண்ணப் பூக்களாலும் வாசனைப் பொருள்களாலும் அலங் கரிக்கப்பட்டிருக்கிறார். கடவுள் நம்பிக்கை இல்லாதார் கூட, அந்த அலங்கார அமைப்பைப் பார்க்கும்போது, சித்தங் குழம்பி, கன்னத்தில் போட்டுக் கொள்ளும்படியான முறை யில் விநாயகர் விக்கிரகம் இருக்கிறது. எதிரே சற்றுத் தள்ளி பச்சைத் தென்னை ஓலையால் சிறு பந்தல் போடப்பட்டு, ஓம குண்டம் வளர்க்கப்பட்டிருக்கிறது. குண்டத்தைச் சுற்றி அமர்ந்திருக்கும் பல புரோகிதர்கள் நெய், எண்ணெய், முதலானவைகளை ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர் களைச் சுற்றி அமர்ந்திருக்கும் வேதியர்கள், வேதபாரா யணங்களை விண்ணதிர முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாடே திரண்டு வந்திருப்பது போன்ற பிரமையை உண்டாக்கத் தக்க அளவு மக்கள் வெள்ளம் ஆலயத்தைச் சுற்றியும், ஆலயத்துக்குள்ளும், விநாயகருக்கு அருகிலுமாக குழுமியிருக்கிறது.

பக்திப் பூஷணர்களாய் சிலர்; பக்தியா? புத்தியா? என்ற தெளிவைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் பலர்; கடவுள் அருளுக்கு எதிர் நிற்க முடியுமா அறிவானந்தர் என்ற ஐயப்பாட்டில் பலர் என்ற வகையில் மாளாத கூட்டம் கூடி இருக்கிறது.

விநாயகருக்குச் சற்றுத் தள்ளி விக்ரமனும், அறிவானந்தரும், அரசாங்க அதிகாரிகள் சிலரும் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர்.

விநாயகருக்கு மறுபக்கம், அடியார்கள் சிலர் சூழ, பக்திப் பிழம்பாய், நீறுபூசிய நெற்றியுடனும், உருத்திராட்ச மாலைகள் நிரம்பிய கழுத்துடனும், அவற்றை மறைக்கும் படியாக மலர்மாலைகள் அணிந்தும், ஏதோ மந்திரமொன்றை உச்சரிக்கும் முணுமுணுப்புடன் கண்களை மூடிக்கொண்டு, ஆவேசம் வந்தவரைப்போல் நின்று கொண்டிருக்கிறார், திருமுடியார்.

குறித்த வேளை வருகிறது. ஆலயமணி அடிக்கத் தொடங்குகிறது. பக்தர்களின் கவனம் விநாயகரின் பக்கம் திரும்புகிறது. வம்பளப்புகள் குறைகின்றன. கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு முன்னேறுகிறது.

ஓமகுண்டத்திலிருந்து கரும் புகை கிளம்பி, வானமண்டலத்தையே கருமையாக்கத் தொடங்குகிறது.

திருமுடியார் கண்களைத் திறந்து, அப்போதுதான் இந்த உலகத்துக்கு வந்தவரைப்போல் சுற்று முற்றும் வெறிக்கப் பார்க்கிறார். உடனே மக்களைப் பார்த்து புன்னகை புரிந்துவிட்டு, விநாயகரின் எதிரே சென்று நின்று...]

திருமுடி: வேத முதலோனே! விநாயகனே! விக்கினங்கள் தீர்ப்போனே! ஆதி முதல்வா! ஆபத் சகாயனே! ஆலம் உண்டவனின் அன்புப் புத்திரனே! பக்தன் குறை போக்கும் சித்தி விநாயகா! சித்துக்களின் தலைவா! மாதாவுக்கீடாக மனைவி தரக் கேட்டவனே! மண்டியிட்டு நிற்கின்றேன், மண்டலத்தைக் காத்தருள்வாய்!

[என்கிறபோது அறிவானந்தர் அமர்ந்திருக்கும் பக்கம், அவர் பார்வை விழுகிறது. அறிவானந்தர் சிரித்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார்! திருமுடியார் படபடக்கும் நெஞ்சத்தோடு...]

விக்கினங்கள் தீர்க்கின்ற விநாயக மூர்த்தியே! உன்பால் வெறுப்புற்றிருக்கின்ற விவரமறியா இந்த மக்களை நல்வழிப்படுத்து! நல்லறிவு தா! நலிவு நீக்கி பொலிவுண்டாக்கு! ஐயனே, அடியவரின் மெய்யனே! ஆண்டவன் அருள்மீதே ஐயுற்று விட்டார்கள் இந்தப் பாமர மக்கள்! பாமரர்கள் அவர்கள்! செம்மறியாடுகள் அவர்கள்! சிந்திக்கத் தெரியாதவர்கள் அவர்கள்! சிவகுமாரா! செகத்தை உய்விக்கும் சித்துக்களில் ஒன்றை இங்கே நிகழ்த்திக் காட்டு! விநாயக பெருமானே! ரட்சிக்கத் தூக்கும் துதிக்கையிலிருந்து நெருப்புக் குழம்பினைக் கொட்டிக் காட்டு! காணட்டும் இந்தக் கண்ணற்றக் குருடர்கள்! களிக்கட்டும் உன் பெருமை கண்டு! காரி உமிழட்டும், கடவுள் கிருபையா என்று கத்தித் திரிவோரை!

[என்று தொழுதுவிட்டு, கண்களை மூடிக்கொண்டே...) ஓம் கம் க்லாம் மகா கணபதி! வசி வசி சுவாகா! வசக் வை சவுட்!]

[என்று ஆயிரத்தெட்டு முறை ஜெபித்துவிட்டுக் கண்களைத் திறந்து...]

என்னைச் சோதிக்கவில்லை பிரபு! இந்த தூர்த்தர்களைச் சோதிக்கிறாய்! பொறுமை இழக்கிறார்கள் மக்கள்! புனிதா! வரமருள்வாய் ஆண்டவனே!

[வாச மலர்களை கை நிரம்ப எடுத்துக் கொண்டு, விநாயகரின் அருகில் சென்று, அங்கம் அங்கமாகத் தொட்டு வணங்கிவிட்டு, இறுதி யாகத் துதிக்கையையும் தொட்டு வணங்குகிறார்]

மக்களின் கவனம் விநாயகர்மீது பதிந்திருப்பதைப் போலவே, அறிவானந்தரது கவனமும் திருமுடியாரின் ஒவ்வொரு நடவடிக்கைகளின் மீதும் பதிந்திருக்கிறது. விநாயகரிடம் வந்து திருமுடியார் நிற்கும்போது, அறிவானந்தரும், அவருக்கு அருகில் வந்து நின்றுகொண்டு கவனிக்கிறார். நெஞ்சப் பதட்டத்துடன் மறுபடியும் மூன்று முறைகள் துதிக்கையினைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, கண்களை மூடிக் கொள்கிறார்.

கூடியிருந்தவர்களிடையே பரபரப்பு ஆரவாரம் ஏற்படுகிறது. அறிவானந்தர் உட்பட விக்ரமனும், மற்ற அனைவருமே வியப்புக்குள்ளாகின்றனர்.

விநாயகரின் துதிக்கையிலிருந்து தீச் சுவாலைகள் வெளிப்படுகின்றன. சுவாலை கொழுந்துவிட்டெரிகிறது. கூடியிருந்த பக்தர்கள் கூட்டம், கன்னத்தில் மாறிமாறி போட்டுக்கொண்டும், கீழே சாஷ்டாங்கமாக விழுந்தும் பக்தி செலுத்துகின்றது.

ஆரவார ஒலி கேட்டு, திருமுடியார் கண்களைத் திறந்து பார்க்கிறார், துதிக்கையிலிருந்து தீச்சுவாலைகள் தெறித்துக் கொண்டிருக்கின்றன.

மக்கள் வெள்ளத்துக்கிடையே இருந்து, 'திருமுடியார் வாழ்க! தெய்வீகம் வாழ்க!! தேவன் அருள் வாழ்க!!' என்ற வாழ்த்தொலிகள் கிளம்புகின்றன! இருந்த இடத்திலிருந்தே கைகளை உயர்த்தி ஆசி அருள்கிறார் திருமுடியார்.

விக்ரமனுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. திருமுடியார் வெற்றி பெற்று விட்டார்; தீர்ந்தது தன்வாழ்வு என்று அஞ்சுகிறான்.

அறிவானந்தர் அருகிலிருந்த மக்களில் சிலரைத் தம் அருகே அழைத்து—

அறிவா: மெய்யன்பர்களே! திருமுடியாரிடம் தெய்வீக அருள் நிரம்பி இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்! பாராட்டுகிறேன். யாராலும் விளைவிக்க முடியாத அற்புதத்தை ஆண்டவனின் அருளால் ஆக்கிக் காட்டியிருப்பது மகிழ்ச்சி யளிக்கிறது!

[மக்கள் கைதட்டி ஆரவாரிக்கிறார்கள். திருமுடியாரின் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதேபோல் இந்தப் பேச்சு கேட்டு விக்ரமனின் இதயமும் துடிக்கத் தொடங்குகிறது]

ஒரு: உண்மைதான்! திருமுடியார் தெய்வீக அருள் பெற்றவர் என்பதை நிரூபித்துவிட்டார்! கடவுளின் கருணையால்தான் உலகம் வாழமுடியும் என்பதை மெய்ப்பித்துவிட்டார். உலகின் மருள் நீக்கி, அருள் நிலவச் செய்ய அவரால்தான் முடியும் என்பதை தெளிவாக்கிவிட்டார்! பாராட்டாமலிருக்க முடியுமா?

அறி: பாராட்டத்தான் வேண்டும்! போதுமென்கிற அளவுக்கு என் பாராட்டுக்கள். ஆனால் ஒன்று! ஆண்டவனின் அருள் காரணமாகத்தான் இந்த அற்புதம் நிகழ்த்த முடியுமென்றால், இந்த அற்புதத்தை ஒரே ஒரு முறைதான் நிகழ்த்த முடியும் என்று ஏற்றுக்கொள்ள முடியாது!

[என்று கூறிவிட்டு, திருமுடியாரைப் பார்க்கிறார். அவர் இதயம், வெடித்துவிடும் நிலையிலிருக்கிறது. இந்தப் பாவி எதற்காக இங்கு வந்தான்? என்னென்ன விபரீதம் விளையுமோ என்ற அச்சமும் அவரைப் பற்றிக் கொள்கிறது. அறிவானந்தரது இந்தக் கேள்வியால், விக்ரமன் மெல்ல தெளிவடைகிறான். இனி அறிவானந்தர் திருமுடியாரை வெற்றி காண்பார் என்று நம்புகிறான். அப்போது]

திருமுடியார் அவர்களே! ஆண்டவனின் அருள் பலிக்கப்பெற்ற அடியவர் நீங்கள் என்று நானும் இந்த மக்கள் அனைவருமே ஒப்புக் கொள்ளுகிறோம். உயிரின்றி உட

வில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, ஆண்டவனின் அருள் இன்றி இந்த அற்புதமும், இவைபோன்றவைகளும் என்று நம்புகிறோம். இதோ பாருங்கள்! விநாயகரின் துதிக்கையிலிருந்து வெளிவந்த தீச்சுவாலை இப்போது நின்றுவிட்டது. உங்கள் இஷ்டபூர்வமாக இதனை அலங்கரித்திருக்கிறீர்கள். சித்தி விநாயகரின் சித்தம் குளிரும் அளவுக்கு சிங்காரம் இருக்கிறது! தீச் சுவாலையால் கருகியவை போக எஞ்சி இருக்கும் மலர்களிலிருந்து இன்னமும் நறுமணம் கமழ்ந்து கொண்டுதானிருக்கிறது. நீங்கள் இட்ட கட்டளைக்குப் பணிகிறோம். கலனாகி இருக்கும் கோபுரங்களைப் புதுப்பிக்க, கருவூலமனைத்தையும் கொட்டிக் கொடுத்து விடும்படிக் கூறுகிறேன். விக்ரமபூபதி இங்கேயே இருக்கிறார்! இங்கேயே உத்திரவும் பிறப்பிக்கப்படும்!

[என்று கூறிவிட்டு விக்ரமனைப் பார்த்துப் புன்னகை புரிந்துவிட்டு மக்களைப் பார்த்து]

மகேஸ்வரன் அருளால், விநாயகமூர்த்தியின் கடாட்சத்தால் இன்னும் ஒருமுறை, ஒரே ஒரு முறை, இங்கே நின்றபடியே அந்தத் துதிக்கையிலிருந்து நெருப்புக் குழம்பைக் கொட்டச் செய்துவிடுங்கள். எனக்காக அல்ல! இந்த மக்களுக்காகக் கூட அல்ல! திருநாட்டுக் கருவூலத் தைத்திறந்து விடுவதற்காக! தேவாலயங்களுக்கு முன்போல் முழு அதிகாரங்களையும் வழங்கச் செய்வதற்காக! அரசாங்கம் பறித்துக் கொண்ட அனைத்து அதிகாரங்களையும் மீண்டும், திருமுடியாரே! உங்களிடம் திருப்பிக் கொடுப்பதற்காக! இன்னும் ஒரே ஒருமுறை, தீயை அழையுங்கள்! தீத் தேவனைக் கொண்டு வந்து நிறுத்துங்கள்!

திரு: (நடுங்கும் நிலையில்) இதென்ன பிரமாதம்! எத்தனை முறை வேண்டுமானாலும் தீச்சாறு பிழிந்தெடுக்க முடியும், இந்தத் துதிக்கையிலிருந்து! இதோ பாருங்கள்!

[என்று மீண்டும் விநாயகரின் அருகே செல்கிறார் அவரைத் தடுத்து...]

அறி: அருகே சென்று அல்ல, இங்கே நின்று! மந்திரோச் சாடனங்களை முழங்குங்கள்! வேண்டுகோள் விடுத்துக் கேளுங்கள்!

[என்றதும் மக்களுக்கிடையே பரபரப்புண்டாகிறது. சிலர் 'ஆண்டவனைச் சோதிக்கக் கூடாது' என்று குரல் கொடுக்கிறார்கள்! 'கடவுளைச் சோதிப் பவன் கர்மவான்'' என்று சிலர் கத்துகிறார்கள். இன்னும் சிலர் ''தீயை வரச் செய்யுங்கள் மறு படியும்'' என்று உரக்கக் கூவுகின்றனர். விக்ர மன் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரித்துவிட்டு அறிவானந்தரின் அருகில் வந்து நின்று கொள் கிறான். நிலைமை நெருக்கடியாகிவிட்டதை உணர்கிறார் திருமுடியார். நின்ற இடத்தி லிருந்தேமந்திரங்களைமுழங்கத்தொடங்குகிறார். இடையிடையே, தேவே! என்கிறார். திருவே! என்கிறார். உடல் அதிகமாக நடுங்கத் தொடங்கு கிறது...தீ வரவில்லை; விழிக்கத் தொடங்கு கிறார்.]

அறி: (மக்களைப் பார்த்து) மகேஸ்வரனின் அருள், திருமுடியாருக்கு ஒரே ஒரு முறைதான் சித்தித்தது போலும்! பெருங்குடி மக்களே! மெய்யறிவின் குல தெய்வங்களே! இந்த வரசித்தி விநாயகர் அல்ல—பல்லாண்டு காலம் பட்ட பாடு, எனக்கு. நான் எத்தனை முறை வேண்டுமானாலும், எந்த இடத்திலிருந்தும், எந்தப் பொருளிலிருந்தும், தீயை வர வழைக்க முடியும் என்ற நிலையைத் தந்திருக்கிறது. பாருங்கள், அந்த வேடிக்கையை!

[என்று தம் கைப்பெட்டியிலிருந்து கரித்துண்டு ஒன்றை எடுத்து துதிக்கையில் வைத்துத் தேய்க்கி றார். அதிலிருந்து மீண்டும் நெருப்பு வருகிறது. அதைச் சுட்டிக்காட்டி]

துதிக்கையிலிருந்து மட்டுமல்ல-இந்தத் தூணிலிருந்தும் கூட-

[என்று ஒரு தூணின் மீது கரித்துண்டு போன்ற இன்னொன்றை எடுத்துத் தேய்க்கிறார். அதிலி ருந்தும் நெருப்பு வருகிறது. அருகே இருந்த நெய்க் கொப்பறையை இழுத்து வைத்துக் கொண்டு]

'நெய்யிலிருந்தும் கூட நெருப்பு வருகிறது பாருங்கள்!' என்று கொப்பறையில் ஒரு துண்டைப் போடுகிறார். நெய் பற்றி எரியத் தொடங்குகிறது! கூட்டத்தில் கூச்சல் கிளம்புகிறது!

திருமுடியாரே! எத்தனை முறை எங்கெங்கிருந்தெல் லாம் நெருப்பு வந்தது! ஒரே ஒருமுறை! நின்ற இடத்திலிருந்து

விக்ர: பூஜ்யரே! இழந்த உன் பெருமைகளையெல்லாம் மீண்டும் தருகிறேன்! பறித்துக் கொண்ட நிலங்களையெல் லாம் உம்முடைய ஆதிக்கத்துக்கே திரும்பவும் அளிக்கிறேன். தீயைக் கூப்பிடுங்கள்!

[என்கிறார். திருமுடியார் மயங்கிக் கீழே விழுந்து விடுகிறார். கூட்டத்தின் குரல் உச்சிக்குச் செல் கிறது! கூட்டத்தில் ஒருவன்—]

ஒருவன்: கடவுளின் பேரால் கயமை புரிந்த கயவனைக் கொல்லுங்கள்! குத்துங்கள்! வெட்டுங்கள்! போலி வேடம் போட்டு புதுமைவிளைப்பதாய்க்கூறிய கோமாளியைக் கொல் லுங்கள்!

[என்று கூச்சலிடுகிறான். கூட்டம் முன்னிலும் அதிகமாக நெருங்கி வருகிறது!]

விக்ர: சபாஷ், அறிவானந்தரே! புன்மைச் செயலை, போலித்தனத்தை தங்கள் அறிவாற்றல்கொண்டு கண்ட ஆராய்ச்சித் திறனால் பொசுக்கிப் போட்டு விட்டீர்கள். பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!! [என்கிறார். கூட்டம் திருமுடியாரைக் கொலை செய்ய வேண்டும் என்று நெருங்கு கிறது.]

அறிவா: யாரும் ஆத்திரப்படக் கூடாது. இவ்வளவு விபரீதங்களுக்கும் திருமுடியாரைக் குறைகூறக் கூடாது. ஏமாறுவோராய் நாம் இருந்தது திருமுடியாரின் குற்றமல்ல. நம் மக்கள் ஏமாளிகளாய் இருக்கும்போது திருமுடியார் போன்றவர்கள் ஏய்ப்பவர்களாக இருப்பது எப்படிக் குற்றமாகும்! விழிப்புடையவர்களாக, அறிவாற்றல் மிக்கவர்களாக, சிந்தனை செய்து பார்த்துத் தெளியும் திறன் மிக்கவர்களாக நாம் இதுவரையில் இல்லாது போனதற்கு வெட்கப்படவேண்டும். நாமே குற்றவாளிகளாய் இருந்து கொண்டு திருமுடியாரைக் குற்றக் கூண்டிலேற்றுவது கொடுமையிலும் கொடுமை! அறம் வளரவேண்டும்! அன்பு தழைக்க வேண்டும்! அறிவு செழிக்கவேண்டும்! திருமுடியாரை மன்னிப்போம்! தேவ அருள் பற்றி இனியாவது சிந்திப்போம்.

[என்கிறார். கூட்டத்தின் கூச்சல் அடங்கவில்லை. ''அறிவானந்தர் வாழ்க! திருமுடியார் ஒழிக!'' என்ற குரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது, விக்ரமன், அறிவானந்தரை ஆரத் தழுவிக் கொள்கிறான்.]

விக்ர: பெரியவரே! திருநாட்டின் தெய்வம் நீங்கள்! அறிவுலகின் சிகரம் நீங்கள்! மெய்ப்பொருளின் விளக்கம் நீங்கள்! புறப்படலாம், வாருங்கள்!

[என்றழைக்கிறார்.]

அறி: பெருங்குடி மக்களே! பேதைமை காரணமாக நீங்கள் திருமுடியாருக்குக் கேடு நினைத்தால், பாவம் உங்களைப் பற்றிக் கொள்ளும்! அறிவுடைமை கேலி பேசும்! யாரும் இதற்காகப் பழிவாங்கப்படக் கூடாது! உயிர், எந்த ஒன்றைக் காட்டிலும் மேம்பட்டது! உயர்வறிந்து ஒழுக வேண்டும். வருகிறேன்!

[அறிவானந்தர் விக்ரமனுடன் புறப்படுகிறார். அதுவரையில் மூர்ச்சசடைந்து கிடந்த திருமுடியார், தட்டுத் தடுமாறி எழுகிறார். மக்கள் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு தலைகுனிந்தபடியே தடுமாறி நடக்

கிறார். அறிவானந்தரின் அறிவுரையைக் கேட்ட கூட்டம், அவருக்கு விலகி நின்று வழி விடுகிறது. கோவில் பிரகாரங்களைக் கடந்து வெளியே வந்து நடக்கிறார். வெளியில் நின்ற கூட்டம் அவர்மேல் பாய்ந்து விடுகிறது. சிலர் கல்லெறிந்து தாக்குகிறார்கள். சிலர் கட்டையை வீசித் தாக்கு கின்றனர். கூட்டத்தினர் தாக்கத் தொடங்கிய தும், மேல் மூச்சு வாங்க ஓட்டம் பிடிக்கிறார் திருமுடியார். கூட்டமும் துரத்திக் கொண்டே ஓடுகிறது! கற்கள் முன்னிலும் பலமாய் அவரைத் தாக்குகின்றன; சுருண்டு விழுகிறார் வீதியில்!]

காட்சி—34

[அறிவானந்தர் ஆய்வுக்கூடம். ஆராய்ச்சிக் குறிப் புக்கள் அடங்கிய சுவடியைப் புரட்டிக் கொண் டிருக்கிறார் அறிவானந்தர், இதயத்துக்குள்ளே எண்ணங்கள் மட்டும் எழுந்து எழுந்து அடங்கிக் கொண்டிருக்கின்றன.]

எண்ணம்: திருமுடியார் நிச்சயம் என் கண்டுபிடிப் பைத்தான் பயன்படுத்தி இருக்கிறார். எனக்கு ஏற்பட்ட ஐயத்தாலேயே, இடம் விட்டு நகரக்கூடாதென்றேன். அதன் காரணமாகவே அவரது ஏமாற்றுத்தனம், வெளிப்பட் டது! எள்ளி இகழப்பட்டார்.

[என்கிறபோது, சுவடியில் குறிப்புக்கள் கிழிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறார்; பதட்டம் ஏற் படுகிறது.]

குறிப்புக்கள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. வேரோடு மரத்தை வீழ்த்தியிருக்கிறார்கள். குறிப்புக்கள் களவாடப்பட் டிருப்பதற்கும்திருமுடியாரின் திருவிளையாடலுக்கும்தொடர் பிருக்க வேண்டும்! திருமுடியாரின் ஆட்களே இதனைச் செய் திருக்கக் கூடுமோ! நம் அறிவாலயத்தில் இருக்கும் எவரே னும் எடுத்துச் சென்று அவருக்குக் கொடுத்திருக்கலாமோ?

[குழப்பமடைந்து விடுகிறார் அறிவானந்தர். தெளிவாக எதையும் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கிறார்.]

கார்மேகம் மல்ல நாட்டு ஒற்றனாக இருந்து, ஓடிப் போய் விட்டானாம். மணிவண்ணன் அவன் தம்பி! திருமதியை மணக்க இருப்பவன்! துரோக சிந்தையுடனேயே இங்கு வந்திருக்கக்கூடுமோ? பண்பாற்றலை அவனிடம் பார்த்திருக்கிறேனே! இந்த இழிவினைச் செய்ய அவன் மனம் இடந்தந்திருக்குமா? இரகசியங்கள் மல்ல நாட்டுக்கே போய் விட்டிருக்குமோ? கார்மேகத்தின் கையில் கிடைத்திருக்கக் கூடுமோ . . .

[சற்று தடுமாற்றம்.]

கார்மேகத்தின் கையில் கிடைத்திருந்தால், திருமுடியார்?

[மீண்டும் சுவடிகளைப் புரட்டுகிறார். விழிகள் விரிகின்றன.]

நாசப் பொடியின் குறிப்புக்கள் மட்டுமே காணப்படவில்லை! அப்படியானால் தீப்பொருள்? மணிவண்ணன் மட்டுமே இதனைச் செய்திருப்பானா? வேறு யாரேனும் இதில் கலந்து கூட்டுச் சதி புரிந்திருப்பார்களோ? நான்கு நாட்களாக மாதவனைக் காணோம்! வேலைக்கு வரவில்லை என்றாள் திருமதி! மாதவனின் சதியாக இது இருக்கலாமோ? மாதவனும் மணிவண்ணனும் சேர்ந்து செய்திருப்பார்களோ?

[தெளிவு பெற முடியாமல் தவிக்கிறார். திருமதி வருகிறாள்.]

திருமதி: (வந்துகொண்டே) அப்பா! திருமுடியாரை ஊர் மக்கள் கல்லால் அடித்துக் கொன்றுவிட்டார்களாம், பாவம்!

அறி: என்ன! திருமுடியாரைக் கொன்றுவிட்டார்களா? கல்லால் அடித்தா? பயங்கரமான படுகொலையைச் செய்துவிட்டார்கள். திருமதி! நாட்டு மக்கள் மிகவும் கெட்டுப் போய் விட்டார்களா? பழிவாங்கும் உணர்ச்சிக்கு மிகுதியும் இடம் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்! ''இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்து விடல்'' என்ற குறளைக் கொண்டிருக்கும் நாட்டு மக்களின் நடத்தை

எனக்குப் பிடிக்கவே இல்லை திருமதி. மகளே! என்னதான் ஒருவன் கேடு செய்தாலும், அவன் ஏன் அந்தக் கேட்டைச் செய்தான் என்று ஆராய்ந்து, கேட்டுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து, குறையினைக் களையத்தான் முற்பட வேண்டும்! பதிலுக்குப் பதில் கேடு! என்று ஒவ்வொருவரும் தொடங்கி விட்டால் நாடே கொலைக்களமாகத்தான் காட்சி தரும்! இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டேதான் இருக்கும்! குறள் தந்த கோமான், திருவள்ளுவப் பெருந்தகை நம்மைப் பார்த்து நகைப்பார்!

திரு: அப்பா! உங்கள் இலட்சியம் உயர்ந்ததுதான்! ஊரும் உலகமும் உங்களைப் போலிருந்தால் அல்லவா, இது நடைபெற முடியும்?

அறி: ஊர் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்! பேராசை இது என்பாய் மகளே! இந்தப் பேராசை எனக்கு வேண்டும்! இன்னமும் வேண்டும்!

திரு: என்னமோ, அப்பா! ''கொலையிற்கொடியாரை வேந்தொறுத்தல்'' என்பதுகூட வள்ளுவர் வாய்மொழி தான்!

அறி: ஆமாம் திருமதி! நான் கொலை செய்பவர்களே இல்லாத ஒரு சாம்ராஜ்யத்தை உண்டாக்க விரும்புகிறேன்.

திரு: நீங்கள் வெற்றிபெற வேண்டும் அப்பா!

[கூறிவிட்டுப் போய்விடுகிறாள்.]

அறி: நான் வெற்றிபெறத்தான் வேண்டும்! யாரோ வீணர்கள், எந்தக் காரணத்துக்காகவோ எனக்குக் கேடு நினைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? அதற்கான காரணமென்ன? அதைக் கண்டுபிடிக்க வேண்டும்! குறையைக் களையவேண்டும்! பாவம், அவர்கள்! இல்லாதவர்கள் அவர்கள்! நடைபெற்றிருக்கும் களவின்மூலம், பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பக் கடலில் ஆழ்த்தப்படு வார்கள்! தேம்பித் திகைப்பார்கள்! நம் கண்டுபிடிப்புகள்,

மக்கள் பிணியைப் போக்குவதற்குப் பதில், துன்பங்களைத் தூவுவதாக இருக்கும்! விரைவாக நான் வெற்றி பெற்றாக வேண்டுமே!

[எண்ணிக் கொண்டே, சுவடியை எடுத்துக் கொண்டுபோய் வேறொர் இடத்தில் பத்திரப் படுத்தி விட்டு வந்து, தன் ஆராய்ச்சிப் பகுதியில் நுழையப்போகிறார். அரசுப் பணியாள் ஒருவன் வருகிறான்.]

பணி: வணக்கம் பெரியையா!

அறி: நீ வளத்தோடு வாழ்வாயாக!

பணி: மன்னர் தங்களை உடனே பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அறி: மன்னரா? பாதுகாவலரா?

பணி: மன்னர்தான்!

அறி: வருவதாகச் சொல்!

[பணியாள் வணங்கிவிட்டுப் போகிறான்.]

திருமுடியாரின் சித்துக்களைப்பற்றி விக்ரமன் விளக்கி இருப்பான்: விளக்கம் கேட்க விரும்பி இருப்பார் மன்னர்:

[என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே, உடைகளை மாற்றிக் கொள்கிறார்.]

காட்சி—35

[அரண்மனை மண்டபம். அரசன் குமாரவேலன் அமர்ந்திருக்கிறான், ஆழ்ந்த கவலையுடன்! விக்ரமன் போர் பற்றிய சில விளக்கங்களை கூறிக் கொண்டிருக்கிறான். அறிவானந்தர் வருகிறார்.]

குமார: வாருங்கள் தாத்தா! எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் இருவரும்! திருமுடியாரின் திருவிளையாடல்களை, மெய்ப் பொருளின் துணைகொண்டு நீங்கள் வெற்றி கண்டீர்களாம்: விக்ரமர் விளக்கினார் அனைத்தையும்:

அறி: உண்மைதான் மன்னா! ஊர், அந்த அளவுக்குக் கெட்டுப் போயிருக்கிறது!

விக்: (குறுக்கிட்டு) அறிவானந்தரே! நாட்டுக்குப் பேராபத்து வந்துவிட்டது! மல்ல நாட்டுப் படைகள் எல்லையில் குவிந்து விட்டன! எந்த நேரத்திலும் அவைகள் திருநாட்டினுள் புகுந்துவிடலாம்! நாட்டைக் காக்கும் பெரும்பொறுப்பு நம்மிடமிருக்கிறது! நீங்கள் திருமுடியாரிடமிருந்து மக்களைக் காத்ததுபோல் இப்போதும் மல்ல நாட்டிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!

அறி: மல்ல நாடு நம்மீது படையெடுக்க அவர்களுக்கு நாமென்ன குற்றமிழைத்தோம்?

விக்: படையெடுப்புகளுக்குப் படைபலம் ஒன்று தவிர வேறெந்த காரணமும் கிடையாது! இப்பொழுது மலலநாட்டில் படை பலம் உயர்ந்திருக்கிறது! நாம் செய்த குற்றம், மல்ல நாட்டைவிடக் குறைந்த படையை வைத்திருப்பது தான்! கருவூலத்தை அளவுக்கதிகமாக ஆராய்ச்சித் துறைக்குப் பயன்படுத்திக் கொண்டோம்.

அறி: வெண்ணாடு பலமற்றதாயிருந்ததால், திருநாடு வெற்றி கண்டது! இப்பொழுது மல்லநாடு, திருநாட்டுக்கு அதே பாடத்தைப் படித்துக் காட்டப் போகிறது. போர்! அதன் பெயரால் எவ்வளவு உயிர்கள் பலியிடப்படப் போகின்றனர்! கை, கால் வெட்டப்படுதல், கட்டுடல் கண்டதுண்டமாக்கப்படுதல், தலைசிதறிக்கிடத்தல், குடல் சரிந்து விழுதல், இரத்தம் பீறிட்டு வழிதல்! இந்தக் கோரக் காட்சிகளைத் தான் போர் நமக்குத் தரப் போகிறது! போருக்குப்பின் பசி, பஞ்சம், பட்டினி, ஏழ்மை, தொத்து நோய், சூறாவளியென நாட்டில் பரவும்! போர் முனையில் பலியானவர்களைவிட அதிகமானோர் இறந்துபடுவர்! ஒருபோர்மற்றொருபோரைத் தூண்டுகிறது; இரத்தம் இரத்தத்தை விலை பேசுகிறது! வெற்றி தோல்வி—இவைகளை இரு கைகளாகக் கொண்டு சாவு கைகொட்டிச் சிரிக்கிறது. ஒரு வாள் ஒன்பது வாட்களை உண்டாக்குகிறது! ஒரு நாட்டின் வரலாறு போர்களின் வரலாறு ஆகிவிடுகிறது. சாவுகளின் வரலாறு ஆகிவிடுகிறது! அது கூடாது விக்ர பூபதி; வரலாறு, வாழ்வின் வரலாறாக வேண்டும்! மக்கள் இன்பமாக வாழ்ந்தனர். அமைதியில்

திளைத்தனர். வளத்தில் களித்தனர்; மாறாத வசந்தமாக அவர்கள் வாழ்வு இருந்ததென புதியதோர் வரலாறு தீட்டப் பட வேண்டும்! அதற்காகத்தான் கருவூலம், செலவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன!

விக்: அறிவானந்தரே! உம்மை நான் அழைத்தது வேதாந்த விசாரணைக் கல்ல; நாட்டை பேராபத்து சூழ்ந்து விட்டது. அதைப் போக்க வழி காண வேண்டுமென்பதற்காக! அறிவியல் பெருமானே! உமது உதவி இருந்தால் மட்டுமே நாடு தப்பும்; திருநாட்டு மக்கள் உரிமையுடன் வாழலாம்.

அறி: நான் என்ன செய்ய முடியும்! வாளெடுக்க முடியாதவன்! போர்ச்செயல்கள் அறியாதவன்!

குமார: படைகளைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல், வீரர்களை மிரண்டோடச் செய்யும் வலிமை, நமது நாட்டுக்கு வெற்றி தேடித் தரும் வாய்ப்பு உங்களிடம் இருக்கிறது தாத்தா!

அறி: என்னிடமா? மன்னா! சொல்வது விளங்கவில்லையே!

விக்ர: (குறுக்கிட்டு) நீங்கள் தயாரித்துள்ள நாசப் பொடியை எங்களிடம் தாருங்கள்! அதைத் துணையாகக் கொண்டு நான் வெற்றி காண்பேன்!

அறி: எரிச்சல் பொடி எவ்வாறு உங்களுக்கு உதவப் போகிறது, விக்ரமரே?

விக்: எதிரிப் படைகள் வேகமாக வரும்பொழுது, ஏராளமாகப் பொடிகளைத் தூவினால், வேதனை தாங்காமல் அவர்கள் ஓடி விடுவார்கள்!

அறி: ஐயோ, எரிச்சல் பொடியின் கொடூரத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்! அது பட்டால் ஆறாத இரணம் உண்டாகும். வேதனை தாளாமல் வாழ்நாள் பூராவும் துடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

விக்ர: போர் முறை அறியாதவர்போலப் பேசுகிறீரே! இரணத்தை உண்டாக்காமல் போரிட முடியுமா! வேலும் வில்லும், கோடரியும் குத்துவாளும் எதிரிகளுக்கு ஆல வட்டம் வீசவாப் பயன்படுகின்றன! இதுவரை சமர் புரிந் தோர், வீரர்களையும், அவர் தம் ஆயுதங்களையும் நம்பி யிருந்தனர். நான் புதியதொரு முறையில் போர் புரியப்போகி றேன்! வீசுகின்ற காற்று என்னுடைய படை வரிசை! அதில் தூவிடும் இரணத்தை உண்டாக்கும் நாசப்பொடிகளோ, வாளாக, வேலாக, அம்பாக மாறி உடல்களைத் துளைத் துச் செல்லும்! மாற்றாரின் ஈட்டிக்கு மார்பு காட்டும் மாவீரன்கூட இரணப் பொடிக்குமுன் ஆற்றமாட்டாது தோற்றோடுவான்!

அறி: (மன்னரைப் பார்த்து) மன்னா! உடலை வாட் டும் நோய்களைப் போக்க, அவை தரும் வேதனைகளைக் குறைக்க, மருத்துவத் துறையில் ஈடுபட்டவன் நான்! இர ணத்தை ஆற்றுவது, வாழ்வில் இன்பத்தைச் சேர்ப்பது என் னுடைய நோக்கமே யன்றி, புதிய இரணத்தை உண்டாக்கு வது, வாழ்வைத் துன்ப மயமாக்குவதுமான கொடுஞ் செய லில் ஈடுபட என் மனம் ஒப்பாது! மருந்துகள் நோய்களைப் போக்க, மக்களுக்குத் துன்பத்தைத் தரவல்ல...

குமார: என்றாலும் போர் நிலைமை என்கிறபோது?

விக்ர: எதிரியின் படைவரிசைகள் எல்லையை மோதிக் கொண்டிருக்கிறது பெரியவரே! உம்மைக் கேட்டால் விரக்தி தரும் விவாதத்தில் ஈடுபடுகிறீர்; உதவிதர மறுக்கிறீர்! திரு நாட்டுப் படைக்கு உமது உதவி தேவை! திருநாடு கேட் கிறது; மாவீரர்கள் கேட்கின்றனர்; மன்னரும் கேட்கிறார்; நானும் கேட்கின்றேன்—உதவி தாருமென்று! மொத்தத்தில் திருநாடே கேட்கிறது, நீர் மறுக்கிறீர். உமது இரணப் பொடி மட்டும் கிடைத்துவிட்டால் எவ்வளவு மகத்தான வெற்றிகளை திருநாடு குவித்துக் காட்டும் தெரியுமா? ஏன் முதியவரே! 'திருநாடு வெற்றி பெற்றது!' என்ற மகிழ்ச்சி செய்தி வருவது உமக்குப் பிடிக்கவில்லையா! திருநாட்டு வீரர்

கள் வெற்றிவாகை சூடி, புலவர்கள் பாட, மகளிர் வாழ்த்த, நகரமே விழாக் கோலங்கொள்ள, பவனிவரும் காட்சியைக் காண உமக்கு விருப்பமில்லையா?

அறி: விக்ரமரே! போர் என்றதும் வீரமுழக்கமும் வெற்விழாவும் உங்களுக்குத் தெரிகின்றன!போரின் முடிவில்''விக்ரமர் ஒரு வீர தீரர்! அசகாயச் சூரன்!'' என்று புலவர்கள்பாடுவார்கள்; அரண்மனையில் ஆடல் பாடல்; வெளியிலே வாழ்த்தொலிகள்! இவைகள் மட்டும்தான் உமது காதில் விழுகின்றன! போர் என்றதும், எண்ணற்ற குடும்பங்களில் எழும் அழுகையொலிதான் என் காதில் விழுகிறது! மகனையிழந்த தாய், கணவனையிழந்த மனைவி, தந்தையைக் காணாத சிறுகுழந்தை-இவர்கள் கோவெனக் கதறியழுவது என் காதில் காய்ச்சிய ஈயமெனப் பாய்கிறது! களத்தில் நீங்கள் காணப் போவது என்ன? வெற்றியல்ல, இரத்தம்! வீரமுழக்கமல்ல, வேதனைக் குரல்கள்! வெற்றி வாகை சூடி, வீரர்கள் பவனி வருவார்கள் என்று கூறுகிறீர்கள்! ஆனால்,காலிழந்தவர்கள், கண் இழந்தவர்கள், கடும் தாக்குதலுக்கு ஆளாகினவர்கள், தடுமாற்றத்துடன் தள்ளாடித் தள்ளாடி பாதையோரத்தில் வாழ்வின் ஓரத்தில் செல்கின்ற கோரக் காட்சியை நான் பலமுறை கண்டிருக்கிறேன்! அந்த வேதனைக் காட்சிகளை இன்னும் விரிவுபடுத்த நான் முயலமாட்டேன்! எனது மருத்துவக்கலை, எனது கண்டுபிடிப்புகள் மக்களின் நோய் நொடிகளைப் போக்க, வறுமையை நீக்க, பஞ்சைப் பராரிகளுக்கு வாழ்வளிக்க, இன்பமும் அமைதியும் உலகில் நிலைபெற்று வாழப் பயன்படுமேயன்றி, போர்களைத் தூண்டிவிட, போர்களின் கோரத்தன்மையை அதிகப்படுத்த என்றும் பயன்படாது!

விக்: என் கோபத்தைக் கிளறாதீர். பொடி செய்யும் முறை-போருக்கு வேண்டிய உதவி!—மன்னர் கேட்கிறார்...

குமார: நான் கட்டளையிடுகிறேன், உமது நாசப் பொடியைக் கொடுங்கள் என்று!

அறி: மன்னிக்க வேண்டும் மன்னா! மருத்துவக் கலையைப் போர்க் கலையாக்கும் முயற்சி, என் மனதை வாட்டுகிறது.

விக்: மன்னரின் கட்டளையை மறுப்பது எத்தகைய குற்றம் தெரியுமா?

அறி: மன்னன் இடும் கட்டளையைவிட, என் மனச்சாட்சி இடும் கட்டளை கடுமையானது விக்ரமரே!

விக்ர: வெட்டிப் பேச்சு, வெறும் பேச்சு! ஆணவம் பிடித்து அலையும் வயோதிகரே! இதுவரை பொறுத்து வந்தேன்! நமது கட்டளையை மறுக்கிறீர்! இராஜத் துரோகம் விளைவிக்கிறீர்! விளைவு அறியாமல் பிதற்றுகிறீர்...

அறி: விக்கிரமரே! மருத்துவக் கலைக்கு துரோகமிழைக்க மறுக்கிறேன்! மனித குலத்துக்குத் துரோகமிழைக்க மறுக்கிறேன்!

விக்: அறிவானந்தரே! கடைசி முறையாகக் கேட்கிறேன்! படைக்கு உங்கள் உதவியை அளிப்பீரா, மாட்டீரா!

அறி: முடியாது, காவலரே! என் அறிவுத்திறன் அழிவுக்குத் துணை போகாது! அழிவுக்குத் துணைபோக அனுமதிக்கவும் மாட்டேன்!

விக்: அறிவானந்தரே! இறுதியாகக் கேட்கிறேன்! மன்னரை சான்று வைத்துக் கொண்டு கேட்கிறேன்! நீங்கள் நாசப்பொடியைத் தரமறுக்கும் காரணங்களைச் சொல்லுங்கள்!

அறி: பாதுகாவலரே! மன்னரையும், மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, நீங்கள் வகிக்கும் பதவி காரணமாக உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இல்லையா? பொறுப்பினை ஏற்றுக் கொண்டு விட்டபின், அதனை நிறைவேற்றி வைப்பதற்காக எவ்வளவு பாடுபடுகிறீர்கள்? ஏன்... அது உங்கள் பொறுப்பு என்பதற்காகத்தானே! வேட்டுவத் தொழிலைப் பிழைப்பாய்க் கொண்டிருப்பவர்களிடம் போய்

ஜீவ்காருண்யம் பற்றிப் பேசுவது பயன் தராது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்களே! மன்னியுங்கள் பாதுகாவலரே! நீங்கள், மன்னரையோ அல்லது இந்த நாட்டு மக்களையோ பாதுகாக்கத் தேவையில்லை என்று நானோ, அன்றி வேறு எவரோ கூற முடியுமா? கூறினாலும் ஏற்பீர்களா? ஏற்க மாட்டீர்கள்...ஏற்கவும் கூடாது. ஏன்? அது உங்கள் கடமை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு அது. விக்ரமரே, நான் ஒரு மருத்துவன்; அறிவின் துணைகொண்டு, ஆக்கச் சக்திகளை உண்டாக்க வேண்டும் என்ற பேராசை காரணமாகச் சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறேன்! நிறுத்திவிடுங்கள் என்று நீங்கள் கூறினாலும் என்னால் அது முடியுமா? நிறுத்தலாமா? நான் மேற்கொண்ட கடமையிலிருந்து வழுவியதாக அது ஆகிவிடாதா? பாதுகாவலரே! அறிவின் துணையால் கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட ஒரு பொருள் அழிவுச் சக்திக்குக்கூட பயன்படுகிறது என்பதற்காக, அழிவுக்கு ஆக்கம் தர வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களா? நான், எவ்வளவோ பச்சிலைகளைக் கசக்கிப் பிழிந்து, எத்தனையோ, மூலப் பொருள்களை உடன் சேர்த்து பல்வேறுபட்ட கலவைகளின் மூலம் கண்டுபிடித்ததுதான் அந்த நாசப் பொடி! சிந்தித்துப் பாருங்கள்! பழைய பச்சிலை, இப்போது நாசப் பொடி! பச்சிலை இயற்கைப்பொருள். நாசப்பொடி, செயற்கைப்பொருள். நாசப் பொடியை உண்டாக்க முடிந்த என்னால், அதன் மூலப் பொருளான பழைய பச்சிலையை மீண்டும் உண்டாக்க முடியுமா? குடிசைத் தொழிலாக நம் மக்கள், கூடை செய்தல், முறம் செய்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு மூலப்பொருள் மூங்கில் என்றறிவீர்கள்! மூங்கிலாக இருக்கும் கூடையையும், முறத்தையும், மீண்டும் மூங்கிலாக்க முடியுமா? மூங்கில் இயற்கை! கூடை செயற்கை! அப்படித்தான் தளபதியாரே, நாசப் பொடியைப் பயன்படுத்தி நாசத்தை உண்டாக்கி விடலாம்! பல்லாயிரக் கணக்கான உயிர்களை வதைக்கலாம்! ஆனால், அதையே பயன்படுத்தி நாசத்திற்கு முன்பிருந்த இயற்கை நிலையைத் தோற்றுவிக்க முடியாது! எனவே, அறிவின் கண்டு பிடிப்பை ஆக்கச் சக்திக்குத்தான்

பயன்படுத்தவேண்டுமே ஒழிய அழிவுச் சக்திக்குப் பயன்படுத்தக் கூடாது என்கிறேன்! அதனாலேயே தர மறுக்கிறேன்! விக்ரமரே, மன்னியுங்கள்...இந்த மன்னரை, உங்களால் கொன்று விடமுடியும்! கொன்று போட்ட பின்பு, உங்களாலேயே, உயிரைக் கொடுத்துப் பிழைக்கச் செய்ய முடியாது. அதனால்தான் அழிவு வேலைகள் ஆகாது என்கிறேன்! அதனாலேயே கொடுக்க முடியாது என்கிறேன்! எத்தனை முறை கேட்டாலும் கொடுக்கமாட்டேன்.

விக்: (ஆத்திரத்தோடு) வீடெரிந்து கொண்டிருக்கிறது; வேள்விக்கு நெய் கேட்கிறார் அறிவானந்தர்! (கைதட்டி) யாரங்கே?

[வீரர்கள் சிலர் வருகிறார்கள்.]

விக்: இந்தத் துரோகியை இழுத்துப் போய் சிறையில் தள்ளுங்கள்! நம்முடைய ஆதரவில் ஆராய்ச்சி செய்து அதன் அறுவடையை அரசாங்கத்துக்கே தரமுடியாதென்று திமிரோடு கூறும் இவரை இழுத்துப்போங்கள்!

[வீரர்கள் அறிவானந்தரை அழைத்துப் போகின்றனர். குமாரவேலன் வருத்தத்துடன் அவரைப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறான்.]

காட்சி—36

[ஆய்வுக்கூடத்தில் குணாளன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறான். யாரோ ஒருவன் பதட்டத்தோடு ஓடி வந்து...]

வந்தவன்: ஐயா! அறிவானந்தர் கைது செய்யப்பட்டு விட்டார்! சிறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள்!

குணா: (பதட்டத்துடன்) என்ன! அப்பாவைச் சிறைப்படுத்தி விட்டார்களா? அவர் அரசரையல்லவா பார்க்கப் போனார். என்ன உளறுகிறாய்?

வந்த: உளறவில்லை ஐயா! அரசரிடம் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் கைது செய்யப்பட்டார்.

குணா: அக்கிரமம்! அநீதி! இப்போதுதானே திருமுடியாரின் திருவிளையாட்டைத் தடுத்து—அரசுக்குப் பாதுகாப்புத் தேடித் தந்திருக்கிறார்! அதற்குள்ளாகவா இந்த அக்கிரமம்! இருக்க முடியாது! ஏதோ தவறு நடந்திருக்கிறது!

[ஓடுகிறான் அரண்மனையை நோக்கி.]

காட்சி—37

[தெருவில் கூட்டம் கூட்டமாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். ஒரு கூட்டத்தில்...]

ஒருவன்: அறிவானந்தரைச் சிறையில் போட்டுவிட்டார்களாமே!

2—வது: எவ்வளவு தங்கமானவர்.

3—வது: ஏழை எளியவர்களென்றால், எதையும் கொடுக்கத் தயங்கமாட்டார்!

1—வது: எனக்குக் காய்ச்சல் வந்து கவனிப்பாரற்றுக் கிடந்த பொழுது, அந்த மகான்தான் காலையும் மாலையும் வந்து மருந்து கொடுத்துக் காப்பாற்றினார்! கண்கண்ட தெய்வம் என்றால், அது அவர்தான்!

2—வது: ஆமாம்; அந்த நல்லவரை இவர்கள் ஏன் சிறையில் போடுகிறார்கள்.

3—வது: நல்லவராக இருப்பதே இந்த அரசாங்கத்தில் தப்பு போலிருக்கு!

[குணாளனுடன் ஒரு கூட்டம் வேகமாக வருகிறது. தெருவிலிருந்து சிறு சிறு கூட்டங்கள் அதனுடன் செல்கின்றன.]

காட்சி—38

[அரண்மனை வெளிப்புறம். மக்கள் கூட்டம் கூச்சலுடன் படிக்கட்டுகளில் ஏறுகிறது. விக்ரமன் வந்து மேல் மாடத்தில் நிற்கிறான். ஏறிவந்த கூட்டம் அப்படியே நிற்கிறது. கூச்சல் அடங்கி, அமைதி ஏற்படுகிறது.]

விக்ர: என்ன கூச்சல் இங்கே!

குணா: (முன்வந்து) என் அப்பா கைது செய்யப்பட்டிருப்பது உண்மையா?

விக்ர: (நிதானமாக) ஆமாம்! அறிவானந்தர் கைது செய்யப்பட்டுள்ளார்!

[''ஏன் கைது செய்யப்பட்டார்? எதற்காக? ஏன்? ஏன்?'' என்று கூச்சல்கள் வருகின்றன! விக்ரமன் கடும் பார்வையுடன் கையமர்த்துகிறான். கூட்டம் அடங்குகிறது.]

குணா: அவர் ஏன் கைது செய்யப்பட்டார்? அவர் செய்த குற்றம்தானென்ன?

[விக்ரமன் கை தட்டுகிறான். கதவைத் திறந்து அறிவானந்தரை இரு வீரர்கள் அழைத்து வந்து நிறுத்துகிறார்கள். அவர் கையில் விலங்கு பூட்டப் பட்டிருக்கிறது]

[அறிவானந்தரைப் பார்த்ததும் கூச்சல் அதிகமாகிறது. ''அறிவானந்தர் வாழ்க!'' ''அநீதி ஒழிக'' என்று குரல்கள் எழுகின்றன]

ஒருவன்: அறிவானந்தர் என்ன குற்றம் செய்தார்?

விக்ர: இராஜத் துரோகம்! தேசத் துரோகம்! குடிமக்களே! மல்ல நாட்டுப் படைகள் நமது நாட்டின் மீது போர் தொடுக்கத் தயாராகயிருக்கின்றன. போர்ப் பிரகடனமே செய்துவிட்டார்களாம்! இந்த ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற வாருங்கள் என்று இந்த நல்லவரை நான் அழைத்தேன்; இவர் மறுத்துவிட்டார்! அரசாங்கப் பொருளை எடுத்து அவரது ஆராய்ச்சிக்கு உதவியளித்தேன்! அரசாங்கம் உதவி கேட்கும்பொழுது அவர் மறுக்கிறார்! செய்நன்றி கொன்றார்; சொந்த நாட்டை மறந்தார்! நாடு அடிமைப்படக்கூடாது என இவரை நான் கேட்டேன்; திருநாடு வெற்றி பெற வேண்டுமென மன்றாடி இவரைக் கெஞ்சினேன்; வேண்டிக் கொண்டேன்; மன்னரும் கேட்டார். இந்த மமதையாளர் எல்லாவற்றுக்கும் மறுத்துவிட்டார். அறிவானந்தரே! இப்

பொழுதும் கேட்கிறேன். குடிமக்களைச் சாட்சியாக வைத்துக் கேட்கிறேன்! திருநாட்டுப் படைக்கு உதவியளிப்பீரா, மாட்டீரா?

அறி: முடியாது...?

விக்: நீங்களே கேட்டீர்கள், அவர் மறுப்பதை! நான் எதிர்பார்த்த உதவி அப்படியொன்றும் கடினமானதல்ல! அவர் செய்த ஆராய்ச்சியை நமது நாட்டுக்காகப் பயன்படுத்த முயன்றேன்! நாட்டுக்காக உங்களில் பலர் மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறீர்கள்! அதோ, அந்த வீரன் கையிழந்தான். எதற்கு? நாட்டைக் காப்பாற்ற! அவன் கண்களை இழந்தான், இவன்காலை இழந்தான், அவன் முகத்தில் ஏராளமான வடுக்களைத் தாங்கினான்! நாட்டுக்காக நமது வீரர்கள் செய்துள்ள தியாகங்கள் எவ்வளவு! கண் இழந்தோர், கரமிழந்தோர், களத்திலே தமது உயிரையே காணிக்கையாகத் தந்தவர்கள் எண்ணற்றோர். அவ்வளவு பெரிய தியாகங்களைக்கூட நான் இவரிடம் எதிர்பார்க்கவில்லை! காலைத்தா என்று கேட்டேனா? கண்ணைத்தா என்று கேட்டேனா? சமர்க்களத்தில் மதயானையை எதிர்த்து நில்லுங்கள் என்று அனுப்பினேனா? இல்லை, நீங்கள் செய்த ஆராய்ச்சியை நாட்டுக்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொண்டேன்! அந்தச் சிறு உதவியைக்கூட முடியாது என்று கூறிவிட்டார், இந்தப் பெரியவர்!

கூட்டம்: பெரியவரா? துரோகி, துரோகி!

விக்ர: நாடு வெற்றி பெற வேண்டாமா? திருநாட்டு வீரர்கள் வெற்றி வீரர்களாகப் பவனி வரவேண்டாமா என்று கேட்டேன் நான்! வேண்டாம் என்கிறார் இந்த நல்லவர்!

கூட்: நல்லவரா? நாட்டுக்குத் துரோகம் செய்யும் நாசகாரர்! -

விக்: நாட்டுக்கு உதவ மறுத்த இவரை, திருநாட்டுப் படைகள் வெற்றி காணுவதைத் தடுக்கும் இவரை, நான் கைது செய்தது குற்றமா?

கூட்: இவரை இதுவரை விட்டு வைத்திருப்பது குற்றம்!

ஒருவன்: கடுந்தண்டனை கொடுக்க வேண்டும்!

விக்ர: திருநாடு வெற்றி பெற வேண்டும்! திருநாடு வாழ்க! திருநாடு வாழ்க!

விக்: குடிமக்களே! மல்ல நாட்டுப் படைகள் நமது எல்லைக்கருகில் குவிந்து கொண்டிருக்கிறது! நாட்டைக் காப்பாற்றப் படைகளைத் திரட்டிப் போகப் போகிறேன்! உங்களை நான் பார்ப்பது இதுதான் கடைசித் தடவையாக இருக்கலாம்! திருநாட்டுக்காக—திருநாட்டு வெற்றிக்காக என் உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகஞ் செய்ய நான் தயாராக இருக்கிறேன்!

கூட்: விக்ரமபூபதி வாழ்க! மன்னர் வாழ்க!

அறி: மக்களே! நான் சொல்வதைக் கேளுங்கள்!

கூட்: அறிவானந்தர் ஒழிக! துரோகி ஒழிக!

[கூச்சல் அதிகமாகிறது. அறிவானந்தர் பேச முடியாமல் திகைக்கிறார். கூட்டத்தினர் அறிவானந்தர் மீது கற்களை வீசுகிறார்கள். வீரர்கள் அறிவானந்தரை அழைத்துச் செல்கின்றனர்]

குணா: ஐயோ, அப்பா! அப்பா!!

கூட்: அதோ, துரோகியின் மகன்!

[கற்கள் குணாளன்மீது விழுகின்றன. விக்ரமன் புன்னகை செய்தபடியே உள்ளே போகிறான். அடிகள் தாளாமல் குணாளன் படிக்கட்டுக்களில் உருண்டு கீழே வந்து விழுந்துவிடுகிறான். கூட்டம் போய்விடுகிறது.]

[திருமதி குணாளனைத் தேடிக் கொண்டு அங்கு வருகிறாள்.]

திரு: ஐயோ, அண்ணா! என்ன இது? கல்லடியும் இரத்தமும்?

குணா: உண்மைக்குக் கிடைத்த பரிசு திருமதி! உன்மத்தம் பிடித்த இந்த நாட்டு மக்கள் தந்த பரிசு இது!

காட்சி—39

[திருநாட்டு எல்லைக்கப்பால், மல்ல நாட்டுப் படைகள் குவிந்து கூடாரங்களமைத்துக் கொண் டிருக்கின்றன. ஒரு பக்கம் படைத்தலைவன் நின்று, கூடாரங்களின் அமைப்பு முறைக்கு யோச னைகள் வழங்கிக் கொண்டிருக்கிறான். கூடார அமைப்பே ஒரு போர் வியூகம் போல் இருக்க வேண்டுமென்ற, அவனது எண்ணத்தை விளக்கி, அதற்கேற்றார்போல அமைக்கக் கூறுகிறான். கூடாரங்கள் அந்த முறைப்படியே அமைந்து கொண்டிருக்கின்றன. வீரர்கள் இருவர் கார் மேகத்தை அழைத்துக் கொண்டு அங்கு வருகின் றனர். அவரைக் கண்ட படைத்தலைவன் எதிர் சென்று அழைத்து—]

படை: வாருங்கள் கார்மேகம்!

[என்று கூறி அவரை அணைத்துக் கொண்டு] வெற்றி வீரராக வந்திருக்கும் உங்களை வாழ்த்துவதற்கு வார்த்தைகள் தெரியாமல் தடுமாறுகிறேன். உங்களது உதவிக்கு மன்னர், பெரிதும் நன்றி கூறும்படி கூறினார். படைவீரர்கள் புதுத் தெம்புடன் இருக்கிறார்கள்.

கார்: மல்லநாடு வீரத்தில் மட்டுமல்ல, விவேகத்திலும் கூட மேம்பட்டது என்பதை நிரூபித்துவிட்டு வந்திருக்கிறேன் தளபதியாரே!

தள: அரும்பாடு பட்டிருக்கிறீர்கள்!

கார்: கொஞ்ச நஞ்சமல்ல; எத்தனை இரவுகள் கண் விழித்திருக்கிறேன்! என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொண்டேன். உயிருக்கே இறுதி என்ற உச்சக் கட்டத்தில் வெற்றி கிடைத்தது!

தள: அப்படியா! கார்மேகம் நினைத்தால், காற்றைக் கூட கையில் பிடிப்பார் என்று அரசர் கூறிக் கொண்டிருந்தது உண்மைதான் என்பதை உணர்கிறேன்! பேசிக்கொண்டே இருக்கிறோமே, நாசப் பொடியைக் காட்டுங்கள்; பார்க்கலாம்.

கார்: காட்டுகிறேன் தளபதியாரே! திருநாட்டின் திமிரையடக்கி, மல்ல நாட்டுக்கு மகத்தான வெற்றிதேடித் தரப் போகும் அதனைக் காட்டுகிறேன்! கண் குளிரப் பாருங்கள்! விழிகளைத் திறந்து வைத்துக் கொண்டு வியப்போடு பாருங்கள்! திருநாட்டு வீரர்களைத் திணறச் செய்யப்போகும் இரணப் பொடியைப் பாருங்கள்! பார்த்துப் பரவசப் பண் பாடுங்கள்!

[என்று கூறியபடியே கையில் கொண்டுவந்திருந்த ஒரு பெட்டியிலிருந்து ஒரு சிறு துணி மூட்டையை அவிழ்க்கிறான். சாம்பல் நிறத்தில் குங்குமம் கலந்தாற்போன்ற வண்ணத்தூள் இருக்கிறது. அதைக் காட்டி.... 'கையால் தொடக்கூடாது; கண்ணாடிக் கருவி கொண்டு தொடவேண்டும். தூரத்தில் நின்று வீசினாலே போதும், பட்டதும் பட்ட இடங்களில் எண்ணெய் கொதிப்பதுபோலக் கொப்பளங்கள் ஏற்படும். சாகும்வரை அவை ஆறாது. சாக்காட்டை விரைவாகத் தந்துவிடும்! திருநாட்டுவீரர்கள் பூண்டோடுஒழியப்போகிறார்கள்!' என்று பெட்டியை மூடப் போகிறார். சட்டென்று நிறுத்திவிட்டு..அறிவானந்தர் தம்மிடம் இருக்கிறார் என்ற ஆணவத்தில் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது திருநாடு. தளபதியாரே! அறிவானந்தரையே இந்தப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டுகிறேன்! தெரிகிறதா!' என்று மூடுகிறார்.

தள: இருங்கள் கார்மேகம்! மூட வேண்டாம்!! பொடியைச் சோதித்துப் பார்க்க வேண்டாமா?

கார்: ஆமாம்! பொடி கிடைத்த மகிழ்ச்சியில் மட்டு மல்ல, அவசரத்தையும் முன்னிட்டு அப்படியே எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

*[என்றதும், அருகில் நின்ற ஒரு வீரனை அழைத்து]*

தள: வேட்டை நாய் ஒன்றை இழுத்துவா!

*[என்றதும் வீரன் ஓடிப்போய், நாய் ஒன்றை இழுத்து வருகிறான். கார்மேகம் பெட்டியைத் திறந்து, அதற்குள்ளிருந்த கண்ணாடிக் கரண்டி யொன்றையும் எடுத்துக் கொடுத்துவிட்டு, மூட்டையைப் பிரிக்கிறார். தளபதி மூட்டையி லிருந்த பொடியில் கொஞ்சம் எடுத்து, நாயின்மேல் அங்குமிங்குமாகத் தெளிக்கிறார். அதற்குள் கார்மேகம் சற்றுத் தூர விலகி நிற்கிறார்! நாய் வாலைக் குழைத்து தளபதியின் காலை நக்கிக் கொடுக்கிறது. சில வினாடிகள் கழித்த பிறகும் புண்கள் ஏற்படாததைக் கண்டு]*

தள: கார்மேகம்!

*[என்று ஆத்திரத்துடன் கர்ஜிக்கிறான்! கார்மேகம் அருகில் வருகிறார்.]*

இதென்ன மோசம்! இதென்ன துரோகம்!

*[என்று உறுமுகிறான்.]*

கார்: ஆச்சரியமாயிருக்கிறதே தளபதியாரே! ஏமாந்து விட்டேன்; ஏமாற்றப்பட்டு விட்டேன்...

*[என்று பதறுகிறார். தளபதியின் கண்கள் சிவக் கின்றன...]*

தள: ஏமாறவில்லை கார்மேகம்! ஏமாற்றுகிறீர்! மல்ல நாட்டுக்குத் துரோகம் இழைத்து விட்டீர்!

கார்: இல்லை தளபதியாரே, நான்...

தள: உங்கள் சமாதானம் எனக்குத் தேவையில்லை. உம் ஓலையை நம்பி எல்லை வரையில் இழுத்துக் கொண்டு வந்திருக்கிறேனே, இந்த வீரர்களை-நான்; நான் ஒரு முட்டாள்!

கார்: (நடுக்கத்துடன்) தளபதியார்...

தள: பேசாதீர்! கண் குளிரப் பார்க்கிறேனே! விழிகளைத் திறந்து வியப்போடு பார்க்கும்படிக் கூறினீரே...உம் சதியின் வடிவத்தைப் பார்க்கிறேன் இப்போது வியந்தபடி!

[என்று அவருக்கு அருகில் வந்து நின்று]

கார்மேகம்! எப்படி உமக்கு இந்தத் துணிவு பிறந்தது! நாடாளும் மன்னனையும், படைத் தலைவரையுமே ஏமாற்றுகின்ற அளவுக்கு இந்தத் துணிவைத் தந்தது யார்?

கார்: ...

தள: பேச முடியவில்லையா? சதி வெளிப்பட்டு விட்டதே என்று பேச விரும்பவில்லையா? கார்மேகம்! நீர் திருநாட்டிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு, இந்தக் காரியத்தை செய்யத் துணிந்தீர்!

கார்: இல்லை, இல்லை! நான் துரோகம் செய்யவில்லை; துரோகம் செய்யப்பட்டிருக்கிறேன்!

தள: யாரை நம்பச் சொல்கிறீர் இப்படி? நான் நம்ப வேண்டுமா? நச்சுப்பொடி—திமிரடக்கப் போகும் தினவுப் பொடி இது என்று என்னை நம்பச் சொல்கிறீரா...துரோகி; உன்னிடம் பேசிக் கொண்டிருப்பதே பாவம்! இவ்வளவு பயங்கரமான பாதகத்தைச் செய்யத் துணிந்தாயே! உன்னை நம்பி, படையெடுத்து வந்திருக்கிறேனே கார்மேகம்! பாதி வீரர்களைக்கூட அழைத்து வராமல், உன் ஓலையை நம்பிக் கொண்டு வந்திருக்கிறேனே கார்மேகம்... இன்னமும் நம்ப வேண்டுமா? நாசகாலனே! நம்பியதுபோதும்; நாசமானது போதும்! உன்னை உயிரோடு விட்டுவைக்கக் கூடாது!...

கார்: தயவு செய்து நான் சொல்வதை...

தளா: (வெறிக் கொண்டவனாக)கேட்கப்போவதில்லை! கேட்கவும் மாட்டேன். கேடுகெட்ட உன் தலையைத் துண்டாடிக் கொண்டுபோய் கோட்டைச் சுவர்மீது வைக்கிறேன்; துரோகம் பாடம் பெறட்டும்!

[ஆத்திரத்துடன் வாளை ஓங்குகிறான். கார்மேகம் கொஞ்சம் நகர, குறிதவறி கை துண்டாகிறது. ஓடத் தொடங்குகிறார். துரத்திக் கொண்டு போய், பிடித்து நிறுத்தி—'உயிர் பிழைக்கலாம் என்று ஓடுகிறாயா, நீசனே' என்று தலையை வெட்டிச் சாய்க்கிறான்.]

காட்சி—40

[ஆய்வுக்கூடம். குணாளன் சோர்வுடன் அமர்ந்திருக்கிறான். நெற்றியிலும், கையிலும் கட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. திருமதி, குணாளனுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். மணிவண்ணன் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருக்கிறான்.]

மணி: குணாளா! விக்ரமனின் கொடுமைகள் அளவு கடந்து கொண்டிருக்கின்றன! எந்தத் திருநாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக இரவு பகல் பாராது, மழை வெய்யில் கருதாது அரும்பாடுபட்டரோ, உன் தந்தை, அவரையே துரோகியென்றும், வஞ்சகர் என்றும் வசைகூறத் தொடங்கிவிட்டார்கள் நன்றிகெட்டமக்கள். திருமுடியாரின் தீ விளையாட்டைத் தடுத்து நிறுத்தியபோது எந்த வாயால், 'அறிவானந்தர் வாழ்க' என்று வாழ்த்துக் கூறினார்களோ அவரையே 'ஒழிக' என்று உரக்கக் கூறுகிறார்கள்! உலுத்துப் போன உள்ளத்தினராய். குணாளா, என் அருமை நண்பா! பாதுகாவலனின் அடுத்தத் திட்டம் இனி நம்மீது குறி வைப்பதாகத் தானிருக்கும். நம் அனைவரையுமே கைது செய்து சிறையிலடைத்துவிட்டு, 'அரசாங்கத்துக்குச் சொந்தம், அரசாங்கத்துக்குச் சொந்தம்' என்று உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறானே நாசப்பொடியை, அதனை அதிகாரத்தின் வலிவோடு அபகரித்துக் கொள்ள இந்நேரம் திட்டம் தீட்டியிருப்பான்.

குணா: உண்மைதான் மணிவண்ணா! இது பற்றி நானும் நினைத்தேன். ஆனால், நாடு தவிர்க்க முடியாத தொரு பேரபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் போது தத்துவங்களைப் பேசிக் கொண்டிருக்கிறார் அப்பா!

திரு: (குறுக்கிட்டு) அண்ணா! மன்னரேகூட மன்றாடி னாராம்! அப்பாவின் குறிக்கோள் எவ்வளவுதான் உயர்ந்த தாக இருந்தாலும், அதற்கும் நேரம் காலம் இல்லையா? ஆராய்ச்சிக்காகச் செலவிட்ட பொக்கிஷத்தைப் படைப் பெருக்கத்துக்குச் செலவிட்டிருந்தால் அப்பாவின் தயவில்லா மலேயே, திருநாடு, மல்ல நாட்டை வெற்றி கொள்ளாதா?

மணி: உங்கள் பேச்சு எனக்கு ஆத்திரத்தை ஊட்டு கிறது. மல்ல நாடு பகை நாடுதான். அது அழிக்கப்படத்தான் வேண்டும். ஒப்புக் கொள்கிறேன்—நானும் மல்ல நாட்டைச் சேர்ந்தவன் என்பதையும் ஒருபுறம் நினைவில் வைத்துக் கொண்டு. ஆனால் குணாளா, உங்கள் திருநாட்டு மக்க ளைப் போல் நன்றி கொல்வாரை, என் நாட்டில் கண்ட தில்லை. காணவும் முடியாது. ஏழை எளியவர், உடையார் கிடையார் என்ற பேதங்களின்றி மருத்துவத்தின் மூலமே, எவ்வளவு சேவை செய்திருக்கிறார் உங்கள் தந்தை! ஒரு கணம் எண்ணிப் பார்த்தார்களா? துரோகி என்றும், ஒழிக என்றும் எத்துணை சீக்கிரம் குரல் எழுப்பிவிட்டார்கள். அறி வானந்தர் என்ற அறிவின் தெய்வத்துக்குத் துரோகம் இழைப் பதல்லவா இது? இந்த நாட்டு மக்கள் வாழ வேண்டுமா? இவர்களுக்கு வறுமையைப் போக்கி வளத்தைக் கூட்டவேண் டுமா?

குணா: உன் உணர்ச்சி எனக்குப் புரிகிறது மணிவண்ணா! நாட்டு மக்களுக்கு முழுமையாக எந்த ஒன்றையும் எந்தக் காலத்திலும் புரிய வைத்துவிட முடியாது. ஆனால், அவர் களுடைய கொந்தளிக்கும் உணர்ச்சிக்கு நாமும் கொஞ்சம் மதிப்பளிக்கத்தான் வேண்டும்! படையெடுப்புக் காரணமாக நாடு, பேரபாயத்திலிருக்கும்போது கொள்கைகள் என்றும், இலட்சியங்களென்றும் கூறிக்கொண்டு, நாட்டுக்கெதிராக இயங்குவதை எவரும் அனுமதிக்க மாட்டார்கள்; அனுமதிக்க

வும் கூடாது. அப்பாவின் உதவியைக் கேட்கிறது அரசு, ஆபத்தின் பேரால்! மறுக்கின்றபோது, நாட்டு நலனுக்கு எதிரானதாகிறது இலட்சியங்கள். நாட்டு மக்களின் ஆத்தி ரத்தையும் தூண்டிவிடுகிறது. இலட்சியத்தையும் மீறி எதிர்ப் புக் குரல் கொடுக்கிறார்கள்! மக்களைக் குறைகூற முடியுமா?

மணி: கல்லடி உன்னை இப்படிப் பேச வைக்கிறது குணாளா!

திரு: உங்கள் சொல்லடியும் மிகக் கடுமையாக இருக் கிறது!

மணி: திருமதி! உன் தந்தையின் இலட்சியங்களை நான் மதிக்கிறேன்; நீங்கள் மிதிக்கிறீர்கள்.

குணா: மணிவண்ணா! என் தந்தையின் இலட்சியங் களை என்றுமே நான் குறைத்து மதிப்பிட்டவன் அல்ல. மதிப்பிடவும் மாட்டேன். அந்த இலட்சியங்கள் என்னை மிகவும் கவர்ந்ததன் காரணமாகவே, படைப்பணியிலிருந்து விலகினேன்! அஞ்சா நெஞ்சன் என்று விருதளித்துச் சிறப் பித்தார்கள்! துணைத் தளபதி பதவி தருவதாகக் கூறினார் கள்; மறுத்துவிட்டேன். ஏன்? தந்தையின் இலட்சியங்களுக் காகவே! அந்த இலட்சியங்கள் மீது எனக்குப் பிடிப்பு ஏற் பட்டதனால்! இன்றைய நிலை என்ன? எல்லையிலே எதிரி இருக்கிறான், வலுவான படையுடன்! உள் நாட்டிலே பசி, பஞ்சம், பட்டினி! நாசப்பொடியில் கொஞ்சம் கொடுப் பதனால், நாட்டுக்கு வந்த ஆபத்தைத்தடுத்து விடும். வெற்றி கண்டபின் வளத்தையுண்டாக்கிக் கொள்ள முடியாதா?

மணி: மல்ல நாட்டு வீரர்களும் மனிதர்கள்தானே என்று என் ஆசான் எண்ணுகிறார்.

திரு: உயர்ந்த எண்ணம்தான், அந்த மனிதர்களால் நமக்கு ஊறு ஏற்படாத வரையில்!

மணி: எப்படியும் நாசப் பொடியை விக்ரமனுக்குத் தரக்கூடாது என்று நான் வாதாடிக் கொண்டுதானிருப்பேன்; அறிவானந்தர் மீது ஆணையிட்டுச் சொல்வேன்!

குணா: என்னால் உன்னைப் புரிந்து கொள்ள முடிகிறது மணிவண்ணா! தந்தையின் இலட்சியங்கள் உன்னைக் கவர்ந்திருந்தாலும், இல்லாவிட்டாலும் விக்ரமனுக்கு நமது உதவி கிடைக்கக் கூடாதென்று நீ கூறுவதன் பொருள் எனக்குப் புரிகிறது. மணிவண்ணா! என் உயிருக்குயிரான தங்கையின் கணவனாக வர இருப்பவன் நீ. அறிந்திருந்தும் நான் நினைப்பதைக் கூறிவிடுகிறேன்! நீ மல்ல நாட்டுக் குடிமகன்! விக்ரமனுக்கு உதவக் கூடாது என்பதன் மூலம், திருநாடு வெற்றி பெற அனுமதிக்கக் கூடாது என்று நினைக்கிறாய்! மல்ல நாட்டுக்காக நீ வாதாடுகிறாய்!

மணி: ஐயோ, குணாளா! இவ்வளவு பெரிய பேரிடியை நீ போடுவாய் என்று எதிர்பார்க்கவில்லையே குணாளா!

குணா: உன் அண்ணன் கார்மேகம் மல்ல நாட்டு ஒற்றன் என்று தெரிந்த பிறகும் உன் மீது சந்தேகம் கொள்ளாமலிருந்தேன்! சந்தேகம் முளை விட்டபோது தந்தையையும் தடுத்தேன். திருமதியையும் உன்னுடன் பழக அனுமதித்தேன். ஏன்? முழுமையாக உன்னை உணர்ந்திருக்கிறேன் என்ற தப்புக் கணக்கால். அது தப்புக் கணக்குதான் என்பதை இப்போது மெய்ப்பிக்கிறாய்.

மணி: குணாளா! வேண்டாம், வேண்டாம்! என்னால் தாள முடியாது குணாளா! நாச்சூட்டைத் தாங்கிக் கொள்ளும் அளவு எனக்கு மன வலிவில்லை! ஐயோ, திருமதி! கேட்டாயா! நான் துரோகியாம்! வஞ்சகனாம்! ஒற்றனாம்! உளவாளியாம்! இவ்வளவு பெரிய பழியை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது திருமதி! தாங்கிக் கொள்ள முடியாது. மயிர் நீப்பின் உயிர் நீக்கும் மானினத்தின் மாண்பு பற்றி உன்னிடத்தில்தான் அறிந்தேன் குணாளா! நீயா இப்படிச் சொல்கிறாய்? நீயா, என்னை ஐயுறுகிறாய்? கேட்டாயா, திருமதி!

[திருமதி திகைத்து நிற்கிறாள்; மணிவண்ணன் கண்களில் நீர் வழிந்து கொண்டிருக்கிறது. குணாளன் அவன் அருகில் வந்து, அவனை அணைத்துக் கொண்டு...]

குணா: மணிவண்ணா! காரணம் காட்டி உன்னைத் 'துரோகி! வஞ்சகன்!' என்று தூற்றும்போது, உன்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையல்லவா! பொருந்து கின்ற காரணங்களைக் கூறும்போது உன்னால் மறுக்கவும் முடியவில்லையல்லவா! அப்படித்தான் நானும் பொறுக்க முடியாமல் தவித்தேன்! மறுக்க முடியாமல் மனம் குழம்பி னேன்! நாட்டு நிலையைக் கூறி, உதவிகோரும்போது,அப்பா மறுத்தது கேட்டு மக்கள், 'துரோகி! வஞ்சகன்! தூர்த்தன்! தூக்கிலிட வேண்டும்! வாளால் வெட்ட வேண்டும்' என்று குரல் ஒலிக்கும்போது என்னால் பேசமுடியவில்லை மணிவண்ணா, பேச முடியவில்லை! நீ துரோகியாகவில்லை- துரோகம் புரியமாட்டாய் என்று இப்போதும் என்னால் நம்ப முடிகிறது. ஆனால் அப்பா, துரோகியல்ல, வஞ்சக ரல்ல என்று மக்கள் நம்பமாட்டார்களே!

திரு: நாசப் பொடியை பாதுகாவலரிடம் ஒப்படைத்து விடுவோம்! போரிலிருந்து நாடு மீளட்டும்; அப்போது தானாக நம்பிவிடுவார்கள் அண்ணா!

குணா: நானும் அதைத்தான் நினைக்கிறேன் திருமதி!

மணி: குணாளா! இப்போது நீ என்னைத் துரோகி என்று கூறுவதைத் தாங்கிக் கொள்ள முடியும்! ஆனால், நாசப் பொடியைக் கொடுத்து விடுவோம் என்பதைத் தாங் கிக் கொள்ள முடியவில்லை குணாளா!நான் இலட்சியத்துக்கு அடிமையாகி இருக்கிறேனே!

குணா: நாம் கொடுக்காவிட்டால்கூட, விக்ரமன் இங்கு வந்து கொண்டுபோய் விடக்கூடும் என்று நீதானே சற்று முன் கூறினாய்! நம் அனைவரையுமே கைது செய்யும் எண் ணம் விக்ரமனுக்கு ஏற்பட்டு விடலாம் என்றாயே, மணி வண்ணா!

மணி: ஆமாம்! நாம் அனைவரும் ஆராய்ச்சிக் குறிப் புக்களுடனும், நாசப் பொடி—தடுப்புப் பொடி—தீப்பொருள் முதலியவைகளுடனும் தலைமறைவாகிவிட வேண்டும்.

குணா: உண்மையற்ற முறையில் அப்பா ஒருவர் துரோகியாக்கப்பட்டிருப்பது போதாதென்று, அந்தப் பெயரின் கீழ் நம் பெயரும் எழுதிக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறுகிறாய்.

திரு: அண்ணா பேசிக் கொண்டே வீணாகப் பொழுதைப் போக்கிக் கொண்டு இருக்கிறோம்

குணா: கருத்து வேறுபாடுகளை பேசிப் பேசித்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். திருமதி! அடிதடியில் இறங்கி முடிவு காண்பது முட்டாள் தனமானது. அறிவுக்குப் பொருந்தாததுமாகும்.

மணி: குணாளா! உடல் பலம் கொண்டு நீ என்னைத் தாக்கினால்கூட, அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியும். மன பலத்தால், சொற்கூட்டத்தால் தாக்கப்படுவதை தாங்கிக் கொள்ள முடியாதவன் நான். இலட்சியம் காக்கப்பட வேண்டும் என்பதுதான் என் விருப்பம்; வேண்டுகோள்; நான் வருகிறேன்.

[மணிவண்ணன் புறப்படுகிறான்.]

திரு: நில்லுங்கள்! எங்கே புறப்பட்டுவிட்டீர்கள்?

குணா: மணிவண்ணா! திருமதி உன் உடைமை! ஒருவித சடங்கின் மூலம் இருவரும் இன்னமும் இணைக்கப்படவில்லையே தவிர, உள்ளத்தால், உணர்வால் இணைந்திருக்கிறீர்கள். உன் உடைமையை உன்னோடு கொண்டு போ! காலம் இணைத்து வைக்கும் வரையில், உன்னிடமே பாதுகாப்பாக இருக்கட்டும்.

மணி: குணாளா! அறிவானந்தரின் அறிவுரைகளும், அன்பு உள்ளமும் அப்படியே என்னுள் இடம்பற்றி இருக்கின்றன. திருமதிக்குத் துரோகம் செய்ய முடியும் என்று என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. உங்கள் உரிமைகளில் குறுக்கிடமுடியாத நிலைமையில்தான் இப்போது நான் இவ்விடம் விட்டுப் புறப்படுகிறேன். நிலைமைகளும், நினைப்புகளும் மாறிவிடக் கூடிய சூழ்நிலை தோன்றத்தான் போகிறது. என் ஆசான் வெற்றி பெறத்தான் போகிறார். வருகிறேன் குணாளா! போய் வருகிறேன் திருமதி!

குணா: உன் முடிவு அதுவானால், என்னால் தடுக்க முடியாது மணிவண்ணா!

திரு: அண்ணா, என் வாழ்வைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! உங்களது இலட்சியப் போராட்டத்துக்கிடையே, என் வாழ்வுப் போராட்டமும் இணைந்திருக்கிறது என்பதை இருவருமே மறந்து விட்டீர்கள்.

மணி: இல்லை திருமதி! ஒருத்திக்கு ஒருவன் என்ற தத்துவம், ஒருவனுக்கு ஒருத்தி என்று இருக்க வேண்டுமென்பது என் கருத்து. என் இதயத்தில் இன்னொருத்திக்கு இடம் இல்லை. இலட்சியப் பலி என் எதிரே நடைபெறவேண்டாம் என்றுதான் போகிறேன்! வெறும் பிரமை என்பதும் எனக்குத் தெரிகிறது—மனச் சாந்திக்காக, என்னையே நான் ஏமாற்றிக் கொள்வதற்காகப் போகிறேன்!

[என்று கூறிவிட்டுப் போய் விடுகிறான். குணாளன் படுக்கையில் போய் விழுகிறான். திருமதி தேம்பிக் கொண்டு நிற்கிறாள், படுக்கையில் கிடந்தபடியே.]

குணா: திருமதி! தேம்பிப் பயனில்லை. திருநாடு முதலில் எதிரியிடமிருந்து மீட்கப்படவேண்டும். போ! சிறைச்சாலைக்குப் போய், நீயே அப்பாவிடம் கேட்டுப் பார்! நானும் விக்ரமனுக்கு உதவி செய்யத்தான் வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாகக் கூறு—செய்யப்படும் உதவி, விக்ரமனுக்காக அல்ல—திருநாட்டுக்காக என்று எடுத்துக் காட்டு! போ, திருமதி! விரைவாகப் போய் வா!

[என்றதும் திருமதி தயக்கத்துடன் புறப்படுகிறாள்.]

சிறைக்கூடத்தை நோக்கி, தடுமாற்றத்துடன் எழுந்து இரகசியக் குறிப்பேடு இருக்குமிடத்துக்கு வருகிறான் குணாளன். அதனைக் காணாமல் திடுக்கிட்டுப்போய், அங்குமிங்கும் தேடுகிறான். கிடைக்கவில்லை; கவலை முகத்தில் கப்பிக்கொள்கிறது.

ஆய்வுக்கூடத்துக்கு வந்து போகிறவர்களைப் பற்றியும், பணியாற்றுபவர்களைப் பற்றியும் நினைத்துப் பார்க்கிறான். மாதவன், மணிவண்ணன், திருமதி, அறிவானந்தர், மற்றும் ஏவலர்கள் அனைவரும் தனித்தனியாகவும், கூட்டமாகவும் அவன் மனத் திரையில் தோன்றுகின்றனர்.

நாலைந்து நாட்களாக மாதவன் ஆய்வுக்கூடத்துக்கே வராதது அவன் நினைவுக்கு வருகிறது. அவனே எடுத்திருக்கக் கூடுமோ என்று எண்ணுகிறான். இந்தத் திருட்டுத் தனத்தைச் செய்ததனால்தான் இங்கே வராமலிருக்கிறானோ என்று நினைத்துப் பார்க்கிறான். விக்ரமனிடம் கையூடு பெற்று, இந்த வேலையைச் செய்திருக்கலாமோ என்ற ஓர் எண்ணம் பளிச்சிடுகிறது. மாதவனை மட்டுமே, ஆதாரம் இன்றி எப்படி ஐயுறமுடியும் என்று அவனே சமாதானமும் செய்து கொள்கிறான்.

அடுத்து, அறிவானந்தரைப் பற்றி நினைக்கிறான். திருநாட்டுக்குத் தான் உதவி செய்ய முடியாது என்ற அவர் பிடிவாதம் எதனால் என்று நினைத்துப் பார்க்கிறான். ஒரு கால், அவரே இரகசியங்களை எதிரி நாட்டிடம் கொடுத்து விட்டிருக்கலாமோ? அதனால்தான் அரசாங்க உதவி பெற்றும், பிடிவாதமாக உதவிதர மறுக்கிறாரோ! மக்கள் அறிவார்கள் என்ற பேச்சில், போர் நடைபெற்றாலும் உயிர்கள் அழியத்தான் செய்யும் என்பதை அவர் அறியாமலா இருக்க முடியும்? மல்ல நாட்டின் வெற்றியைக் கருதித்தான் இப்படி செய்கிறார் என்று நம்பமுடியுமா? இரகசியங்கள் மல்ல நாட்டுக்குப் போய்ச் சேர்ந்திருக்குமோ! கார்மேகத்துக்கும் இவருக்கும் தொடர்பிருந்து, இவரே இரகசியங்களைக் கொடுத்தனுப்பி இருப்பாரோ என்றெல்லாம் எண்ணுகிறான். குழப்பம் முன்னிலும் அதிகமாகிவிடுகிறது.

தந்தையின் இலட்சியம் உயர்ந்தது என்றாலும், எதிரி நாட்டுக்கு உதவும்படியாக அந்த இலட்சியம் கூறப்படுகிறதா என்று எண்ணிப் பார்க்கிறான். சிந்தனை ஓட்டம் சிதைகிறது.

மணிவண்ணன், நாசப்பொடியை திருநாட்டுக்குக் கொடுக்கக்கூடாது என்று கூறியதுகூட சுயநலத்தின் அடிப் படையில்தானோ! இவனே எடுத்துக் கார்மேகத்திடம் கொடுத்திருப்பானா? அறிவானந்தரும் மணிவண்ணனும் இணைந்தே இப்படிச் செய்திருக்கலாமோ? மணிவண்ணன் அவ்வளவு பெரிய துரோகியாக இருப்பான் என்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா? கள்ளக் கனிவுடன்தான் இங்கே நட்பு பாராட்ட வந்தானா?...

என்று நினைத்துக் கொண்டதும் தட்டுத் தடுமாறி நடந்து கூடத்துக்கு வெளியில் வந்து, மணிவண்ணன் இருக் கிறானா என்று அங்குமிங்குமாக விழியை ஓட்டிப் பார்க் கிறான். அவன் பார்வையில் யாரும் தென்படாததால் மீண்டும் திரும்பிவந்து மறுபடியும் குறிப்புகளைத் தேட முயல்கிறான்! கிடைக்கவே இல்லை என்றதும்]

குணா: துரோகம்! அக்கிரமம்! அநியாயம்! எல்லோருமே மனிதர்களாகத்தான் தெரிகிறார்கள்! பாலூட்டி வளர்த்தா லும் பாம்பு, பாம்பாகத்தானிருக்குமாம்! சாது யார்? சன்னி யாசி யார்? என்பதே புரிந்து கொள்ளமுடியாமல் போய் விட்டது! புலி எது, புள்ளிமான் எது? எல்லாமே தோல் போர்த்தி இருக்கின்றன! என்ன மனிதர்கள் இவர்கள்! இழி வினைச் சுமக்க எங்கிருந்து கற்றார்கள்?...

[படுக்கையில் போய் விழுகிறான்.]

காட்சி—41.

[ஊர் எல்லையைத் தாண்டி வேதனையுடன் போய்க் கொண்டிருக்கிறான் மணிவண்ணன்! அறிவானந் தரின் உயரிய இலட்சியங்களைப் பற்றியும், அறிவியல் ஆராய்ச்சிகளை ஆக்கச் சக்திக்குப் பதில் அழிவுச் சக்திக்குப் பயன்படுத்த குணாளன் முடிவெடுத்துவிட்டது பற்றியும் எண்ணி, எண்ணி மனம் நைகிறான். 'ஐயோ! அம்மா!' என்ற அலற லுடன், யாரோ தன் பெயரைச் சொல்லி அழைப் பது கேட்டு நிற்கிறான்.

மாதவன் ஓடி வந்து நிற்கிறான் அங்கு. அவன் உடலெங்கும் பயங்கரமான இரணங்கள் தோன்றி இருக்கின்றன. பரிதாபமாகக் காணப்படுகிறான் அவன். 'ஐயோ, அம்மா!' என்ற முணுமுணுப்பு அதிகமாக இருக்கிறது.]

மணி: மாதவா! என்ன அலங்கோலம் இது? புண்கள் எப்படி வந்தன? நாசப் பொடியால் ஏற்பட்ட புண்களைப் போல் தெரிகிறதே!

மாத: உண்மைதான் மணிவண்ணா! நாசப்பொடியால் வந்த வினைதான் இது. பேராசையால் வந்த பெருநோய்.

மணி: விவரமாகச் சொல்லப்பா...

மாத: மணிவண்ணா! என்னை மன்னிப்பதாகச் சொல்! காட்டிக் கொடுத்து விடாதே!

மணி: மன்னிப்பு—காட்டிக்கொடுப்பது!என்ன,இதெல் லாம்?

மாத: மணி, உனக்குத்தான் மாலதியைத் தெரியுமே! அந்த அலங்கார வல்லியின் அழகுபடுத்திய பாடு இது. அவள் தந்த நச்சுக் கருத்துக்களைப் பருகினேன். ஆய்வுக்கூடத்தில் நாசப் பொடியையும் தீப்பொருள்களையும் திருடினேன். ஆயிரம் வராகன் தருவதாகக் கூறினாள் அந்த வஞ்சகி! கார்மேகத்துக்கும், திருமுடியார்க்கும் தருவதற்காகக் கேட்டாளாம்! என்னை ஏமாற்றியது போலவே, மாலதி, கார்மேகத்தையும் ஏமாற்றிவிட்டாள்! நாசப்பொடி என்ற பேரில் போலிப் பொடியொன்றைக் கொடுத்து விட்டாளாம்! தீப்பொருளை மட்டும் திருமுடியாருக்குக் கொடுத்தாள். திருமதி ஒருமுறை, நடன அரங்கில் வர விருந்த பயங்கரமான பேராபத்திலிருந்து மாலதியைக் காப் பாற்றினாளாம். அதன் காரணமாகவே, மல்ல நாட்டு எதிரி களுக்கு நச்சுப் பொருளைக் கொடுக்காமல், கைம்மாறு செய் தாளாம் மாலதி. திருமுடியார் மக்களின் ஆத்திரத்துக்கு ஆளாகி, கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட பின், பயந்து

போயிருக்கிறாள். உண்மை வெளிப்பட்டு, மக்களின் ஆத்திரம் தன் மேல் திரும்புமுன் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதி, நாசப் பொடியை, விக்ரம பூபதிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள்! எனக்குக் கூறியபடி ஆயிரம் வராகனும் கொடுக்க வில்லை. இதன் காரணமாக எனக்கும் மாலதிக்கும் தகராறு எழுந்தது. இரண்டு நாளைக்கு முன்பு, தகராறின் முடிவில் மாலதி உயிரோடு விடப்படக்கூடாது என்ற நிலைமை எனக்கு ஏற்பட்டது! நான் திருடிக் கொண்டு வந்தேன் என்பதை அறிவானந்தரிடம் கூறிவிடப் போவதாக அச்சுறுத்தினாள்! அதன் காரணமாகவே அவளைக் கொன்றுவிட நினைத்தேன். பெண்ணுருவில் இருக்கும் பேய் அவள். எங்களுக்குள் கை கலப்பு ஏற்பட்டது. நான் எதிர்பாராத வகையில், நாசப் பொடியை என் மீதே தூவி விட்டாள்! துடித்தேன்! துவண்டேன்! வெறி உணர்ச்சி மிகுந்துவிட்டது. நான் கொடுத்த நாசப் பொடியால், என்னையே நாசமாக்கிவிட்டாள். ஒரே பாய்ச்சல்! அந்த உல்லாசியின் உயிர், ஒரு கணத்தில் போய் விட்டது! நச்சுப் பொடிக்கு, மாற்றுப் பொடி வேண்டும் என்று தவித்தேன். பெற முடியவில்லை மணிவண்ணா! மாலதி சேமித்து வைத்திருந்த பொன் நாணயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்! என்னை மன்னித்துவிடு!

என்று மடியில் வைத்திருந்த இரகசியக் குறிப்பைக் கொடுத்து—'இதையும்கூட நான்தான், குறிப்பேட்டி லிருந்து கிழித்துக்கொண்டு வந்தேன்!'

என்று தன்கையில் வைத்திருந்த ஒரு பெட்டியை அவன் காலடியில் வைத்துவிட்டு—

'மன்னித்துவிடு மணிவண்ணா! என்னைக் காப்பாற்று! எரிச்சல் தாங்கமுடியவில்லை!' என்று துடிக்கிறான்.

மணி: மாதவா! அனுதாபப்படுகிறேன், உன் விபரீத மான கதையைக் கேட்க! எவ்வளவு பெரிய பாதகத்தை இந்த நாட்டுக்குச் செய்யவிருந்தாய் என்பது புரிகிறதா? அறிவானந்தர், தம் நாசப் பொடியை திருநாட்டுக்குத் தர

மறுத்துவிட்ட நிலையில், உன் மூலம் அந்தப் பொடி மல்ல நாட்டுக்குப் போயிருந்தால்? அடப்பாவி! திருமுடியார் ஆடிக் காட்டிய திருவிளையாடலின் கதாநாயகன் நீதானா? முட்டாளே! அறிவானந்தரின் தலையீடு, அன்று இல்லாமல் இருந்திருந்தால், கடவுளின் பேராலும், பக்தியின் பேராலும் மடமைக்கு தடம் அமைத்துத் தரப்பட்டிருக்குமே! துரோகி! உனக்கு இந்தத் தண்டனை மிக மிகக் குறைவுதான்!

மாத: ஐயோ, மணிவண்ணா! வார்த்தைகளால் என்னைத் துளைக்காதே! இந்த இரணங்களால் என் உடலே துளைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது! மாற்றுப்பொடி! மாற்றுப்பொடி கொஞ்சம்...

மணி: மாதவா! என்ன செய்வதென்றே புரியவில்லே! குணாளனுடன் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக நான் ஆய்வுக்கூடத்தைவிட்டே வெளியே வந்துவிட்டேன்! அறிவானந்தரின் ஆராய்ச்சியை இனி நான் தனித்திருந்தே தொடர்ந்து நடத்தப்போகிறேன். மாற்றுப் பொடிக்கான முறை எனக்கு மனப்பாடம். வா! போகலாம். முயற்சிக் கலாம்.

[அவனை அழைத்துக் கொண்டு போகிறான். பெட்டியை எடுத்துக் கொண்டு பின்தொடர்கிறான் மாதவன், துடிதுடித்துக் கொண்டே.

காட்சி—42

திருமதி: அப்பா! ஏன் இந்தப் பிடிவாதம்? ஊர் மக்களெல்லாம் உங்களைத் தூற்றிப் பேசுகிறார்கள்! அறிவானந்தரென்றால் மனங்குளிர வாழ்த்துபவர்களெல்லாம், இப்பொழுது பரம்பரை எதிரியின் பெயரைக் கேட்டால் கோபப்படுவதுபோல கொந்தளிப்புடன் எழுகிறார்கள்! தெருவில் என்னால் நடந்து வரமுடியவில்லை. வெறுப்பான பார்வையும், இழிவான பேச்சும் என்னைத் தொடர்கின்றன! ஊரில் மதிப்புடன் அமைதியாக இனி என்னால் வாழ முடியாது! உங்களுடன் வேண்டுமானால் இந்தச் சிறைக்குள்ளே தங்கி விடுகிறேன்!

அறி: (தடித்த குரலில்) ஏனம்மா! அறிவானந்தரின் மகள் என்பதில் வெட்கப்படுகிறாயா? விக்ரமன் குடிமக்களை மட்டுமல்ல, என் மகளையே எனக்கு எதிராகத் திருப்பிவிட்டிருக்கிறான். மகளே! நான் உனக்குச் செய்யக்கூடிய கடைசி உதவி இதுதான்! வீட்டில் எனது பெட்டியில் நூறுவராகன் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு இந்த நாட்டைவிட்டு உன் கண்காணாத வேற்று நாட்டுக்குச் சென்று, சுகமாக இரு! அறிவானந்தரின் மகள் என்று யாரிடமும் கூறத் தேவையில்லை! அறிவானந்தரால் தன்னை மறைத்துக் கொள்ள முடியவில்லை. நீயாவது உன்னைக் காப்பாற்றிக்கொள்! வேண்டுமானால் குணாளனை உனக்குத் துணையாக அனுப்பி வைக்கிறேன்!

திரு: ஐயோ, அப்பா! நான் படும் வேதனை தெரியாமல், ஏதோ சொல்லுகிறீர்களே! என் அம்மா இருந்தால், இப்படி 'போ! தனியாகப் போய்விடு,' என்று சொல்லியிருப்பார்களா, அப்பா? உண்மையிலேயே நீங்கள் கொடுமைக்காரர்தான்; கல் நெஞ்சினர்தான்! மன்னர் எவ்வளவு கெஞ்சிக் கேட்டார்;ஊரில் உள்ளவர்கள் எவ்வளவு வேதனையுடன் பேசிக் கொள்ளுகிறார்கள்! தெரியுமா? ''அறிவானந்தர் மட்டும் நமக்கு உதவி செய்தால், திருநாடு வெற்றி பெற்றுவிடும்! அவர் மட்டும் ஏனோ மறுக்கிறார்.'' என்று ஊர் மக்கள் பெருமூச்செறிந்து,'கிடைக்கவிருந்த பெரியவாய்ப்பை இந்தக் கிழவன் கெடுத்துவிட்டானே' என்று பேசிக்கொள்ளுகிறார்கள்! அவர்கள் பேசுவதை நீங்கள் நேரில் கேட்டால், இவ்வளவு பிடிவாதத்துடன் இருக்கமாட்டீர்கள் அப்பா.

அறி: மற்றவர் சொல்வது இருக்கட்டும்! நீ என்ன சொல்கிறாய் திருமதி?

திரு: அப்பா! நானுந்தான் கேட்கிறேன். உங்கள் கண்டுபிடிப்பை, நாட்டுக்கு உதவியாயிருக்குமாறு ஏன் கொடுக்கக் கூடாது? திருநாடு வெற்றியடைவது கண்டு, மல்ல நாட்டாரோ வேறு நாட்டாரோ மனம் புழுங்குவார்கள். ஆனால் நீங்கள் ஏன் திருநாட்டு வெற்றிக்குத் தடையாக இருக்க வேண்டும்?

அறி: என்ன சோதனை! என் மகளே கண்கலங்கக் கேட்கிறாள். ஒரு கணம் எனக்கு மனம் தடுமாறுகிறது! என் அருமை மகள் இப்படி வேறு எதைக் கேட்டிருந்தாலும் உடனே தந்திருப்பேன்.

திரு: உங்கள் பிடிவாதம் தலைநகரை வேதனையில் வீழ்த்தியிருக்கிறது அப்பா! தெருக்களில் எங்கும் இதே பேச்சு தான்! பெருமூச்சு கலந்த சோகக் குரல்கள்! அவற்றை நீங்கள் அறியமாட்டீர்கள்!

அறி: அவை எனக்குத் தெரிகிறது திருமதி! ஆனால் என் இதயத்தில் மண்டிக் கிடக்கும் வேதனையை உணர்வார் இல்லையே! ஒவ்வொரு சமயம் ஏன் இந்தத் தொல்லைகள்! மற்றவரைப் போல நாமும் வாழ்ந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் மட்டுமே வாழ்ந்து விட்டேன். ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு உலகு இருப்பதை இப்பொழுது உணருகிறேன்!

திரு: அப்பா! மண்டியிட்டுக் கேட்கிறேன். பிடிவாதத்தை விடுங்கள்! சோகத்திலிருக்கும் தலைநகரை மகிழ்ச்சியில் ஆழ்த்துங்கள்! நாடு வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது என்று நாடே நம்புகிறது.

[விக்ரமன் வருகிறான்]

விக்ர: பாரும் அறிவானந்தரே! உமது மகளே மண்டியிட்டுக் கேட்கிறாள்! திருநாடு வெற்றிபெற, மக்கள் எல்லோரும் இப்படி மன்றாடித்தான் கேட்கிறார்கள், உதவக் கூடாதா என்று?

அறி: திருநாட்டுக்கு வெற்றியென்றால் மல்ல நாட்டில் பிணங்கள் மலைபோலக் குவிக்கப்படும் என்பதை அவள் உணராமல் பேசுகிறாள். இந்தக் கொலைத் தொழிலுக்கு உடந்தையாக நான் இருக்கமாட்டேன்!

விக்ர: கொலைத் தொழிலா?

அறி: ஒருவனைக் கொன்றால் கொலை! ஓராயிரவரைக் கொன்றால் அது வெற்றி! அதுதானே உமது இலக்கணம்?

விக்ர: அறிவானந்தரே! மல்ல நாட்டுப் படைகள் நமது எல்லையோரத்தில் குவிந்துவிட்டன! படையெடுப்பைத் தாங்கும்வலிமை திருநாட்டுப் படையிடம் இப்போதுஇல்லை. என்ன நேரும் தெரியுமா? எதிரிப் படைகள் நாட்டுக்குள் நுழைந்து, எதிர்ப்பட்டவைகளை யெல்லாம் அழித்துச் செல்லும்! பயிர்கள் நாசமாகும், கிராமங்கள் எரிந்து சாம்பலாகும், மக்கள் மடிவர், கன்னியர் கதறுவர், குழந்தைகள் அழும்! அறிவானந்தரே! எதிரிப் படைகள் உள்புகுந்தால், நாடு காடாகும்! அந்த நிலைமையைத் தடுக்க, உமது அறிவையும், ஆற்றலையும் உதவக் கூடாதா?

திரு: அப்பா! சரியென்று சொல்லுங்கள் அப்பா

[திருமதியின் வற்புறுத்தலால் ஒரு முடிவுக்கு வந்தவராக.]

அறி: சரி! நான் உதவி செய்கிறேன்!

விக்: அப்பாடா!

திரு: எனக்குத் தெரியும், அப்பாவின் உதவி நாட்டுக்குக் கிடைத்தே தீரும் என்று.

விக்: இரகசியத்தைத் தாருங்கள்! மல்ல நாட்டுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்!

திரு: திருநாட்டுக்கு வெற்றி நிச்சயம்!

விக்ர: போரிடத் தயாராக வேண்டியதுதான். அறிவானந்தரே! உம்மைப் போன்ற உத்தமர் இருக்க முடியாது. இரகசியங்களைத் தர முதலில் ஒத்துக் கொண்டிருந்தால், இவ்வளவு தொல்லைகளும், கவலைகளும் வந்திருக்காது!

அறி: இப்பொழுதுகூட, இரகசியங்களைத் தருவதாக நான் ஒப்பவில்லையே!

விக்ர: (திகைப்புடன்) என்ன?

அறி: திருநாட்டுக்கு உதவி செய்வேன். போரிட அல்ல!

விக்ர (புரியாமல்) பின் எதற்கு?

அறி: போரைத் தடுப்பதற்கு நான் உதவி செய்வேன்! எதிரிப் படை நாட்டுக்குள் புகுந்தால் நாசம் விளையும் என்று சொன்னீர்கள்! அந்த நாசம் விளையாதவாறு, நாட்டை நான் காப்பாற்றுவேன்! எதிரிப் படைகள் இங்கு நுழையாதவாறு நான் செய்கிறேன்!

விக்ர: எப்படி?

அறி: என்னைச் சிறையிலிருந்து விடுவித்து மல்ல நாட்டுப் படைத்தலைவனிடம் போக அனுமதி கொடுங்கள்! நான் அவனைச் சந்தித்துப் போரை நிறுத்துகிறேன்!

விக்ர: மாபெரும் படையால் தடை செய்ய முடியாத ஒன்றை, தனியாகச்சென்று நீர் எப்படி சாதிக்கப் போகிறீர்? இங்கிருந்து வெளியில் போனதும் தப்பி ஓடமாட்டீர்கள் என்பதற்கு என்ன உறுதி?

அறி: சிறு பிள்ளையைப் போல பேசுகிறீர், விக்ரமரே! திருமுடியார் விஷயத்தை நேரில் கண்ட பின்பும் இப்படிப் பேசுவது கேட்டு எனக்குச் சிரிப்பு வருகிறது. இதற்கு நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்றால், போர், படையெடுப்பு இவைகளால் உண்டாகும் அழிவுக்கு நீர்தான் பொறுப்பாவீர்!

விக்ர: (சற்றுச் சிந்தித்து) உங்களுடன் எல்லைவரை வந்து, எதிரிப் படையிடம் அனுப்புகிறேன்! ஏதாவது துரோகம் நிகழ்ந்தால், உமது மகன், மகள் இருவரும் சிரச் சேதத்துக்கு ஆளாவார்கள்! நினைவிருக்கட்டும்!

அறி: (அலட்சியமாக சிரித்தபடி) திருமதி! குணாளனைத் தயாராக இருக்கச் சொல்!

காட்சி—43.

[ஊரின் புறம். காட்டுப் பகுதி. மாதவனைத் தாங்கியபடியே மணிவண்ணன் நடந்து போகிறான்; நடக்க முடியாமல் தள்ளாடுகிறான் மாதவன்.]

மாத: (தடுமாறியபடி) மணிவண்ணா! இனிமேல் என்னால் நடக்க முடியாது. உடம்பெல்லாம் பற்றி எரிகிறது... வலிதாள முடியவில்லை. ஐயோ! அம்மா!!

[உட்கார்ந்து விடுகிறான்.]

மணி: என்ன செய்வதென்றே புரியவில்லையே [என்று சுற்றும் முற்றும் பார்க்கிறான். ஒரு பக்கத்தில் செடி கொடிகள் படர்ந்திருக்கின்றன. அங்கே சென்று எதையோ தேடுகிறான். ஒரு கொடியிலிருந்து சில பச்சிலைகளைப் பறித்துக் கொண்டு வந்து...]

மாதவா! தற்காலிகமாக இது சாந்தி தரக்கூடும். முயற்சித்துப் பார்க்கிறேன்.

[கூறிவிட்டு, கைகளால் இலைகளைக் கசக்கிச் சாறு பிழிந்து, இரணங்களின் மீது விடுகிறான். மாதவன் தாள முடியாது துடிக்கிறான். அவன் போடும் கூச்சல் அதிகமாகிறது. பரிதாபத்துடன்பார்த்துக்கொண்டிருக்கிறான்மணிவண்ணன். மாதவன் துடித்துத் துடித்துச் சாய்கிறான். தலை சாய்ந்தே விடுகிறது! ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, கண்களில் வழியும் கண்ணீரை அவனுக்குக் காணிக்கையாக்கிவிட்டு, மாதவன் கொண்டு வந்த பெட்டியை எடுத்துக் கொண்டு மேலே நடக்கிறான்.]

காட்சி—44

[திருநாட்டுக்கும், மல்ல நாட்டுக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதியாக பேராறு ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது. அதனைக் கடக்க மூங்கில்களாலும், கழிகளாலும் கட்டப்பட்ட பாலம் ஒன்று இருக்கிறது. அங்கு ஆடம்பரமிக்க இரு கோச் வண்டிகள் வந்து நிற்கின்றன. ஒன்றிலிருந்து அமைச்சர் அருளானந்தரும், குணாளனும், இன்னொன்றிலிருந்துஅறிவானந்தரும்,விக்ரமனும் கீழேஇறங்குகிறார்கள். வானளாவியமலைகள் கண்ணுக்கினிய காட்சியாகஇருக்கின்றன.குணாளன் மேலோட்டமாக அவைகளின் மீது கண்ணோட்டம் விடுகிறான்.]

[ஆற்றின் எதிர்க் கரையில் மல்ல நாட்டுப் படைகளின் கூடாரங்கள் தெரிகின்றன.]

காட்சி—45

[மல்ல நாட்டுப் படைத்தலைவனின் கூடாரம். துணைப்படைத் தலைவனுடன் போர் முறை பற்றியும், நிலை பற்றியும் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறான் படைத்தலைவன்.]

படைத்தலைவன்: துரோகி கார்மேகம் செய்த சதியால் போதிய வீரர்களுடன் நாம் வந்திருக்கவில்லை. முழுப் படையையும் உடன் அனுப்பி வைக்கும்படி அமைச்சருக்குச் செய்தி அனுப்பினேன். வீரர்கள் இன்னும் வந்துசேரவில்லை; நாளை மாலைக்குள் வந்துவிடலாம்!

துணைப்படைத்தலைவன்: பாதி வழியில் வந்துகொண்டிருக்கக்கூடும் என்று நினைக்கிறேன்! கார்மேகத்தைச் சந்தித்த பிறகே, நாம் போர் பற்றி முடிவுக்கு வந்திருக்க வேண்டும்!

படை: உண்மைதான்! அவசரப்பட்ட முடிவு ஆபத்துக்கு அறிகுறி என்பார்கள். உண்மையாகிவிட்டது. திடீரென்று திருநாடு தாக்குதலைத் தொடங்கி விட்டால் இரு நாட்களுக்குக்கூட நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது! ஆனால். நமக்குத் தித்திப்பான ஒரு செய்தியும் கிடைத்திருக்கிறது! அறிவானந்தரின் இரகசியங்கள், விக்ரமனுக்குக் கிடைத்திருக்கக்கூடும் என்று எண்ணி இருந்தேன்! எந்த உதவியும் தர மறுத்து விட்டாராம் அறிவானந்தர்! ஆக்கச் சக்தி— அழிவுச் சக்தி என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம் அவர். ஆத்திரத்தால் அறிவு கெட்டு, அறிவானந்தரைச் சிறைப் படுத்திவிட்டானாம் விக்ரமன்! ஒரு பேரபாயத்திலிருந்து தப்பியதற்கொப்பாகும் இது! படைகளுக்கும், படைகளுக்குமே மோதல் என்ற நிலைதான் இப்போது. என்றாலும் அந்தப் பலம்கூட இப்போது முழு அளவுக்கு நம்மிடம் இல்லை!

து. படை: நாம் முந்திக் கொண்டு திடீர்த் தாக்குதலைத் தொடங்கிவிட்டால், அந்த இக்கட்டிலிருந்தும் தப்பிவிட முடியுமே தலைவரே!

படை: அப்படித்தான் நானும் முடிவெடுத்திருக்கிறேன்! இன்றிரவே எல்லையைக் கடந்து, திடீர்த் தாக்குதலை, எதிர்பாராத முறையில் ஆரம்பித்துவிட வேண்டும்! வீரர்களுக்குக் கட்டளை இடு. நிலைமைகளுக்கேற்ப, புதுப் புது போர் முறைகளுக்குரிய கட்டளைகளுக்குக் காத்திருக்கும்படிக் கூறு.

[துணைப் படைத்தலைவன், வணக்கம் செலுத்தி விட்டு வெளியே வருகிறான். தலைவன் கூடாரத் துக்குள்ளேயே சிந்தனை செய்தபடி உலவிக் கொண்டிருக்கிறான். சில விநாடிகளுக்குப் பின், துணைத் தலைவன் திரும்பி வந்து...]

துணை: (பரபரப்புடன்) தலைவா! அறிவானந்தர் வரு கிறார்!

படை: (திடுக்கிட்டு) அறிவானந்தரா? என்ன உளறு கிறாய்?

துணை: நானும் என் கண்களை முதலில் நம்பவில்லை! ஆனாலும் அவர் அறிவானந்தர்தான்!

[படைத்தலைவன் திரையை விலக்கிப் பார்க்கி றான். வீரர்களைக் கடந்து அறிவானந்தர் வரு கிறார். சில வீரர்கள் வாளை உருவுகின்றனர். எதையும் லட்சியம் செய்யாமல் அறிவானந்தர் வருகிறார்.]

படை: சிறையிலிருப்பதாகச் சொன்னார்கள். திடீ ரென்று நம்மை நோக்கி அவர் வருகிறாரே! ஏன் வருகிறார்? எதற்காக வரவேண்டும்?

[அறிவானந்தர் திரையை நீக்கி உள்ளே வருகிறார்.]

படை: போருக்கு அஞ்சி விக்ரமன் உங்களை அனுப்பி விட்டானோ! சரண் அடைவது என்றாலொழிய, நீங்கள் பேசத் தேவையில்லை!

அறி: படைத்தலைவரே! நீங்கள் கூறுவது தவறு! விக்ரமன் அஞ்சவில்லை. போருக்குத் தயாராகவே இருக்கி றான்.

படை: அப்படியானால் போரிடச் சொல்லுங்கள்! அதை விட்டுவிட்டுத் தூது அனுப்புவானேன்? திருநாட்டுப் படை கள் தோற்றோடுங் காட்சியைக் கண்டுகளிக்க நீங்கள் வந் திருக்கிறீர்களா?

அறி: விக்ரமன் அனுப்பவில்லை; அவன் போர் ஆயத் தங்களில் இருக்கிறான். நானாகத்தான் வந்துள்ளேன்! யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்பதைப் பற்றி யல்ல! போர் மூண்டால், உன் பக்கத்தில் எவ்வளவு வீரர் கள் இறந்து படுவர்!

படை: சாவுக்கஞ்சாத வீரர்கள், களத்திலே உயிரை விடுவது கிடைத்தற்கரிய பேறாக நினைத்துப் போரிடும் மல்ல நாட்டு வீரர் ஐம்பதினாயிரம் பேர் வெளியில் அணி வகுத்து இருக்கின்றனர்!

அறி: திருநாட்டிலும் போரில் மாள ஐம்பதினாயிரத் துக்கும் அதிகமான வீரர்கள் உள்ளனர்.

படை: மல்ல நாட்டுக்கு வலிவு அதிகம்; வீரர் கூட்டம் வந்தபடி இருக்கும்.

அறி: வெற்றியும் தோல்வியும் எண்ணிக்கையை மட்டு மல்ல—யுத்த தந்திரத்தையும் பொறுத்திருக்கின்றன. உணர் கிறேன்! இன்று திருநாட்டை மல்லநாடு வென்று விடுவதா கவே வைத்துக் கொள்வோம்! நாளை மருதூர் நாட்டின் முன் மல்லநாடு சண்டையில் தோற்றோடும் அல்லது திரு நாடே வலிவடைந்து மல்ல நாட்டைத் தோற்கடிக்கலாம்! போர் ஒருமுடிவல்ல!ஒரு போர் மற்றொரு போருக்கு ஆரம்ப மாகும்!

படை: எதற்காகச் சொல்கிறீர்கள்?

அறி: போர் வேண்டாம் என்கிறேன்! நூறாயிரம் உயிர்களைக் கொன்று குவித்து, எண்ணற்றக் குடும்பங்களில் கண்ணீரை வெள்ளமெனப் பெருக்கி, நீங்கள் காணப் போவ தென்ன? விக்ரமன் மாவீரனா? மார்த்தாண்டன் மாவீரனா? அந்தக் கேள்வியின் பதிலை, பல்லாயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தில் தோய்த்துதான் எழுதவேண்டுமோ?

படை: சண்டைக்குச் சென்றால் மல்ல நாட்டுக்கு வெற்றி நிச்சயமென்றதும்,சமரச கீதம் பாடவந்து விட்டீரே! அழிவு வேண்டாமென்றால், எதிர்க்கும் ஆற்றல் விக்ரமனிடம் இல்லையென்றால், சரணாகதி அடையட்டும்! வலுவிருந்

தால், போர்க் கோலத்துடன் களத்தில் சாவைச் சந்திக்கட்டும்! விக்ரமன் வீரனுமல்ல, கோழையுமல்ல! ஒரு முதியவரை அனுப்பிவைக்கும் முட்டாளாக இருக்கிறான்! இதோ பாரும்! மல்ல நாட்டுப் படைகள் குவிந்துவிட்டன. தாக்குதல் எப்போதென வீரர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றனர். நான் கையசைத்தால் போதும்—மல்ல நாட்டுப் படை புறப்படும், மலைநாட்டுக்குள் போர்ப்புயல் வீசும்!

அறி: போர் வெறியில் இருக்கிறீர்! படைத்தலைவரென்ற மமதையில் பேசுகிறீர்! படைகளை வைத்துக் கொண்டு மட்டும் வெற்றிப் பட்டயம் பெற முயலாதீர்! நீர் கையசைத்தால், படை திரண்டு வரும் என்கிறீர்! நான் கையசைத்தால், குன்றே உருண்டு விழும்!

படை: பெரியவரே! உம்மிடம் மாயாஜால இரகசியங்கள் இருப்பதாகச் சொன்னார்கள்! ஆனால் மலையைப் புரட்டுவேன், குன்றை உடைப்பேன் என்று மட்டும் பயமுறுத்தவேண்டாம்!

அறி: வேடிக்கையல்ல; வெளியில் வாரும்—காட்டுகிறேன்! உமது படை புயலெனப் புகும் என்றீரே! திருநாட்டு எல்லைக்குள் உமது படைகள் அடியெடுத்து வைத்த மறுகணம் குன்றுகள் பிளக்கும்! பாறைகள் சிதறிவிழும்! யானையின் காலால் தேய்க்கப்படும் எறும்புக் கூட்டத்தைப் போல், உமது வீரர்கள் நசுக்கப்படுவார்கள்! இதோ பாரும்!

[அறிவானந்தர் ஒரு துண்டை எடுத்து மூன்று முறை ஆட்டுகிறார். குணாளன் கவனித்துக் கொண்டிருக்கிறான்.]

அமை: குணாளா! அதோ உன் அப்பா சைகை கொடுத்துவிட்டார் தெரிகிறதா!

[என்றதும், குணாளன் நெருப்பை எடுத்து ஒரு திரியைப் பற்ற வைக்கிறான்; திரி எரிந்து கொண்டே போய் வெடிக்கிறது. பெரிய பாறையொன்று வெடித்து விழுகிறது.]

[மல்ல நாட்டுப் படைத்தலைவன் பீதியுடன் அதைப் பார்க்கிறான்.]

அறிவா: போர் மூண்டால், உன் படைகள் சிதறி, இருக்குமிடந் தெரியாமல் அழிந்து போகும்! இதைவிடப் பலமான அறிவுச் சக்திகளை நான் அடக்கி வைத்திருக்கிறேன்! சண்டையா, சமாதானமா? நீயே முடிவு செய்துகொள்; நான் போகிறேன்!

[வந்த வழியே நடக்கத் தொடங்குகிறார். வீரர்கள் பயந்து எட்ட நின்று வழிவிடுகின்றனர்]

காட்சி—46

[விக்ரமன், குணாளன், அருளானந்தர் ஆகியோர் காத்துக் கொண்டிருக்கின்றனர். அறிவானந்தர் வந்து சேர்கிறார்.

அருளா: அதோ! மல்ல நாட்டுப் போர்க்கொடி தாழ்ந்து விட்டது! சமாதானக் கொடி உயர்கிறது!

குணா: அப்பாடா! சண்டை நின்றுவிட்டது.

[விக்ரமன் உடைந்துபோன பாறைகளையும், அறிவானந்தரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுத் திரும்புகிறான். அறிவானந்தர் புன்னகையுடன் பேச அருகில்வந்தும் ஏதும் பேசாமல் அருளானந்தருடன் ஒரு கோச் வண்டியில் ஏறிக் கொள்கிறான். அறிவானந்தர், குணாளன் இன்னொரு வண்டியில் ஏறிக் கொள்கின்றனர்.]

காட்சி—47

[மக்கள் கூட்டம் ஆரவாரத்துடன் அறிவானந்தரை வரவேற்க வருகிறது.]

மலர்கள் தூவுகின்றனர்.

மாலைகள் போடுகின்றனர்.

மலைநாடு வாழ்க!

அறிவானந்தர் வாழ்க!

நாட்டைக் காப்பாற்றிய நல்லவர் வாழ்க!

[என்று வாழ்த்தொலி எழுப்புகின்றனர். முதலில் செல்லும் வண்டியில் விக்ரமனும் அருளானந்தரும் இருக்கின்றனர். விக்ரமனுக்கு ஒருவன் மாலை போடுகிறான். விக்ரமன் கோபத்துடன் மாலையைக் கழற்றி எறிந்துவிட்டு, ''வேகமாக ஓட்டு!'' என்று சத்தமிடுகிறான்; வண்டி வேகமாகப் போகிறது.]

காட்சி—48

[அறிவானந்தரின் மாளிகை. அறிவானந்தருக்குப் போடப்பட்ட ஏராளமான மலர் மாலைகள் அங்கு குவிந்து கிடக்கின்றன.]

குணா: மக்களெல்லாம் தெருக்களில் வந்து நிறைந்துவிட்டார்கள்! தள்ளிக் கொண்டு வருவதற்குள் போதுமென்றாகிவிட்டது!

அறி: இன்று ஆரவாரித்த அதே மக்கள்தான், அன்று கல்லை வீசி துரோகியெனத் தூற்றினார்கள் குணாளா! அதைப்பற்றி அதிகம் நாம் பொருட்படுத்தக்கூடாது!

குணா: முதலில் மக்கள் உங்களைத் தவறாக நினைத்தார்கள்! சண்டையை நிறுத்தி சமாதானத்தை நிலவச் செய்ததும், பழைய மதிப்புடன் பாராட்டுகிறார்கள்!

அறி: குணாளா! நாம் விரைவில் இந்த இடத்தை விட்டுப் பழைய மண்குடிசைக்குப் போக வேண்டியதுதான்!

திரு: மறுபடியும் விக்ரமனிடமிருந்து தொல்லை வருமென்று நினைக்கிறீர்களா அப்பா!

அறி: இராஜ உபசாரமும் ராஜ தண்டனையும் தேவையில்லை. எங்கே திருமதி—மணிவண்ணன்?

[என்றதும், திருமதி, குணாளன் ஆகியோரது பொலிந்த முகம், குன்றிப் போகிறது. திருமதி ஏக்கத்துடன் விம்மத் தொடங்குகிறாள்.]

அறி: என்ன திருமதி! ஏன்? விபரீதம் ஏதாவது நடந்துவிட்டதா?

குணா: (தலை குனிந்தபடி) இல்லை அப்பா! விபரீதம் இல்லை! நான்தான் அவனைத் துரத்திவிட்டேன்.

அறி: அட முட்டாளே! ஆராய்ச்சித் துறையில் அவன் எவ்வளவு முன்னேறி இருந்தான் தெரியுமா? துரத்திவிடும் அளவுக்கு என்ன தவறு செய்தான்? திருமதி அவனைத் துரத்த எப்படி அனுமதித்தாள்?

குணா: தவறேதும் செய்யவில்லை அப்பா! தவறு செய்தவன் நான்தான்! தாங்கள் பிடிவாதமாகப் போருக்கு உதவி செய்ய முடியாது என்றதும், நீங்கள் எதிரிகளுக்குச் சாதகமாக இருக்கிறீர்கள் என்றும் எண்ணிவிட்டேன்! நாசப் பொடியை விக்ரமனிடம் கொடுத்துவிட முடிவு செய்தேன். மணிவண்ணன் மறுத்தான்! மல்ல நாட்டு ஒற்றன் நீ என்று தூற்றினேன்! மனம் பொறாமல் குமுறி அழுதான்...

அறி: அடப்பாவி! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாய்! என் இலட்சியங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டதற்காக அவனுக்குத் தண்டனையா? விக்ரமனைவிட கொடியவனடா நீ! குணாளா, கொடியவன் நீ.

குணா: உண்மைதான் அப்பா! மணிவண்ணனுக்குக் கொடுமைதான் இழைத்துவிட்டேன்!

[திருமதி தேம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து]

அறி: அழாதே திருமதி! எங்கிருந்தாலும் அவனைத் தேடிப் பிடித்து அழைத்து வருகிறேன்.

குணா: நான் மணிவண்ணனுக்குக் கொடுமை செய்தேன். ஆனால் அப்பா! யாரோ நமக்கு மிகப் பெரியதொரு கொடுமையைச் செய்திருக்கிறார்கள்.

அறி: என்ன உளறுகிறாய் குணாளா?

குணா: உளறவில்லை அப்பா, உண்மையைச் சொல்கிறேன்!

அறி: என்ன அந்தப் பெரிய உண்மை?

குணா: நம்முடைய ஆராய்ச்சிக் குறிப்பேட்டைக் காணோம்!

அறி: (பதறியபடி) குறிப்பேட்டையே காணோமா? (தனக்குள் யோசித்தபடி) அன்று, நாசப்பொடி செய்யும் குறிப்பு மட்டும் காணமற்போனது! இன்று சுவடி முழுவதையும் காணோம்! யார் இதனைச் செய்திருக்க முடியும்?

[என்று நினைத்துக் கொண்டே, தான் அரண் மனைக்குச் செல்லுமுன், குறிப்பேட்டை வைத்த இடத்தில் சென்று, அதனைத் தேடுகிறார். அது, அவர் வைத்த இடத்திலேயே இருக்கக் கண்டு மகிழ்ந்தவராய்...]

அறி: குறிப்பேடு இருக்கிறதே குணாளா!

[எடுத்துக்கொண்டு அவர்கள் இருக்குமிடத்துக்கு வருகிறார்.]

குணா: (மகிழ்வோடு) எங்கே அப்பா இருந்தது?

அறி: நான் வைத்த இடத்தில்தான் இருந்தது.

குணா: நீங்கள் வைத்த இடத்திலா? அப்படியானால் நீங்கள் இதை எடுத்தீர்களா அப்பா?

அறி: ஆம், குணாளா! அரண்மனைக்குச் சென்றஅன்று அதனை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்!

குணா: நான் பயந்தே போய்விட்டேன் அப்பா! சதி காரர்கள் நம் அறிவாலயத்துக்குள்ளேயே புகுந்து விட்டார் களோ என்று அஞ்சினேன்!

அறி: இதுபற்றி அப்போதே நீ என்னிடம் கேட்டிருக் கலாமே!

குணா: கேட்டிருக்கலாம்! சரியான மனநிலையில் நீங் கள் இல்லையேயென்று...

அறி: பைத்தியக்காரப் பிள்ளை நீ!

குணா: மன்னித்து விடுங்கள் அப்பா! உங்கள் மீதே கூட நான் சந்தேகப்பட்டேன்! இவ்வளவு தூரம் கேட்டும் திருநாட்டுக்கு நீங்கள் உதவி தரமுடியாது என்றதும், மல்ல நாட்டோடு உங்களையும் இணைத்து...

அறி: (சிரித்துக் கொண்டு) ஊரே அப்படிச் சொல்லி விட்ட பிறகு, நீ சொல்ல நினைத்ததில் நான் குறை காண முடியுமா குணாளா?

குணா: மாதவன், மணிவண்ணன்...

அறி: எண்ணத்தில் வந்த எல்லாரிடமும் உன் சந்தேகம் பாய்ந்திருக்குமே! குணாளா, தீர்மானமாக ஒன்றில் தெளிவு பெறும்வரை, யார்மீதும் களங்கம் காண முயலக் கூடாது! உனக்குத் தெரியுமா, குணாளா? இந்தக் குறிப் பேட்டில் சில பகுதிகள் உண்மையிலேயே களவு போயிருக்கின்றன. யார் யார் இப்படிச் செய்திருக்க முடியும் என்று எண்ணிப் பார்த்தேன்! மறுகணமே, சிறைவாசம் கிடைத்தது.

குணா: (திடுக்கிட்டு) என்ன சொல்கிறீர்கள் அப்பா! சில பகுதிகள் திருட்டுப் போயுள்ளனவா?

அறி: (குறிப்பேட்டைக் கொடுத்து) ஆமாம், குணாளா! நாசப்பொடி தயாரிக்கும் குறிப்புக்களைக் காணோம்!

குணா: (வாங்கிப் பார்த்துவிட்டு) யாருடைய வேலையாக இருக்கும் அப்பா?

[என்கிறபோது மணிவண்ணன் வருகிறான்.]

மணி: (வந்துகொண்டே) நான் சொல்கிறேன்—நாசப்பொடி செய்யும் குறிப்பேடு மட்டுமல்ல, நாசப்பொடியும் கூட களவுபோய் இருக்கிறது; தீப்பொருளும் திருட்டுப்போயிருக்கிறது.

அறி: வா, மணிவண்ணா! நாசப் பொடியும், தீப் பொருளுமா?

குணா: கோபம் குறைந்துவிட்டதா மணிவண்ணா! உன் இலட்சியம்தான் வெற்றி கண்டது என்று தெரியுமா?

அறி: எனக்குத் தெரியும் குணாளா, மணிவண்ணனைப் பற்றி!

மணி: ஐயா! திருடியவனும், திருடுவதற்குக் காரணமாயிருந்தவளும், இந்த உலகத்தை விட்டேபோய்விட்டார்கள்!

குணா: என்ன! கொலை செய்துவிட்டாயா மணிவண்ணா!

மணி: (சிரித்துக் கொண்டே) குற்றவாளிகள் எந்த வடிவத்திலாவது தண்டிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். நீதி தூங்கிப் போய் விட்டால், உலகம் ஒழிந்துபோக வேண்டியதுதானே!

அறி: மணிவண்ணா! திருடியவர்கள் யார் என்கிறாய் நீ?

மணி: மாதவன் திருடினானாம்! மாலதி அதற்குத் தூண்டினாளாம்!

குணா: என்ன, மாதவனா! என்ன?

அறி: பைத்யக்காரன்!

மணி: மாதவனுக்கும், மாலதிக்கும் அந்தத் திருட்டு காரணமாக மனவேறுபாடு ஏற்பட்டு, மாலதி, மாதவன் மீதே நாசப்பொடியைத் தூவி விட்டாளாம். பாவம்! அந்த ஆத்திரத்தில் அவன், அவளைக் கொலை செய்துவிட்டானாம்!

அறி: நம் நாசப்பொடி இருவரது சாவுக்குக் காரணமாயிருக்கிறது. மணிவண்ணா! மாதவனுக்கு மாற்றுப்பொடி போட்டாயா?

மணி: மன்னிக்கவேண்டும்! எவ்வளவோ முயன்றேன்; முடியவில்லை.

குணா: மணிவண்ணனுக்குத்தான் கோபம் வந்துவிட்டதே அப்பா. உடனே இங்கு வந்து மாற்றுப் பொடி எடுத்துக் கொண்டால் மதிப்புக் குறைந்து விடாதா?

திரு: பின்னென்ன! நீங்கள் போ என்றதும் போகவேண்டும், வா என்றதும் வரவேண்டுமோ?

அறி: சரி சரி... இதற்காக நீங்கள் இன்னொரு போரை ஆரம்பித்து விடாதீர்கள்

[மணிவண்ணன் கிழித்தெடுக்கப்பட்ட குறிப்புக்களைக் கொடுத்து...]

மணி: நான் அப்போது போகாமலிருந்திருந்தால் அந்த நாசப்பொடி, விக்ரமன் கையில் சேர்ந்திருக்கக் கூடும். தெரியுமா?

குணா: குறும்புக்காரன் நீ. மணிவண்ணா!

திரு: அண்ணா, பின்னே உங்களைப்போல் இருக்க வேண்டுமா?

குணா: அவனைச் சொன்னால், திருமதிக்கு வருகிற கோபத்தைப் பாருங்களப்பா!

அறி: இருக்காதா பின்னே! அவளுடைய 'அவர்'டா அவன்! மறுபடியும் கோபம் வருவதற்குள் காலுக்கு விலங்கு போட்டுவிட வேண்டும்!

[என்று குறும்பாகப் பார்க்கிறார். மணிவண்ண னும் குறும்பாக அவளைப் பார்க்கிறான். அவள் தலைகுனிகிறாள்.]

காட்சி—49

[ஆய்வுக் கூடத்தின் ஒரு பகுதியில் மணமேடை அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மணக்கோலத்தில் மணிவண்ணனும், திருமதியும் அமர்ந்திருக்கிறார் கள். மங்கல வாத்தியங்கள் முழங்கிக் கொண்டி ருக்கின்றன. அறிவானந்தர், மணமக்களுக்கு மாலைகள் எடுத்துக் கொடுக்கிறார். மாலை அணிந்துகொண்டு, மணமக்கள், அறிவானந்தரின் கால்களில் விழுந்து வணங்குகின்றனர். அவர் களை ஆசீர்வதித்து தூக்கி நிறுத்தி—]

அறி: இன்றுபோல் என்றும் இன்பம் நிறைந்திருக்கு மாறு நீங்கள் இல்லறத்தை நடத்திச் செல்ல வேண்டும். வாழ்க்கையினைப் பூந்தோட்ட மென்பவரும் இருக்கிறார் கள்; முட்புதர் என்பவர்களும் இருக்கிறார்கள். அவரவரும் தத்தம் அனுபவங்களைக் கொண்டுதான் அப்படிச் சொல்லி இருக்கவேண்டும். இந்த வேறுபாடுகள் எல்லாம் மிருகங்களுக் கிடையே இல்லையென்று நாம் உணர்ந்து கொள்ள வேண் டும். பிரச்னைகளை உருவாக்கவோ அல்லது பிரச்னைகளுக்கு ஈடுகொடுக்கவோ வேண்டிய நிலைமைகள் மிருகங்களுக்கில்லை. இதனால் மனிதர்களைவிட மிருகங்கள் சிறந்தவையாகத் தோன்றுகின்றன. ஏற்றிப் போற்றிய வாய்களே தூற்றி இகழ

வும் முடியும் என்பது மனிதர்களது நாவிற்கிருக்கும் சிறப்புக்களில் ஒன்று. மிருகங்கள் அப்படியில்லை. பேராசை கிடையாது. பசித்தால் புசிக்கின்றன, காலம் வந்தால் சாகின்றன. உணவுக்காகப் போராட்டங்கள் இல்லை; காதலுக்காகப் போர்க் களங்களைச் சந்திப்பதில்லை. மனித சமுதாயம், தன் மாண்பினை இழந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி, மனிதர்கள் எல்லாம் கூடிப் பேசி, ஒரு முடிவெடுத்தால் நல்லது. அப்போதும் அந்த மனிதர்களால் நல்லதோர் முடிவை நாட்டுக்குத் தரமுடியுமோ என்னவோ! மதிப்பு என்பது நாளும், எந்தவொருவரிடமிருந்தும் கேட்டுப் பெறுவதல்ல; தானாக வந்தடைவது அது. தகுதியால், மற்றவர்களால் வழங்கப்படுவது அது. கேட்டுப் பெறுபவர்களாக மக்கள் கூட்டம் மாறிக் கொண்டிருக்கிற நிலைமை மாற்றப்பட வேண்டும். ஆழ்கடலில் காற்றுக்கும் புயலுக்கும் இடையே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமையோடுகூட வாழ்க்கையினை உவமித்திருக்கிறார்கள். காற்றடிக்கும், புயல் வீசும் என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, எச்சரிக்கை நடவடிக்கையால் மீகாமி கடலில், கலம் செலுத்தும்போது, எதிர்ப்படும் பேராபத்துக்களைச் சமாளித்து விடுவான். பூந்தோட்டமாகக் கருதினாலும், புதர்க்காடாகக் கருதினாலும், அமைத்துக் கொள்கிற வழி முறைகளையொட்டி வாழ்க்கை அமையுமென்று சொல்லிவிட வேண்டியது என் கடமை! மரத்தை வெட்டிவிட்டு, களைத்துப் போன நிலையில், இன்னோர் மரத்தடியிலிருந்து—அந்த மரத்தின் நிழலிலிருந்து மனிதன் ஓய்வெடுக்கிறான். களைப்பாறுகிறான்! நிழல் தரும் மரம், அவனைப் புறக்கணிப்பதில்லை, நம் இனத்தை அழித்தவன் ஆயிற்றே என்று அவனுக்கு நிழல் தர மறுத்து விடுவதில்லை. ஓய்வெடுத்த பின், களைப்பு நீங்கிய பின் நிழல் கொடுத்த மரத்தையேகூட மனிதன் வெட்டிச் சாய்ப்பான்! இதுபோல் கேடு தந்தவர்கட்குக்கூட, கேடு நினையாமல் நிழல் கொடுக்கும் மரம்போல் நீங்கள் பல்லாண்டுக் காலம் வளம் பல பெற்று வாழ வேண்டும்!

[என்று வாழ்த்துகிறார். காதலர்கள் தனித்து விடப்படுகின்றனர்.]

காட்சி—50

[திருநாட்டு அரண்மனை. ஆத்திரத்தோடு விக்கிரமன், அறிவானந்தரை விசாரணை நடத்துகிறான்.]

விக்ர: அறிவானந்தரே! அறிவியல் அறிஞர் என்று வாயாரப் புகழ்ந்தேன். ஆராய்ச்சி வல்லுநர் என்று அகமகிழ்ந்தேன்! அரை நொடியில், அந்த எண்ணங்கள் தவறானவை என்றாக்கிவிட்டீர். திருநாட்டுக்கு இவ்வளவு பெரிய துரோகத்தைச் செய்ய எப்படி ஐயா உம்மால் முடிந்தது?

அறி: பாதுகாவலரே! பதட்டத்துடன் பேசுகிறீர். பக்குவமறியாத குழந்தையைப்போல் கேள்வி கேட்கிறீர். பயங்கரமான குற்றம் சுமத்துகிறீர். குற்றச்சாட்டு என்ன? அதைக் கூறுங்கள்.

விக்ர: நீர் திருநாட்டுக்குச் செய்த துரோகம் என்னவென்று, நான் கூறித்தான் அறிந்து கொள்ள வேண்டுமா? நெஞ்சு நிரம்பிய வஞ்சம், உனது நினைவுக்குக் கொண்டுவர மறுக்கிறதா?

அறி: விக்கிரமா! உயர்ந்த இடத்தில் இருப்பதால் எதையும் பேசலாம், உயர்ந்தவர் பார்வையில் இருப்பதால் எதையும் செய்யலாம் என்ற இழிவான எண்ணம், உன்னை இப்படிப் பேசவைக்கிறதுபோலும்! துரோகி என்றும், வஞ்சகன் என்றும் பேசுவதைப் பொறுத்துக் கொள்ளும் அளவுக்கு எனக்கு மனப்பக்குவம் இல்லை! கோபம் கொடிது என்றாலும், கோபமே கொள்ளாமலிருப்பதும் கொடிதாகிவிடக் கூடும்! கூறு, குற்றம் என்ன என்பதை!

விக்ர: ஓ, செவி குளிரக் கேட்கவேண்டுமோ அந்தச் சிந்து பைரவியை! கேளுங்கள். நீர் மல்ல நாட்டு ஒற்றன் என்று நம்பகமான இடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. மல்ல நாட்டானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவன் படைகளைத் திருப்பி அனுப்பினீர் என்ற உண்மை கிடைத்திருக்கிறது. மல்ல நாட்டுக்காகவே, நீர் உமது ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

அதன் காரணமாகவே, ஆராய்ச்சி இரகசியங்களையும் ஆராய்ச்சிப் பொருள்களையும் திருநாட்டுக்குத் தர மறுத்து வந்திருக்கிறீர்!

அறி: (மிகுந்த ஆத்திரத்தோடு) விக்ரமா! தடித்த உன் வார்த்தைக் கோர்வைகளால் தவறு செய்து கொண்டிருக்கிறாய்!

விக்ர: உண்மைதான்! தரப்பட்ட தகுதிகள் அனைத்தும் தவறானவை என்பதற்குச் சான்றாக—அறிவானந்தரே, உன் மகளையே மல்ல நாட்டான் ஒருவனுக்கு மணமுடித்துத் தந்திருக்கிறீர்!

அறி: (உரத்த குரலில்) விக்ரமா! அது என் சொந்த விஷயம்!

விக்ர: சொந்த விஷயம்தான்! மல்ல நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும் சொந்த விஷயம்தான்! ஆராய்ச்சிகளை நடத்தி வருவதும் சொந்த விஷயம்தான்!

அறி: விக்ரமா! மீண்டும் மீண்டும் என்னைத் 'துரோகி! வஞ்சகன்!' என்று கூறிக்கூறி, உண்மையாக்கிவிடப் பார்க்கிறாய். உன் குற்றச் சாட்டுகளை மறுக்கிறேன். ஆதாரம் காட்டிப் பேசுவது அரசியலார் கடமை!

விக்ர: நான் சொல்லுகிறேன்! நீர் திருநாட்டுக்குத் துரோகி! மல்ல நாட்டு ஒற்றன்! மறுக்கிறீரா? மறுப்பதற்கும் அல்லவென்று நிரூபித்துக் கொள்வதற்கும் உமக்குச் சந்தர்ப்பம் தருகிறேன்! கூறுங்கள் உமது ஆராய்ச்சி இரகசியத்தை? திருநாடு தெரிந்து கொள்ளும்படிக் கூறுங்கள்!

அறி: விக்ரமா! பகைவருக்கும் அருள் பாலிக்க வேண்டும் என்ற பண்பினைப் பரப்பப் பாடுபடுபவன் நான். குற்றச் சாட்டுகளால் என் குணத்தை மாற்ற முயல்கிறாய். 'துரோகி! வஞ்சகன்! மோசக்காரன்!' என்ற வரிசையில் உனக்குத் தெரிந்த வார்த்தைகளை அடுக்கிக் காட்டு! பொறுத்துக் கொள்ள முயல்கிறேன். இரகசியத்தை மட்டும் சொல்லமாட்டேன்!

விக்ர: நாசப்பொடியின் இரகசியத்தைச் சொல்லாத வரையில் நீர் தேசத் துரோகிதான்! மல்ல நாட்டு ஒற்றர் தான்! இந்தக் குற்றத்துக்கான தண்டனை என்ன தெரியுமா?

அறி: அறிவேன் விக்ரமா, அறிவேன்! மரண தண்டனையைவிடக் கொடுமையான ஒன்றை உன்னால் கொடுக்க முடியாது என்பதையும் அறிவேன்! ஆணவம் மிகுந்த உன் அகந்தை ஆட்சியில் அணு அணுவாகச் சாவதைவிட, விக்ரமா, மரண தண்டனையே மேல்! நிறைவேற்றிக் கொள், உன் ஆசையை!

விக்ர: (கைகளைத் தட்டி) யாரங்கே?

[வீரர்கள் இருவர் வருகின்றனர்.]

இந்த தேசத் துரோகியை இழுத்துச் சென்று பாதாளச் சிறையில் பூட்டுங்கள். பட்டினிபோட்டு, இவன் கொட்டத்தைக் குறையுங்கள்! உம், இழுத்துச் செல்லுங்கள்!

[என்றதும் கெம்பீரமாக நின்று விக்ரமனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, வீரர்களுக்கு முன்னே நடக்கிறார்; வீரர்கள் அவரைத் தொடர்கின்றனர்.]

## காட்சி—51

[குணாளன், ஆய்வுக் கூடத்தில் அமர்ந்து குறிப்புக்களைப் புரட்டிக் கொண்டிருக்கிறான். அருகே சோதனைகளில் ஈடுபட்டிருக்கிறான் மணிவண்ணன். மணிவண்ணனுக்கு உதவியாக அவன் கேட்கும் பொருட்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டும், விளக்கமளித்துக் கொண்டும் இருக்கிறாள் திருமதி. மணிவண்ணன் பல்வேறுபட்ட சோதனைகளை ஒன்றன்பின் ஒன்றாகவும், ஒன்றோடு ஒன்றாகவும், ஒன்றில் ஒன்றைக் கலந்தும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு குப்பி

யில் சில திரவங்களையும், சில திடப் பொருள்களையும் கலந்து, இன்னொரு குப்பியில் போட்டு வேறு சில திரவங்களைக் கலக்குகிறான். குப் பென்று பற்றி எரியத் தொடங்குகிறது. திருமதி பயந்து நடுங்குகிறாள்; குணாளன் எச்சரிக்கை செய்து, ஒரு திரவத்தின் பெயரைப் படித்துச் காட்டி, ஒரு அளவையும் கூறி, அதில் கலக்கும் படிக் கூறுகிறான். அவ்வாறே செய்கிறான் மணி வண்ணன். தீயடங்கி, குப்பியிலிருந்து புகையத் தொடங்கி, சில வினாடிகளில் அதுவும் மறை கிறது. குப்பியின் அடியில் ஒருவகை வெள்ளிய தூள் தேங்கி நிற்கிறது. திரவங்கள் ஏதுமில்லை. அதைக் கண்டதும் சந்தோஷ ஆரவாரத்தால் குதூகலித்து...

திரு: பசிப் பிணியைப் போக்கும் மருந்து என்று அப்பா கூறி வந்தது...

குணா: இதைத்தான் திருமதி, இதைத்தான்! இதைக் கண்டுபிடிக்க எடுத்துக் கொண்ட முயற்சியில்தான் இரணப் பொடி கண்டுபிடிக்கப்பட்டது; தீப்பொருள் கண்டு பிடிக்கப் பட்டது!

திரு: அப்பாவிடம் தெரிவிக்க வேண்டுமே அண்ணா! காலையில் அரண்மனைக்குப் போனவரை, இதுவரையில் காணோமே!

குணா: எல்லோருமே போய் இந்த வெற்றி பற்றி அங் கேயே கூறுவோம். திருமதி! மணிவண்ணா, புறப்படுங்கள்!

[மூவரும் புறப்படுகின்றனர். அப்போது ஒருவன் அலறப் புடைத்துக் கொண்டு அங்கு வந்து நின்று]

வந்தவன்: (பதட்டத்துடன்) மோசம்! கொலை! படு கொலை!

[அலறி அழத் தொடங்குகிறான்.]

குணா: என்ன (பரபரப்படைந்து) என்ன? யார் நீ? என்ன உளறுகிறாய்?

வந்தவன்: ஐயோ! அறிவானந்தரைக் கொன்றுவிட்டான் விக்ரமன்! கொலை செய்துவிட்டான் அந்தப் பாவி!

[மணிவண்ணன் ஆத்திரமடைந்து அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்து]

மணி: என்ன பிதற்றுகிறாய்! யார் நீ?

வந்த: பிதற்றவில்லை ஐயா! அரண்மனையில் அறிவானந்தரைக் கைது செய்து, பாதாளச் சிறையிலடைத்துப் பட்டினி போடும்படிக் கட்டளையிட்டான் விக்ரமன்! அதுகூட அவனுக்குப் பொறுக்கவில்லை; சிறைக்கூடத்துக்குப் போய் வெட்டிக் கொன்றுவிட்டான்! நான் கண்ணாலேயே பார்த்தேன்! சிறைக் காவலன் ஐயா நான்!

[என்றதும் திருமதி ''அப்பா!'' என்று அலறி மூர்ச்சித்து விழுகிறாள். குணாளன் மூச்சற்று, திகைத்து நிற்கிறான்.]

மணி: முட்டாளே! எவ்வளவு சந்தோஷமான செய்தியுடன் இருந்தோம்! சாவோலையுடன் வந்திருக்கிறாயே! அறிவானந்தர் வெற்றி பெற்றுவிட்டாரடா, வெற்றி பெற்றுவிட்டார்! அறிவானந்தரது பசிப்பிணி மருத்துவம் வெற்றி பெற்றுவிட்டது! இந்த இன்பச் செய்தியை, அவர் செவியில் சேர்ப்பதற்கு முன், எங்களைக் கொன்று போட்டுவிட்டாயே, கொடியவனே!

[என்று மீண்டும் அவனை அடிக்கப் போகிறான்; அதற்குள் நிதானம் வந்தவனாக...]

நீ என்ன செய்வாய்! ஓலை கொண்டு வந்தவன் நீ. உண்மையைச் சொல், அறிவானந்தர் கொலை செய்யப்பட்டதாக விக்ரமன் அறிவிக்கச் சொன்னானா? அறிவிக்க வந்தாயா நீ!

[என்று அவன் தோள்களைப் பிடித்து உலுக்கு கிறான். அவன் பயந்து நடுங்குகிறான். அதற்குள் குணாளன் வெறி பிடித்தவனைப் போல் ஓடத் தொடங்குகிறான். மணிவண்ணன் அவனைத் தொடர்ந்து ''குணாளா, குணாளா!'' என் றழைத்துக் கொண்டே ஓடுகிறான்.]

காட்சி—52

தெரு வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்று அறிவானந் தர் விக்ரமனால் கொலை செய்யப்பட்டுவிட்ட செய்தியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

செய்தியைக் கேட்ட மக்கள் ஆத்திரமடைந்து அரண் மனைப்பக்கம் ஓடுகிறார்கள். தலைநகரே திரண்டு அரண் மனையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

திருமுடியாரின் போலிப் புரட்டைப் பொசுக்கிக் காட் டிய புகழ் பேசப்படுகிறது. மல்ல நாட்டுப் போரை கத்தி யின்றி, ரத்தமின்றி முடித்துக் கொடுத்த பேராற்றல் பற்றிப் பேசப்படுகிறது.

நாசப் பொடியை, விக்ரமனுக்குக் கொடுக்க மறுத்த செய்திகேட்டு அவரைத் துரோகியெனத் தூற்றியவர்கள் எல் லாம், போர் ஏற்படாமல் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி யால், உள்ளம் குன்றியவர்களானாலும், கொலைச் செய்தி கேட்டு, ஆத்திரத்தோடு அரண்மனைப் பக்கம் ஓடுகின்றனர்.

குணாளன் ஓடிவருகிறான். பின்னால் மணிவண்ணன் வருகிறான். அரண்மனைக்கருகில், வீரன் ஒருவன் உடை வாளுடன் வந்துகொண்டிருக்கிறான். அவனைக் கண்ட குணா ளன், அவனை ஒரே அடியில் வீழ்த்தி விட்டு, உடைவாளைப் பறித்துக் கொண்டு அரண்மனைக்குள் நுழைகிறான். கூட்ட மும் வாயிலில் வந்து நிற்கிறது.

உடை வாளுடன் உள்ளே நுழைந்த குணாளனைத் தடுக்கிறார்கள் சில வீரர்கள். எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டு உள்ளே நுழைகிறான் குணாளன். மன்னன் குமாரவேலனுடன் பேசிக் கொண்டிருக்கிறான் விக்ரமன்.

விக்: மன்னா! மருதூரானின் அச்சுறுத்தலைச் சமாளிக்கவே அறிவானந்தரிடம் மீண்டும் நாசப் பொடியைக் கேட்டேன். மறுத்துவிட்டார். மறுத்தது மட்டுமல்ல, திருநாட்டையே இழிவு படுத்திப் பேசத் தொடங்கிவிட்டார். பெற்ற தாயைவிட, பிறந்த பொன்னாட்டைப் பெரிதெனப் பேணுபவன் நான். பொறுக்க முடியவில்லை. ஆத்திரத்தால் அவர் மீது கூர்வாளைப் பாய்ச்சிவிட்டேன்.

குமா: கொலை செய்து விட்டேன்; அவர் குடியைக் கெடுத்துவிட்டேன் என்று கூறுங்கள் பாதுகாவலரே!

விக்: மன்னர் கூறுவது...

குமா: விக்ரமருக்கு மமதை அளவு கடந்து விட்டதென்று!

[வீரன் ஒருவன் ஓடிவந்து]

வீரன்: (மன்னனை வணங்கி) அரசே! மக்கள் கூட்டம் அரண்மனை வாயிலை அடைத்துக் கொண்டு நிற்கிறது! குணாளனும் உடைவாளுடன் வந்து கொண்டிருக்கிறார். 'விக்ரமன் ஒழிக! 'அறிவானந்தரைக் கொலை செய்த கொடியவனைக் கூறுபோடுவோம்' என்று குரல் கொடுக்கிறார்கள்.

விக்ர: வேழப் படையைத் திறந்துவிட்டு, விரட்டச் சொல், அந்த வீணர்களை! போ!

[குணாளன் வந்து நின்று]

குணா: அது தேவையில்லை விக்ரமரே! வேழமென வந்திருக்கிறேன் நான். என் தந்தை ஏன் கொலை செய்யப் பட்டார்? கூறுங்கள் முதலில்!

விக்ர: (ஆணவத்தோடு) தேசத் துரோகிகளுக்கு மரண தண்டனை அளிப்பது ராஜநீதி!

குணா: இழிவின் தலைமகனே! என்ன துரோகம் செய்தார் என் தந்தை?

விக்: நாட்டைக் காட்டிக் கொடுத்தார்.

குணா: துண்டித்து விடுவேன் உன் நாவை. தூர்த்தனே! கனவிலும் துரோகம் பற்றி கருதாதவரடா என் தந்தை!

விக்: துரோகியின் மகனுக்கு நாவும் நீளம்தான்!

[என்று தன் உடைவாளை உருவிக் கொண்டு, 'முட்டாளே! அப்பன் சென்ற இடத்துக்கே அனுப்புகிறேன் உன்னையும்!' என்று வாளை ஓங்குகிறான்.]

குமார: தளபதியாரே! நிறுத்துங்கள்!

விக்: இல்லை மன்னா! அப்பனுக்கு ஆதரவாக வரும் இவனும் ஒரு துரோகிதான். ஒழித்துவிட வேண்டியதுதான் இவனையும்!

குமா: விக்கிரமரே! விபரீதங்களை விளைவித்துக் கொண்டிருக்கிறீர். உமது விளையாட்டு திருநாட்டுக்குத் தீங்குண்டாக்கும்.

விக்: தீங்கல்ல மன்னா! திருவுண்டாக்கப் போகிறது பாருங்கள்!

[என்று வாளை ஓங்குகிறான், குணாளனைத் தாக்க. கூட்டம் உள்ளே நுழைந்து விடுகிறது. வெறி உணர்ச்சியில் வீழ்ந்துபட்டவனாகத் துடிக்கிறான் விக்ரமன். குணாளனும் அவனைத் தாக்க முனைகிறான். வாட்போர் புரிந்து கொண்டே, விக்ரமனைக் கூட்டத்தின் பக்கம் இழுத்துக் கொண்டு வந்துவிடுகிறான். கூட்டமும் விக்ரமனைத் தாக்குகிறது. நிலைகுலைந்து கீழே சாய்கிறான் விக்ரமன். கூட்டம் அவனைக் கொன்று போடுகிறது! கூட்டத்துக்குத் தலைமை வகிக்கிறான் மணிவண்ணன்]

குமார: பேரன்புக்குரிய குடிமக்களே! என் முன்னிலையி லேயே இவ்வளவு பெரிய கொடுமையைச் செய்துவிட்டீர்கள். அறிவானந்தர் கொலை செய்யப்பட்டது பற்றி நானும் வருத் தம்தான் கொள்கிறேன்...

[மணிவண்ணன் குறுக்கிட்டு]

மணி: அரசே! அநீதிக்கு இடம் கொடுத்துவிட்ட அற் பத்தனம், விக்ரமனை ஆக்கிரமித்துக் கொண்டது. அறிவின் ஆற்றலை, அழிவின் ஆற்றலோடு இணைத்துப் பார்த்து இறுமாப்புக் கொண்டான் விக்ரமன். அதன் விளைவு இது...

குமார: ஆனாலும்...

குணா: அக்ரமக்காரன் அழிக்கப்படுவதிலே, ஆனாலும் என்பதற்குப் பொருளில்லை மன்னா! ஆகவே என்று கூறி இருக்க வேண்டும்.

மணி: அரசே! அறிவானந்தரின் ஆராய்ச்சி வெற்றி கண்டது. இல்லாதார் ஏற்றம் பெறவும், வறட்சி வளமை காணவுமான நிலைமை இனி ஏற்படுத்த முடியும் என்ற இன்பச் செய்தியை அறிவானந்தருக்கு அறிவிக்க ஓடோடி வந்தோம்! அதற்குள்...

குமார: என்ன! ஆராய்ச்சி வெற்றி கண்டதா? கவலைக் கிடையே மகிழ்ச்சியடைகிறேன் குணாளா!

குணா: மகிழ வேண்டிய என் தந்தையை மதோன்மத் தன் கொலை செய்துவிட்டானே மன்னா!

குமார: உங்கள் வெற்றியின் மூலம் அறிவானந்தர் சாக மாட்டார். காலமெல்லாம் அவர் பெயர் நினைவில் நிற்கும்.

[என்றதும் மக்கள் கூட்டம்...]

''அறிவானந்தர் வாழ்க!
குமாரவேலர் வாழ்க!
குணாளன் வாழ்க!
மணிவண்ணன் வாழ்க!''

[என்று வாழ்த்தத் தொடங்குகிறது.]

குமார: உங்கள் வாழ்த்துக்களுக்கு நன்றி. திருநாட்டு அரசியலைத் தீய நோக்கத்துக்கு ஆக்கிக் கொண்ட தீயவனை வீழ்த்திவிட்டீர்கள்! அறிவானந்தரின் வெற்றி, இனி உங்களை நல்வழியில் நடத்திச் செல்லட்டும். அறிவே வலிமை மிக்கது என்பதை அகிலத்துக்கு எடுத்துக் காட்டிவிட்ட அறிவானந்தரின் அறிவே இனி திருநாட்டை ஆட்சி புரியட்டும்!

குணா: கூடாது மன்னா! உங்கள் குலம் செழிக்க எங்கள் ஆராய்ச்சி துணை நிற்கும்.

மணி: அழிவுச் சக்திக்கே இனி வேலை இல்லை அரசே! ஆக்க சக்தி இனி அரசோச்சும்.

குமார: பேரன்பு கொண்டு பேசுகிறீர்கள். பெரிதும் மகிழ்கிறேன். ஆனாலும் என் அருமை குடிமக்களே! எனக்கு அமைதி வேண்டும்; அரசியல் அவையில் அலைக்கழிக்கப் பட்ட என் நெஞ்சம் இனியும் இடம் தராது! குணாளனும் மணிவண்ணனும்...

[என்கிறபோது திருமதியும் அங்கு ஓடிவந்து நிற்கிறாள். விக்ரமன் வீழ்த்தப்பட்டு கிடப்பது கண்டு விரிந்த விழியுடன் பார்க்கிறாள். அரசரின் பேச்சு இன்பத் தேனாகப் பாய்கிறது, அவள் செவியில்]

இந்த நாட்டை இனி ஆட்சி புரியட்டும்!

[என்றதும் திருமதி உணர்ச்சி மிக்கவளாக]

திரு: குமாரவேலர் வாழ்க!

[என்று குரல் கொடுக்கிறாள். கூட்டம் அவளைத் திரும்பிப் பார்க்கிறது. அவள் நாணத்துடன் மணிவண்ணன் பக்கம் வந்து நின்று கொள்கிறாள்.]

குணா: கூடாது அரசே! நீங்கள் பதவி துறக்கக்கூடாது! மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்!

மணி: நாங்களும் அனுமதிக்கமாட்டோம்!

குமா: நல்லது! உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் திருநாட்டுக்குச் சேரட்டும்! இன்றுமுதல் திருநாட்டுக்கு என்று ஒரு மன்னன் இல்லை. மக்களே அரசர்கள். மக்களேஅமைச்சர்கள். மக்களது விருப்பு வெறுப்புக்களே இந்நாட்டு சட்டங்கள், திட்டங்கள்! குணாளரே, நீங்கள் அறிவானந்தரின் சார்பில் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்—பாதுகாவலராக!

*[என்றதும் ''குணாளன் வாழ்க'' என்ற குரல் விண் எட்டுகிறது]*

எப்போதும்போல் மணிவண்ணன் இன்னும் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடட்டும்!

*[என்றதும் ''மணிவண்ணன் வாழ்க'' என்ற வாழ்த்து எழுந்து அடங்குகிறது. திருமதி, குறும்புடன் பார்க்கிறாள் மணிவண்ணனை. மணிவண்ணனும், குணாளனும், திருமதியும் மன்னரை வணங்குகின்றனர்.]*

குமார: (கூட்டத்தைச் சுட்டிக் காட்டி) வணங்கப்பட வேண்டியவர்கள் மக்கள்! நாமெல்லாம் அவர்களை வணங்குவோம்! திருநாட்டின் ஒளியாக, இன்ப ஒளியாக இருப்பவர்கள் மக்கள்! நாடும், மக்களும் நாளெல்லாம் திளைக்கட்டும், அறிவானந்தரின் அறிவு ஒளியில்! இன்ப ஒளியில்!

*[கூட்டத்தை நோக்கி கைகூப்புகிறான் குமாரவேலன்]*

''குமாரவேலர் வாழ்க!''

*[என்ற குரல் விண் எட்டுகிறது. மக்கள் விழிகளில் ''இன்ப ஒளி'' பரவத் தொடங்குகிறது.]*

★

# செவ்வாழை
(சிறுகதைகள்)

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

மனிதன் மறைவான். ஆனால் மனிதருள் மாணிக்கமாகத் திகழும் மேதைகள் படைத்த இலக்கியம் என்றுமே மறைவதில்லை.

அது சாகாவரம் பெற்றது. வாழையடி வாழை யென வரும் திருக்கூட்டம் செய்யும் தவறைத் திருத்தும் பணியைத் தொடர்ந்து செய்துகொண் டிருக்கும் சக்தி அதற்குண்டு.

அமரர் அண்ணாவின் பொற்கால கதை இலக் கியமும் அத்தகையதே.

'செவ்வாழை' கதையோடு கைகோர்த்து வரும் ஒவ்வொரு கதையும் நாட்டுக்குத் திறவு கோல் போன்றது.

எனவே—

சமூகத்தில் நெறியோடு வாழக் கற்றுக் கொடுக் கும் அண்ணாவின் சிறுகதையாம் நறுங்கனியை நீங்களும் சுவையுங்கள்; மற்றவர்களையும் சுவைக் கச் செய்யுங்கள்.

**விலை ரூ. 5.90**

**பூம்புகார் பிரசுரம் பிரஸ்**
**63, பிராட்வே, சென்னை-1.**

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

XA:214
24



## பேரறிஞர் அண்ணா

''அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைக்க வைக்கக் கூடியது. பொதுமேடை வானில் முன்பு ஒளிர்ந்த மின்மினிகள், விண்மீன்கள், பிறைமதியங்கள் யாவும் ஒதுங்க, பேரொளி வீசிப் புதுப் பொழுது மலரச்செய்யும் ''வெங்கதிரவன்'' அண்ணா அவர்களே என்பதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவைகுன்றாது, எப்பொருள் பற்றியும் அறிவுப் பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதும் திறன் அவா தனியுரிமையே ஆகும். எழுத்துக்கு ஒரு நடை, மேடைப் பேச்சுக்கு ஒரு நடை, உரையாடலுக்கு ஒரு நடை என்பது அவரிடம் காண முடியாது. இருந்தால் இருப்பார்; எழுந்தால் எதிலும் ஒரே காளமேகந்தான்...''

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே, சென்னை-600 001.